




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:109 | 04-11-2025 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


**இன்றைய பஞ்சாங்கம்**

04.11.2025 ஐப்பசி 18
செவ்வாய் கிழமை

சூரிய உதயம் 6.04

திதி:
இன்று இரவு 9.42 வரை சதுர்த்தசி பின்பு பௌர்ணமி.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 1.02 வரை உத்திரட்டாதி பின்பு ரேவதி.

யோகம் :
இன்று மாலை 3.44 வரை வஜ்ரம் பின்பு சித்தி.

கரணம் :
இன்று காலை 10.46 வரை கரசை பின்பு இரவு 9.42 வரை வணிசை பின்பு பத்திரை.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று காலை 11.42 வரை பூரம் பின்பு உத்திரம்.

நல்ல நேரம்
காலை 7.45 – 8.45.
மாலை 4.45 – 5.45.
இராகு காலம்
பிற்பகல் 3.00 – 4.30.
எமகண்டம்
காலை 9.00 – 10.30.

குளிகை
பிற்பகல் 12.00 – 1.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# “தொழில்நுட்ப மாற்றத்தின் முன்னோடியாக திகழும் இந்தியா”: பிரதமர் மோடி பெருமிதம்

## தனியார் துறையிலும் ஆராய்ச்சி மேம்பாட்டை ஊக்குவிப்பதே நோக்கம்

புதுடில்லி, நவ.4:

இந்தியா இனி தொழில்நுட்பத்தின் நுகர்வோர் மட்டுமல்ல, தொழில்நுட்பம் மூலம் மாற்றத்தின் முன்னோடியாக மாறியுள்ளது என பிரதமர் மோடி தெரிவித்து உள்ளார்.

தனியார்த் துறையின் முதலீடுகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் ரூ. 1 லட்சம் கோடி மதிப்பிலான சிறப்புத் திட்ட நிதியையும் அவர் தொடங்கி வைத்தார்.

வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கிச் செல்வதற்காக, கொள்கை வகுப்பாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் உலகத் தலைவர்களை ஒரே தளத்திற்குக் கொண்டுவரும் முதல் எமர்ஜிங் சயின்ஸ் டெக்னாலஜி அன்ட் இன்னோவேஷன் மாநாட்டில் பிரதமர் மோடி இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையே இந்த ஆர்டிஐ நிதியத்தின் மைய அமைச்சகமாகச் செயல்படும். இந்த திட்டத்திற்கு 6 ஆண்டுகளில் மொத்தம் ரூ.1 லட்சம் கோடி



ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 20 ஆயிரம் கோடி நிதியாண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் பிரதமர் மோடி பேசியதாவது:

உலகளாவிய ஏஐ கட்டமைப்பை இந்தியா உருவாக்கி வருகிறது. கடந்த 1011 ஆண்டுகளில் இந்தியா தொலைநோக்கு பார்வையுடன் செயல்படுகிறது என்பது நிரூபணம் ஆகி உள்ளது. இந்தியா இனி தொழில்நுட்பத்தின் நுகர்வோர் மட்டுமல்ல, தொழில்நுட்பம் மூலம் மாற்றத்தின் முன்னோடியாக மாறியுள்ளது.

தொலைநோக்குப் பார்வை...

இந்தியாவில் நவீன புதுமை சுற்றுச்சூழல் அமைப்பு செழிக்கக்கூடிய வகையில் ஆராய்ச்சி செய்வதை எளிதாக்குவதில் தனது அரசு கவனம் செலுத்தி வருகிறது. இந்த தொலைநோக்கு பார்வையை அடைய, எங்கள் அரசு நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் கொள்முதல் கொள்கைகளில் குறிப்பிடத்தக்கச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழகங்கள் முழுவதும் ஆராய்ச்சி மற்றும் புதுமை களை மேம்படுத்துவதற்காக அறக்கட்டளையை நாங்கள் நிறுவியுள்ளோம். அறிவியல் கண்டுபிடிப்புகள் புதுமையை உள்ளடக்கியதாக மாறும் போது, சிறந்த சாதனைகளுக்கான அடித்தளம் அமைக்கப்படுகிறது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் துறையில் உலகளாவிய புதிய மாற்றத்தை நாங்கள் காண்கிறோம். மாற்றத்தின் வேகம் அதிவேகமானது. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப, உலகில் இன்று ஒரு பெரிய நாள். 21ம் நூற்றாண்டில், வளர்ந்து வரும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமைகள் காட்டுவதற்கு உலகம் முழுவதிலுமிருந்து நிபுணர்கள் ஒன்றிணைய வேண்டிய அவசியம் இருந்தது.

இந்தத் தேவை ஒரு யோசனைக்கு வழிவகுத்தது. இந்தக் யோசனை தான் இந்த மாநாட்டினை நடத்த வழி வகுத்தது. கொரோனா காலத்தில் கடினமாக சூழலில் ஒரு உள்நாட்டு தடுப்பூசியை நாங்கள் உருவாக்கினோம். இன்று டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பைக் கொண்டிருப்பதால் இது சாத்தியமானது. இந்த ரூ. 1லட்சம் கோடி உங்களுக்கானது, இது உங்கள் திறன்களை அதிகரிக்க வழி வகுக்கும். புதிய வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். தனியார் துறையிலும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிப்பதே எங்கள் நோக்கம். இதற்கு தான் முயற்சி செய்கிறோம்.

தற்போது இந்தியாவின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செலவினம் இரட்டிப்பாகியுள்ளது, காப்புரிமைகள் பதிவு சுமார் 17 மடங்கு அதிகரித்துள்ளது. கூடுதலாக சுத்தமான எரிசக்தி மற்றும் செமிகண்டக்டர் போன்ற புதிய தொழில்நுட்பங்களில் கவனம் செலுத்தும். 6000-க்கும் மேற்பட்ட டீப்டெக் தொழில்நுட்ப ஸ்டார்ட்அப்களுடன் உலகின் 3வது ஸ்டார்ட்அப் நெட்வொர்க் கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

# பீகாரில் பேசிய கருத்தை தமிழ்நாட்டில் பேச தைரியம் இருக்கிறதா?

## முதல்வர் ஸ்டாலின் சவால்

தர்மபுரி, நவ.4:

பீகாரில் பேசிய கருத்தை தமிழ்நாட்டில் பிரதமர் பேச முடியுமா? அந்த தைரியம் அவருக்கு இருக்கிறதா என பிரதமருக்கு முதலமைச்சர் ஸ்டாலின் சவால் விடுத்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. மணியின் மகன் பிரகதீஸ்வரன் - மது பிரதிக்சா ஆகியோரது திருமண விழாவில் பேசியதாவது:

அடுத்த ஆண்டு நாம் எதிர்கொள்ள இருக்கக்கூடிய தமிழ்நாடு தேர்தலை அடிப்படையாக வைத்து வாக்காளர் பட்டியலில், ஏற்பட்டிருக்கக்கூடிய எஸ்.ஐ.ஆர். என்ற ஒரு திட்டத்தை அவர்கள் மையப்படுத்தி, சீராய்வு என்ற பெயரில், சூழலில், ஒரு தீய செயலை, ஒரு சதிச் செயலைச் செய்ய தேர்தல் ஆணையம் திட்டமிட்டிருக்கிறது. அதை தடுப்பதற்கான முயற்சியில், நேற்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து பேசி தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம்.

எடப்பாடி பயப்படுகிறார்

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய பழனிசாமி, இதில்கூட தன்னுடைய இரட்டை வேடத்தைக் காட்டியிருக்கிறார். பா.ஜ.க.,வுக்கு பயந்து, தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கையை எதிர்க்கப் பழனிசாமி பயப்படுகிறார்.

அதேநேரத்தில், அண்ணா தி.மு.க. தொண்டர்களுக்காக ஒரு அறிக்கையையும் அவர் வெளியிட்டிருக்கிறார்.

இது எதை காட்டுகிறது? தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கையில், பழனிசாமிக்கு சந்தேகம் இருப்பதைத் தான் அது காட்டுகிறது! ஆனால், அவரால் வெளிப்படையாக இதைஎதிர்க்கமுடியவில்லை.



தான், “பா.ஜ.க.,வின் பாதம்தாங்கி பழனிசாமி” என்பதை நொடிக்கு ஒருமுறை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

தமிழகத்தில் பேச தைரியம் இருக்கிறதா?

நான் கேட்கிறேன், பிரதமர் மோடி பீகாரில் பேசிய அதே கருத்தை,இங்கேதமிழ்நாட்டில் வந்து பேச முடியுமா? பேசுவாரா? பேசக்கூடிய தைரியம் இருக்கிறதா? என்ற கேள்வியை தான் நான் கேட்க விரும்புகிறேன்.

யார் என்ன சதி செய்தாலும், எத்தனை அவதூறுகளை பரப்பினாலும், எவ்வளவு போலிச் செய்திகளை எல்லாம் அவர்கள் உருவாக்கினாலும், நான் தெளிவோடு சொல்கிறேன் இங்கே தொல் திருமாவளவன் குறிப்பிட்டது போல, 2026-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் இருக்கக்கூடிய ஆட்சி நிச்சயம் அமையும் அமையும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைக்கு அனைத்து சேனலிலும் “திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தது”! என்ற செய்திதான் வரப்போகிறது! அதை நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்.

தமிழ்நாட்டு மக்கள் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கையின் காரணமாக இதை நான் தெளிவோடு சொல்ல விரும்புகிறேன்.

ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைய நீங்கள் எல்லாம் உறுதுணையாக, உற்றத் துணையாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, 2021 தேர்தல், தமிழ்நாட்டை கொத்தடிமை அண்ணா திமுகவிடமிருந்து மீட்டிருக்கிறோம். - 2026 தேர்தலில், தமிழ்நாட்டை பா.ஜ.க. - அ.தி.மு.க. கும்பலிடம் இருந்து பாதுகாக்கக்கூடிய தேர்தலாக அமையப் போகிறது.

இதை நீங்கள் நிரூபிக்கவேண்டும்; அதற்கான வெற்றிக்கு நீங்கள் உழைக்க வேண்டும்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

# எதிரே வந்த வாகனங்களை மோதித் தள்ளிய லாரி கோர விபத்தில் 12 பேர் பலி



ஜெய்ப்பூர், நவ.4:ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் கோர சாலை விபத்தில் குறைந்தது 12 பேர் உயிரிழந்தனர் மற்றும் பலர் படுகாயமடைந்தனர்.

நேற்று மதியம், ஜெய்ப்பூரில் லோகாமண்டி பகுதியில் உள ஹர்மதா என்ற இடத்தில், வேகமாக வந்த ஒரு காலி சரக்கு லாரி கட்டுப்பாட்டை இழந்து சுமார் 300 மீட்டர் தூரத்திற்கு எதிரே வந்த 17 வாகனங்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது.

இந்த கோர விபத்தில் 12 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். விபத்து நடந்ததும் உள்ளூர் மக்கள், போலீசார் விரைந்து வந்து காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

லாரி ஓட்டுநர் மதுபோதையில் இருந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக ஜெய்ப்பூர் மாவட்ட ஆட்சியர் ஜிதேந்திர சோனி கூறியுள்ளார்.

விபத்துக்கு காரணமான லாரி டிரைவரை உடனடியாக கைது செய்யக் கோரி பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


கடந்த 24 மணி நேரத்தில் ராஜஸ்தானில் நடந்த இரண்டாவது பெரிய விபத்து இதுவாகும்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடந்த மற்றொரு விபத்தில் சாலையோரம் நின்றிருந்த லாரி மீது வேன் மோதியதில் அதில் 15 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கடற்படையினர் தொடர் அட்டூழியம்: எல்லை தாண்டி மீன்பிடித்ததாக தமிழக, புதுச்சேரி மீனவர்கள் 35 பேர் கைது

சென்னை, நவ.4

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த 35 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயன்படுத்திய 3 விசைப் படகுகளும், ஒரு நாட்டுப்படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.



தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி துறைமுகங்களில் இருந்து மீன்பிடிக்க மீனவர்கள் மூன்று விசைப்படகுகள் மற்றும் ஒரு நாட்டுப் படகு மூலம் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்துள்ளனர். இரண்டு விசைப்படகுகளில் தலா 10 பேரும், ஒரு விசைப்படகில் 11 பேரும், நாட்டுப் படகில் 4 பேரும் மீன் பிடித்துக்கொண்டிருந்துள்ளனர்.

அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்து மீன் பிடித்ததாகக் கூறி 3 விசைப்படகுகள் மற்றும் ஒரு நாட்டுப் படகுடன் 35 மீனவர்களையும் கைது செய்தனர்.

படகுகளையும் மீன்பிடி உபகரணங்களையும் பறிமுதல் செய்த இலங்கை கடற்படையினர், மீனவர்களை காங்கேசன் துறைமுகத்துக்குக் கொண்டு சென்று பின்னர் உள்ளூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் தமிழ்நாடு, புதுச்சேரியைச் சேர்ந்தவர்கள்.

ஆண்டுக்கணக்கில் சிறை...

ராமேஸ்வரம் பகுதியிலிருந்து இரு நாள்களுக்கு முன் மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை சிங்களக் கடற்படையினர் நடுக்கடலில் தாக்கி விரட்டியடித்தனர். இதையடுத்து அவர்கள் மீன் பிடிக்க முடியாமல் பாதியில் திரும்பினார்கள். அதனால் ஏற்பட்ட பதட்டம் விலகுவதற்கு முன்பாகவே தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைச்தமிழ்நாட்டைச் சேர்ந்த 74 மீனவர்கள் இன்றைய நிலவரப்படி இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த பல ஆண்டுகளாக பறிமுதல் செய்யப்பட்ட 242 மீன்பிடிப் படகுகளும் இன்னும் மீட்கப்படாமல் உள்ளன.

கடந்த காலங்களில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 15 நாள்களில் விடுதலை செய்யப்பட்டு வந்த நிலை மாறி, இப்போது தமிழக மீனவர்களுக்கு ஆண்டுக்கணக்கில் சிறையும், கோடிக்கணக்கில் அபராதமும் விதிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.







## திருக்குறள் குறள்-429

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்



வரப்போவதை முன்னே அறிந்து காத்துக் கொள்ளவல்ல அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும் படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

## சிந்திக்க ஒரு நொடி



வெற்றி பெற
வேண்டும் என்று
முடிவு செய்து
விட்டால்....
விழிகளுக்கு தெரிய
வேண்டியது
காரணங்கள் இல்லை
இலக்கு மட்டுமே.....

**உஷா முத்துராமன்**

## சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி



**உடுமலைப்பேட்டை, நவ.4:**
ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் சோமவாரமான இன்றைய தின பூஜையில் நம் வாசவி அம்மன் மங்களகரமான சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## டிடிடிஏ டேனியல் ராஜம்மாள் கல்வியல் கல்லூரில் கலைத்திருவிழா, பசுமையும் பாரம்பரியமும் நிகழ்ச்சி



தென்காசி இலஞ்சி, டிடிடிஏ டேனியல் ராஜம்மாள் கல்வியல் கல்லூரில் கலைத்திருவிழா, பசுமையும் பாரம்பரியமும் நிகழ்ச்சியை கலெக்டர் கமல்கிஷோர், துவக்கி வைத்தார்.

## மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம்





**திருவண்ணாமலை, நவ,4:**
மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து உயர்திரு.மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார். அனைத்து துறை அரசு அலுவலர்கள், பொதுமக்கள் அனைவரும் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## புதுபாடி கிராமத்தில் பிரதோஷம்



புதுபாடி கிராமத்தில் பிரதோஷம் சிறப்பாக நடைபெற்றது.

## ஐப்பசி மாதம் வளர்பிறை பிரதோஷ வழிபாடு

**திருவண்ணாமலை, நவ.4:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ஐப்பசி மாத வளர்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு ஸ்ரீ வீரட்டேஸ்வரர், ஸ்ரீ நந்தி பகவான், மற்றும் ஸ்ரீ மீனாட்சி உடனமர் சுந்தரேஸ்வரருக்கு எண்ணற்ற வாசனை திரவங்களை கொண்டு பால், தயிர், சந்தனம், விபூதி, இளநீர்,தேன், பஞ்சாமிர்தம், வெட்டிவேர் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால், அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, மேள தாளங்கள் ஒலிக்க மஹா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் அரோகரா அரோகரா



என்று முழக்கமிட்டு நந்திகேச பெருமானை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## புனித சூசையப்பர் மேல்நிலைப் பள்ளியில் கலைத்திருவிழா



செங்கல்பட்டு புனித சூசையப்பர் மேல்நிலைப் பள்ளியில் கலைத்திருவிழா போட்டிகளை அமைச்சர் தா. மோ. அன்பரசன் தொடங்கி வைத்தார்.

## ஐப்பசி மாதம் வளர்பிறை பிரதோஷ வழிபாடு



**திருவண்ணாமலை, நவ.4:**
திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் ஆலயத்தில் பெரிய நந்திகேச பெருமானுக்கு எண்ணற்ற வாசனை திரவங்களை கொண்டு பால், தயிர், சந்தனம், விபூதி, இளநீர்,தேன், பஞ்சாமிர்தம், வெட்டிவேர் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால், அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, மேள தாளங்கள் ஒலிக்க மஹா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் அரோகரா அரோகரா என்று முழக்கமிட்டு நந்திகேச பெருமானை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## வேலூர் வருகைதந்த துணை முதல்வர் உதயநிதிக்கு வரவேற்பு!



**வேலூர், நவ. 4:**
வேலூர் மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த திமுக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை, வேலூர் மாவட்ட திமுக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மயில் மாலை அணிவித்து வரவேற்றார். அவருடன் மாவட்ட அவைத்தலைவர் முகமது சகி மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## மாணவர்களுக்கு கற்றல் திறன் சான்றிதழ்..!




**வந்தவாசி, நவ 04:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், வீனஸ் வித்யாலயா பள்ளியில் எய்டு இந்தியா திட்டம் சார்பில் டெக்னாலஜி பயன்படுத்தி மாணவர்களுக்கு கற்பித்தல் திறன்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அடிப்படைத் திறனான கூட்டல், கழித்தலில் சிறப்பாக செயல்பட்ட மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும், சான்றிதழும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக, ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன், திட்ட மேலாளர் க.முருகன், யுரேகா ஆசிரியை சங்கரி, பள்ளி வகுப்பு ஆசிரியர்கள், பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**பா.சீனிவாசன், வந்தவாசி.**

## வந்தவாசியில் பிரதோஷ வழிபாடு...!

**வந்தவாசி, நவ 04:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் நேற்று நடைபெற்ற பிரதோஷ வழிபாட்டில் நந்தி பகவானுக்கு பால், தயிர், சந்தனம், இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. பிறகு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

பிறகு புஷ்ப அலங்காரம் செய்யப்பட்ட உற்சவ மூர்த்திகள் மேளதாளத்துடன் கோவில் பிரகாரத்தில் வீதியுலா வந்தார். இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும்



பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

இதைப்போலவே வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற பிரதோஷ வழிபாட்டில் நந்தி பகவானுக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றன. **பா. சீனிவாசன் வந்தவாசி.**

## அருள்மிகு கற்பக விநாயகர் மஹா கும்பாபிஷேக விழா

**திருவண்ணாமலை, நவ.4:**
திருவண்ணாமலை நினைக்க முக்தி தரும் அக்னி ஸ்தலமான அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் மாட வீதியில் திருவூடல் தெருவில் கிரிவலப் பாதை துவங்கும் சந்திப்பில் அமர்ந்து பக்தர்களுக்கு அருள் பாலித்து வரும் அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில் கிரிவலம் செல்லும் பக்தர்கள் தங்கள் அனைத்து பிரார்த்தனைகளும் நிறைவேறவும், கிரிவலம் எந்த ஒரு தடங்கலும் இன்றி நடைபெறவும், வேண்டி செல்கின்றார்கள்.

மேலும் உள்ளூர் பக்தர்கள் தினசரி கற்பக விநாயகர் வேண்டி செல்கின்றார்கள். வேண்டுவோருக்கு வேண்டும் வரும் அளிக்கும் சிறப்புமிக்க அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயிலில் புனராவர்த்தன, ஜீர்ணோத்தாரண, அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் சிவஸ்ரீP.T. ரமேஷ் குருக்கள் அவர்கள், சிவஸ்ரீ L. சுந்தரமூர்த்தி குருக்கள், சிவஸ்ரீP.T. வெங்கடேச குருக்கள், சிவஸ்ரீ P.T.R. கோகுல் குருக்கள்,



சிவஸ்ரீ L. ரவி குருக்கள், சிவஸ்ரீ L. சிவக்குமார் குருக்கள் அவர்களால் மங்கள இசை, வாஸ்து சாந்தி, கோ பூஜை, திருமுறை பாராயணம், கருவறையில் தீப ஸ்தாபனம், நான்காம் காலயாக பூஜை, அஷ்டபந்தன மருந்து சாற்றுதல், வேத மந்திர உபசாரம் பூர்ணாஹுதி, தீபாராதனை, கலசம் புறப்பாடு, ஐப்பசி மாதம் 17ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு விமானம் கும்பாபிஷேகம், காலை 10.10 மணிக்கு மூலவர் அருள்மிகு கற்பக விநாயகர் கும்பாபிஷேகம்,12. மணிக்கு மஹா அபிஷேகம் தீபாராதனையும் நடைபெற்றது ஏராளமானோர் பக்தர்கள் கற்பக விநாயகரை வேண்டி அருள் பெற்றனர். பிரசாதங்களும் வழங்கப்பட்டது. வெகு சிறப்பாக நடைபெற்றது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர் திருவண்ணாமலை**

## செய்யாறில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் கணக்கீட்டு படிவம் வழங்கல்

### சார் ஆட்சியர் எல். அம்பிகா ஜெயின் பங்கேற்பு

**செய்யாறு நவ.4:**
திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு கோட்டம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் கணக்கிட்டு படிவங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்ற சார் ஆட்சியர் எல் அம்பிகா




ஜெயின் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் உள்ளிட்டோருக்கு தீவிர சிறப்பு திருத்தம் குறித்த வாக்காளர் கணக்கீட்டு படிவங்களை வழங்கினார்.

நிகழ்வின் போது வெம்பாக்கம் வட்டாட்சியர் தமிழ்மணி உடன் இருந்தார்.

## துணை ஜனாதிபதி கோரிக்கை: ரயில்வே அமைச்சர் நடவடிக்கை

**சென்னை, நவ.4:**

சமீபத்தில் கோவை வந்த குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ண னிடம், பெங்களூரு-எர்ணாகுளம் இடையே யான வந்தே பாரத் ரயில் சேவை ஜவுளி நகரங்களான கோவை, திருப்பூர், ஈரோடு. சேலம் ஆகிய பகுதிகளில் நின்று செல்ல வேண்டும் என்று தொழில் அதிபர்கள், பொது மக்கள் கோரிக்கை விடுத்தனர். அதைத் தொடர்ந்து, அவர், இது குறித்து ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிடம் நேரில் கோரிக்கை வைத்தார். இந்நிலையில் தற்போது ரயில்வே அமைச்சகம் வெளி யிட்டுள்ள அறிவிப்பில், பெங்களூரு-எர்ணாகுளம் இடையேயான வந்தே பாரத் ரயில் கோவை உள்பட ஈரோடு, திருப்பூர், சேலம் ஆகிய இடங்களில் நின்று செல்வது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

## தெரு நாய்க்கடி விவகாரம் தமிழக அரசு பிரமாணப் பத்திரம் தாக்கல்

**சென்னை, நவ.4;**

தெரு நாய்க்கடிகளைத் தடுக்கவும், ரேபிஸ் நோய் பரவாமல் தடுக்கவும் நடவடிக்கை எடுப்பது குறித்து 2 மாதத்திற்குள் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என்று அனைத்து மாநிலங்களுக்கும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி, மேற்குவங்கம், தெலுங்கானா மற்றும் தில்லி மாநகராட்சி ஆகியவை மட்டுமே பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தன. இதனையடுத்து 2 மாதம் அவகாசம் வழங்கியும் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யாததால், தமிழ்நாடு உள்ளிட்ட 25 மாநில தலை மைச் செயலாளர்கள் நவ.3 ஆம் தேதி ஆஜராக உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இந்நிலையில், தெரு நாய் விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளது. அதில், "தமிழ்நாட்டில் 138 கால்நடை மருத்துவ மனைகள் மூலம் நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டு உள்ளது. கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் கூடுதலாக 88 மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சென்னை மாநக ராட்சியில் மட்டும் 5 கருத்தடை மையங்கள் செயல்படு கின்றன. மற்ற 25 மாநகராட்சிகளில் 86 கருத்தடை மையங்கள் செயல்படுகின்றன. நாய்கள் கருத்தடை திட்டத்திற்காக 450 கால்நடை மருத்துவர்களுக்கு 15 நாள் சிறப்பு பயிற்சி தரப்பட்டுள்ளது. இதுவரை 4.77 லட்சம் ரேபிஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது" என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கரூர் கூட்ட நெரிசல் பலி விசாரணைக்கு ஆஜராக 100 பேருக்கு சிபிஐ சம்மன்



**கரூர், நவ.4:**

கரூர் வேலுச்சாமி புரத்தில் கடந்த செப்.27 ஆம் தேதி தவெக தலைவர் விஜய் பிரச் சாரத்தின்போது ஏற் பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயி ரிழந்த வழக்கை சிபிஐ விசாரிக்க உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது. அதன்படி ஐபிஎஸ் அதி காரி பிரவீன்குமார் தலைமையிலான சிபிஐ குழுவினர் விசாரித்து வருகின்றனர். சம்பவம் நடந்த வேலுச்சாமிபுரத்துக்கு சென்ற சிபிஐ அதிகாரி கள் அங்கு 3டி லேசர் ஸ்கேனர் கருவியை கொண்டு சாலையை அளவீடு செய்தனர். விஜய் பிரச்சார வாக னம் வந்த சாலை, அவர் நின்று பேசிய இடத்தின் நீளம், அகலம் ஆகி யவை கருவி மூலம் அள வீடு செய்யப்பட்டது. சனிக்கிழமை மட்டும் சுமார் 9 மணி நேரம் அங்கு ஆய்வு நடந்தது. இந்நிலையில் வேலுச்சாமிபுரத்தில் உள்ள மளிகைக் கடை கள், பெட்ரோல் பங்கில் வேலை பார்ப்ப வர்கள் மற்றும் கடைக் காரர்கள், பொதுமக்கள் என 100-க்கும் மேற் பட்டோருக்கு சிபிஐ சம்மன் அனுப்பியுள்ளது. அதில் நவ.2, 3 தேதிகளில் விசார ணைக்கு ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதன்படி ஞாயிறன்று பலர் பய ணியர் மாளிகையில் ஆஜராகினர். அவர் களிடம் சிபிஐ அதிகாரி கள் தீவிர விசாரணை நடத்தினர்.

## குற்றால அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் குவிந்தனர்



**குற்றாலம், நவ.4:**

தென்காசி மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதியில் அமைந்துள்ள குற்றால அருவிகளில் சீசன் முடிவுற்ற நிலையிலும், பிரதான அருவியான குற்றால மெயின் அருவி, புலியருவி, சிற்றருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம் உள்ளிட்ட அருவிகளில் குளிப்பதற்குச் சுற்றுலாப் பயணிகள் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த கனமழையால் இங்குள்ள அனைத்து அருவிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால் பாதுகாப்பு நலன் கருதி அருவியில் குளிப்பதற்குச் சுற்றுலாப் பயணி களுக்குத் தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து பிரதான அருவியான குற்றால மெயின் அருவி, ஐந்தருவி, புலியருவி, சிற்றருவி உள்ளிட்ட அருவி களில் குளிக்க அனுமதிக்கப்பட்ட நிலையில், பழைய குற்றால அருவியில் மட்டும் பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் 18வது நாளாகக் குளிக்கத் தடை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் இன்று வார விடுமுறை என்பதால், ஜில்லென்று ஆர்ப்பரித்து வரும் தண்ணீரில் குளிப்பதற்குச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துக் காணப்படுகிறது. இது குறித்துச் சுற்றுலாப் பயணிகள் கூறுகையில், "தற்போது சீசனைப் போல அனைத்து அருவிகளிலும் ஜில்லென்று தண்ணீர் வருவதால் குளித்து மகிழ்ந்து செல்வ தோடு, செல்ஃபி பாயின்ட்டில் மொபைல் போனில் செல்ஃபி எடுத்துச் செல்கிறோம்" என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். இருப்பினும், "பழைய குற்றால அருவியில் மட்டும் குளிக்காமல் செல்வது ஏமாற்றம் அளிக்கிறது"

## முதுகுத்தண்டு சிகிச்சை குறித்த சர்வதேச மாநாடு அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்தார்





**சென்னை, நவ.4:**

முதுகுத் தண்டு மருத்து வர்கள் சங்கத்தின் ) 25-வது வருடாந்திர மாநாட்டை சென்னையில் சனிக்கிழமை தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் டாக்டர். பழனிவேல் தியாகராஜன் தொடங்கிவைத்தார்.

காவேரி மருத்துவ மனையால், ஹம்சா ரீஹேப் மையத்தின் ஒத்து ழைப்போடு நடத்தப் படும் இந்த மாநாடு மருத்து வத்தின் பல்துறைகள் சங்கமிக்கும் ஒரு முக்கிய நிகழ்வாகும்.

இதில் இந்தியா முழுவதிலுமிருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் முதுகுத்தண்டு அறுவை சிகிச்சை நிபுணர்கள், மறுவாழ்வு சிகிச்சை வல்லு நர்கள், நரம்பியல் அறிவிய லாளர்கள் மற்றும் தொடர்பு டைய சுகாதாரப் பணி யாளர்கள் பங்கேற்கின்ற னர்.

முதுகெலும்பு அதிர்ச்சி மற்றும் முதுகுத்தண்டு காய சிகிச்சை முறையில் ஏற்பட்டுள்ள புதிய உத்தி கள் மற்றும் மேம்பாடுகள் குறித்த சமீபத்திய தகவல்களைப் பகிர்ந்து கொள்ள இந்த மாநாடு ஒரு சிறப்பான தளமாக அமைகிறது.

அக்.31 முதல் நவம்பர் 2 வரை மூன்று நாட்கள் நடைபெற்ற இம்மாநாடு காயம் ஏற்பட்டதிலிருந்து சிகிச்சை மூலம் குண மடைதல் வரை, முதுகுத் தண்டு சிகிச்சை மீது ஒரு முழுமையான கண்ணோ ட்டத்தை வழங்குவதையும், அறுவைசிகிச்சைக்கும் மறுவாழ்வு சேவைக்கும் இணைப்புப் பாலமாகத் திகழும் வகையிலும் ட வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய அம்சங்க ளாக, முதுகெலும்பு காயம் அதிர்ச்சி குறித்த நேரடி பயிற்சிப் பட்டறைகள், ஆழ மான சிந்தனை அரங்கு கள் மற்றும் நிபுணர்களின் ஊடாடும் கலந்துரை யாடல்கள் ஆகியவை நடைபெற்றன என்று முது குத்தண்டு சங்கத்தின் தலைவர் டாக்டர். எச்.எஸ் சாப்ரா கூறினார்.

காவேரி மருத்துவமனை யின் இணை நிறுவனரும், செயல் இயக்குநருமான டாக்டர். அரவிந்தன் செல்வ ராஜ் இந்த மாநாட்டில் பங்கேற்கும் உலகளா விய மருத்துவ நிபுணர்களி டையே நிகழும் கலந்துரை யாடல்களும் விவா தங்களும், இந்தியாவில் நரம்பியல் மற்றும் முதுகுத்தண்டு ஆரோக்கி யத்தின் எதிர்காலத்தை வடிவமைக்க நிச்சயம் உதவும்." என்றார்.

# எஸ்ஐஆர் மூலம் தமிழகத்தில் வெற்றி பெற பாஜக முயற்சி: உதயநிதி ஸ்டாலின் குற்றச்சாட்டு



**சென்னை, நவ.4:**

தமிழகத்தில் பாஜக வெற்றி பெற வாய்ப்பு இல்லை. சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி மூலம் வெற்றி பெற பாஜக முயற்சிக்கிறது என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

மெட்ராஸ் ரவுண்ட் டேபிள் 1 சார்பில் சென்னை ரன்ஸ் மாரத்தான் போட்டிகள் நேற்று நடைபெற்றது. நேப்பியர் பாலத்தில் இருந்து தொடங்கிய மாரத்தானை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது: கரூர் சம்பவத்துக்கு அனைவரும் தான் பொறுப்பு என்று நடிகர் அஜித் பேசியிருப்பது அவரது சொந்த கருத்து. கரூர்விவகாரத்தில் முதல்வர் தெளிவாக பதில்சொல்லியிருக்கிறார். அனைத்து கட்சிகளின் தலைவர்களும் கூட பேசியிருக்கின்றனர். ஆனால் உண்மையாக யார் பதில் சொல்ல வேண்டுமோ அவர் (விஜய்) பேட்டி கொடுக்க விரும்பவில்லையா என தெரியவில்லை. இச்சம்பவத்துக்கு அனைவரும்தான் பொறுப்பு. ஆனால் சம்பவத்துக்கு யார் முக்கிய காரணமோ அந்த நபரையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவரிடமும் பேட்டி எடுக்க வேண்டும்.

கடந்த 4 மாதங்களாகவே மழைக்கால பிரச்சினைகள் குறித்து சமூக வலைதளங்கள், ஊடகங்களில் இருந்து வரும் புகார்களுக்கு தீர்வு காண மக்கள் பிரதிநிதிகளை கொண்டு தொடர்ச்சியாக ஆலோசனைகளை கூட்டங்களை நடத்தி வருகிறோம். இந்த ஆண்டு மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அதிகளவில் மேற்கொண்டு இருக்கிறோம். சாலை பராமரிப்பு பணிகளும் ஆங்காங்கே வேகமாக நடைபெற்று வருகின்றன. மக்கள் எங்களிடம் இன்னும் அதிகமாக எதிர்ப்பார்க்கிறார்கள். எங்கு சென்றாலும் பிரச்சினைகளை சுட்டிகாட்டுகின்றனர். அவற்றை எவ்வளவு சீக்கிரம் தீர்க்க முடியுமோ அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

எங்கெல்லாம் தேர்தல் நடக்கிறதோ, அங்கு பாஜக தனக்கு சாதகமான வாக்குகளை வைத்துக்கொண்டு, அவர்களுக்கு பாதகமான வாக்குகளை எல்லாம் நீக்குகின்ற பணிகளில் வெளிப்படையாக ஈடுபட்டு வருகிறது. பிஹாரில் சிறப்பு திருத்தம் மூலம் என்னென்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். பல ஆண்டுகளாக தமிழகத்தில் வெல்வதற்கு பாஜகவுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. மக்களும் அந்த வாய்ப்பை தருவதும் இல்லை. எனவே சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த முறையை பயன்படுத்தியாவது வெற்றிபெற வேண்டும் என முயற்சிக்கின்றனர்.

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனை அதிமுக கட்சியில் நீக்கியிருப்பது பற்றி என்னால் கருத்து சொல்ல முடியாது. ஆனால் பழனிசாமி தான் அதிமுகவின் நிரந்தர பொதுச்செயலாளராக இருக்க வேண்டும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அப்போதுதான் திமுக எளிதாக வெற்றி பெறும். இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### உங்களுக்கு சர்க்கரை நோயா? வெந்தயம் இருக்க பயம் ஏன்? இன்சுலின் ஊசிக்கு குட்பை சொல்லிடுங்க...



நம் உடலில் மெட்டபாலிசம் சிறப்பாக நடைபெற தாவர விதைகள் சிறந்த முறையில் உதவுகின்றன. அதிலும் அந்த விதைகளை ஊற வைத்து உண்ணும்போது அதிலிருந்து கிடைக்கும் நன்மைகள் பன்மடங்காகின்றன. குறிப்பாக, வெந்தயத்தில் (Fenugreek) உள்ள நார்ச்சத்து மற்றும் 4-ஹைட்ராக்ஸிஸோலூசின் (4-hydroxyisoleucine) என்ற கூட்டுப் பொருளும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவை சமநிலையில் வைத்துப் பராமரிக்கவும் இன்சுலின் சென்சிடிவிட்டியை அதிகரிக்கவும் செய்கின்றன. இப்பதிவில் கூறப்பட்டிருக்கும் நான்கு பொருட்களை வெந்தயத்துடன் சேர்த்து உட்கொள்ளும்போது இயற்கையான முறையில் இரத்த சர்க்கரை அளவை சமநிலைப்படுத்த முடியும்.

1. பட்டை (Cinnamon):

ஒரு சிட்டிகை பட்டை பவுடரை வெந்நீரில் கலந்து, ஊற வைத்த வெந்தய விதைகளுடன் உட்கொள்வது இன்சுலின் சென்சிடிவிட்டியை அதிகரிக்க செய்து இரத்த சர்க்கரை அளவை சமநிலையில் வைக்க உதவும் என ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

மேலும், கெட்ட கொழுப்புகள் (LDL-C) மற்றும் ட்ரெய்க்ளிசெரைட்களின் அளவை குறைக்கவும், நல்ல கொழுப்பின் அளவை அதிகரிக்கவும் பட்டை பவுடர் உதவி புரியும்.

2. நெல்லிக்காய்:

இதிலுள்ள வைட்டமின் C மற்றும் ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் கணையத்தின் (Pancreas) இயக்கங்களை மேம்படுத்தி, குளுக்கோஸ் மெட்டபாலிசம் சிறந்த முறையில் நடைபெற உதவுகின்றன. வெந்தய பவுடரை ஃபிரஷ் நெல்லிக்காய் ஜூஸில் கலந்து அருந்துவது உடலிலுள்ள கொழுப்புகளின் அளவு, அவற்றின் தன்மை, சர்க்கரை மற்றும் கல்லீரலில் உற்பத்தியாகும் CRP (C-reactive protein) ஆகியவை மீது நேர்மறை வினைபுரிந்து உடல் நன்மை பெற உதவும்.

3. ஃபிளாக்ஸ் விதைகள்:

ஃபிளாக்ஸ் விதைகள் மற்றும் வெந்தய விதைளைப் பொடியாக்கி ஸ்மூத்திகளில் சேர்த்து உண்ணலாம். இவை இரண்டிலும் உள்ள நார்ச்சத்து வயிற்றில் அதிக நேரம் தங்கி குளுகோஸ் உடலுக்குள் உறிஞ்சப்படுவதை தாமதப்படுத்தும். இதனால் சாப்பாட்டுக்குப் பின் சர்க்கரை அளவு இரத்தத்தில் அதிகரிப்பது தடுக்கப்படும்.

4. மஞ்சள்:

மஞ்சளில் உள்ள குர்க்குமின் என்ற கூட்டுப்பொருள் உடலில் உள்ள வீக்கங்களைக் குறைக்கவும், இன்சுலினின் செயல்பாடுகளை மேம்படுத்தவும் உதவி புரியும். குர்க்குமின், இன்சுலின் ரெசிஸ்டன்ஸ், ஹைப்பர் கிளைசீமியா, ஹைப்பர் லிபிடெமியா, ஐலெட் அப்போப்டோசிஸ் (Islet apoptosis) மற்றும் நெக்ரோஸிஸ் (necrosis) போன்ற நீரிழிவு நோயாளிகளுடன் தொடர்புடைய உடல் நலக் கோளாறுகளில் தலையிட்டு, நோயாளிகளுக்கு சாதகமான வகையில் செயலாற்றும் திறமையுடையது என 'குர்க்குமின் அண்ட் டயாபெட்ஸ்' என்ற தலைப்பில் நடத்திய ஆராய்ச்சி ஒன்று கூறுகிறது.

எனவே, வெது வெதுப்பான பாலில் மஞ்சள் தூள் மற்றும் வெந்தயம் சேர்த்து குடிப்பதும், இவை இரண்டையும் உணவுகளின் தயாரிப்பில் ஒன்றாக சேர்த்து சமைத்து உட்கொள்வதும் உடலுக்கு ஆரோக்கியம் சேர்க்கும்.

# சேலம், ஈரோடு, கோவை வழியாக எர்ணாகுளத்துக்கு புதிய வந்தே பாரத் சேவை நவ.7-ம் தேதி தொடக்கம்

**சென்னை, நவ.4:**



தெற்கு ரயில்வேயில், சென்னை சென்ட்ரல் -கோவை, சென்னை எழும்பூர் - திருநெல்வேலி, சென்னை சென்ட்ரல் - மைசூர் வந்தே பாரத் ரயில் உட்பட 11 வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன. மற்ற விரைவு ரயில்களை காட்டிலும் வேகமாகவும், சொகுசாகவும் இருப்பதால், இந்த வந்தே பாரத் ரயில்களுக்கு பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.

மேலும், பல வழித் தடங்களில் வந்தே பாரத் ரயில்களை இயக்க வலியுறுத்தி, ரயில்வே அமைச்சகத்துக்கு கோரிக்கை விடுக்கப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில், தென்மேற்கு ரயில்வே சார்பில், கர்நாடகா மாநிலம் பெங்களூரில் இருந்து தமிழகம் வழியாக கேரள மாநிலம் எர்ணாகுளத்துக்கு புதிய வந்தே பாரத் ரயில் சேவை நவ.7-ம் தேதி தொடங்கப்பட உள்ளது.

இது குறித்து, தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: கர்நாடகா மாநிலம், கே.எஸ்.ஆர். பெங்களூருவில் இருந்து தமிழகம் வழியாக, கேரள மாநிலம், எர்ணாகுளத்துக்கு புதிய வந்தே பாரத் ரயில் இயக்க ரயில்வே வாரியம், கடந்த 2 வாரங்களுக்கு முன்பு ஒப்புதல் அளித்தது.

அதன்படி, இந்த புதிய ரயில் சேவை நவ.7-ம் தேதி தொடங்கப்பட உள்ளது. வாரத்தில் புதன்கிழமை தவிர, மற்ற நாட்களில் இந்த ரயில் இயக்கப்படும்.

கே.எஸ்.ஆர் பெங்களூரில் இருந்து காலை 5:10 மணிக்கு புறப்படும் வந்தே பாரத் ரயில், கிருஷ்ணராஜபுரம், சேலம், ஈரோடு, திருப்பூர், கோவை, பாலக்காடு, திருச்சூர் வழியாக மதியம் 1:50 மணிக்கு எர்ணாகுளத்தை சென்றடையும். மறுமார்க்கமாக, எர்ணாகுளத்தில் இருந்து பிற்பகல் 2:20 மணிக்கு வந்தே பாரத் ரயில் புறப்பட்டு, இரவு 11:00 மணிக்கு கே.எஸ்.ஆர். பெங்களூருவை அடையும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528


## அக்டோபரில் இந்திய பங்குச் சந்தையில் அன்னிய முதலீட்டாளர்கள் ரூ.14,610 கோடி முதலீடு

**மும்பை, நவ.4:**

அன்னிய முதலீட்டாளர்கள் தொடர்ந்து மூன்று மாதங்களாக ரூ.77,000 கோடி மதிப்பிலான முதலீட்டை இந்திய பங்குச் சந்தையிலிருந்து திரும்ப பெற்ற நிலையில், கடந்த அக்டோபரில் ரூ.14,610 கோடியை அவர்கள் முதலீடு செய்துள்ளனர். பாரின் போர்ட் போலியோ இன்வெஸ்டார் (எப்பிஐ) எனும் அன்னிய முதலீட்டாளர்கள் பல்வேறு காரணங்களால் இந்திய பங்குச் சந்தையில் இருந்து கடந்த மூன்று மாதங்களாக கணிசமான அளவில் முதலீட்டை திரும்ப பெற்றனர்.

அதன்படி, ஜூலையில் ரூ.17,700 கோடி, ஆகஸ்டில் ரூ.34,990 கோடி, செப்டம்பரில் ரூ.23,885 கோடி என ரூ.77,000 கோடி மதிப்பிலான தொகையை எப்பிஐ வெளியே எடுத்தனர். இந்த நிலையில், கார்ப்பரேட் நிறுவனங்களின் செயல்பாடு ஊக்கம்பெற்று வருவாய் அதிகரிப்பு, அமெரிக்க மத்திய வங்கி வட்டி விகித குறைப்பு எதிர்பார்ப்பு மற்றும் அமெரிக்கா-இந்தியா இடையே வர்த்தக பேச்சுவார்த்தையில் உடன்படிக்கை கையெழுத்தாகும் என்ற நம்பிக்கை ஆகியவை வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அதன் காரணமாக, அவர்கள் கடந்த அக்டோபர் மாதத்தில் ரூ.14,610 கோடியை இந்திய பங்குச் சந்தைகளில் முதலீடு செய்துள்ளனர். பங்குச் சந்தையில் அண்மைக்காலமாக முதலீட்டு வரத்து அதிரித்துள்ள போதிலும், அன்னிய முதலீட்டாளர்கள் 2025-ல் இதுவரையில் ரூ.1.4 லட்சம் கோடி அளவிலான முதலீட்டை பங்குச் சந்தையில் இருந்து திரும்பப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுமிகளின் காகித பை ஸ்டார்ட் அப் நிறுவனம்

பெங்களூரு: கர்நாடக தலைநகர் பெங்களூருவின் பசவேஸ்வரநகர் பகுதியை சேர்ந்த சிறுமிகள் சாரதா, சம்யுக்தா, சிறுவன் நசிகேதன் ஆகியோர் ஒரே பள்ளியில் படித்து வருகின்றனர். பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வுக்காக பள்ளியில் 3 பேருக்கும் அண்மையில் காகித பை தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த 3 பேரும் ஒருமித்து முடிவு செய்தனர். இதற்காக எகோ வாலா என்ற ஸ்டார்ட் அப் நிறுவனத்தை சிறுமி சாரதா தொடங்கினார். இந்த நிறுவனத்தின் மேலாளராக நசிகேதனும் துணை மேலாளராக சம்யுக்தாவும் பொறுப்பேற்றுக் கொண்டனர். பள்ளி முடிந்த பிறகு மாலை நேரத்தில் சாரதா, நசிகேதன், சம்யுக்தா ஆகியோர் பெங்களூருவின் முக்கிய பகுதிகளில் காகித பை விற்பனையை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களது ஸ்டார்ட் அப் நிறுவனத்தில் ரூ.10 சந்தா செலுத்தி உறுப்பினராக இணைந்து கொள்ளலாம். ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை 2 காகித பைகளை அவரவர் வீடுகளுக்கு நேரடியாக சென்று சிறுமிகள் விநியோகம் செய்கின்றனர். கூடுதல் காகித பைகள் தேவைப்பட்டால் அவற்றை விநியோகம் செய்யவும் தயாராக உள்ளனர். ஒரு வாடிக்கையாளரிடம் 3 சிறாரும் தங்களது ஸ்டார்ட் அப் நிறுவனம் பற்றி எடுத்துரைக்கும் வீடியோ வைரலாக பரவி வருகிறது. தாங்கள் தயாரிக்கும் காகித பையில் பசையை பயன்படுத்தவில்லை. கத்தரிக்கோலை பயன்படுத்தி காகிதங்களை வெட்டவில்லை என்று அவர்கள் வீடியோவில் விளக்கம் அளிக்கின்றனர்.

# திருப்பத்தூர் மாவட்டம் ஜவ்வாது மலையில் 5,000 ஆண்டுகளுக்கு முந்தைய புதிய கற்கால கற்கருவிகள்

**சென்னை, நவ.4:**

ஜவ்வாது மலையில் 5,000 ஆண்டுகளுக்கு முந்தைய புதிய கற்காலக் கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரி வரலாற்றுத் துறை ஆய்வு நெறியாளர் சி.முகமது ஃபஹீம் மேற்பார்வையின் கீழ் முனைவர் பட்ட ஆய்வாளர் ரங்கநாதன், ஜவ்வாது மலைக்கு உட்பட்ட நெல்லிப்பட்டு கிராமத்தில் 5,000 ஆண்டுகளுக்கு முந்தைய கற்கால கற்கருவிகளை கண்டெடுத்துள்ளார்.



இதுகுறித்து அவர் 'இந்து தமிழ் திசை' செய்தியாளரிடம் கூறியதாவது: நெல்லிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த கார்த்திகேயன், கிரீஸ்வரன் ஆகியோர் அளித்த தகவலின் படி, அங்கு ஆசிரியராகப் பணியாற்றும் கோவிந்தராஜ் மற்றும் சதீஷ்குமார் ஆகியோரது நிலங்களில் 7-க்கும் மேற்பட்ட இடங்களில் அரிய கற்கருவிகளை கண்டெடுத்துள்ளோம். இவை புதிய கற்கால மனிதர்களின் தேவைகளையும், தொழில்நுட்பத் திறன்களையும் வெளிப்படுத்துகின்றன.

இங்கு கண்டெடுக்கப்பட்ட கற்கோடாரி நீளமான, ஒரு முனை கூர்மையான, நுட்பமாக மெருகூட்டப்பட்டதாக உள்ளது. காடுகளை அழித்து விவசாய நிலங்களை உருவாக்குவதற்கும், மரங்களை வெட்டி வீடுகளை உருவாக்குவதற்கும் இவை பயன்பட்டிருக்கும். இங்கு அதிக எண்ணிக்கையில் கற்கோடாரிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதால், இவை அன்றாடப் பயன்பாட்டுக் கருவிகளாக மட்டுமின்றி, வர்த்தகத்தின் ஒரு பகுதியாகவும் இருந்திருக்கலாம் என்று தெரிகிறது.

கற்கோடாரிகளின் ஒரே மாதிரியான வடிவமைப்பு மற்றும் நுட்பமான மெருகூட்டல் ஆகியவை, ஜவ்வாது மலைப் பகுதியின் புதிய கற்கால மனிதர்களின் தேவையை மட்டுமின்றி, தரமான கைவினைத் திறன் மற்றும் சமூக கட்டமைப்பை வெளிப்படுத்துகின்றன. இந்தப் பகுதி ஒரு காலத்தில் தன்னாட்சி பெற்ற, விவசாயம் மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த நாகரிக மையமாக இருந்திருக்கும். ஜவ்வாது மலையின் வரலாற்றில் இது திருப்புமுனைக் கண்டுபிடிப்பாகும்.

இவற்றின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, தொல்லியல் துறையினர் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல, இந்தக் கருவிகளை ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம், இவற்றின் மூலப் பொருட்களையும், தமிழகத்தின் மற்ற புதிய கற்காலக் குடியேற்றங்களுடன் கொண்டிருந்த வர்த்தக உறவுகளையும் அறியலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# நான் கோட்டையில் கொடியேற்றுவதை விஜய் ஒரு நாள் பார்க்கப் போகிறார்: சீமான் அதீத நம்பிக்கை

**சென்னை, நவ.3:**

கோட்டையில் நான் கொடியேற்றுவதை விஜய் ஒருநாள் பார்க்கத்தான் போகிறார் என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் சார்பில் சென்னை அம்பத்தூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசியதாவது:

இதர மாநிலங்கள் தாங்கள் உருவான நாளை பெருமையோடு கொண்டாடி கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழகத்தில் மாநிலம் பிறந்த நாளை (நவ.1) தமிழ்நாடு நாள் என்று கொண்டாடாமல், ஜூலை 18-ம் தேதி தமிழ்நாடு என்று பெயர் வைத்த நாள் பிறந்தநாளாக கொண்டாடப்படுகிறது. திராவிடம் என்பதே ஒரு திரிபு, ஒரு ஏமாற்று என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம். திட்டமிட்டே தமிழர்களின் அடையாளங்களையும், வரலாற்றையும் மறைக்கின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் தேர்தலில் மற்ற கட்சிகளோடு நாம் கூட்டணி வைத்தால் 10 எம்.பி.க்கள், 25 எம்எல்ஏ.க்கள் கிடைப்பார்கள். எங்களுக்கு வேண்டியது அந்த எம்எல்ஏ சீட்டுகள் அல்ல. தமிழகத்தை கைப்பற்ற வேண்டும் என்பதே எங்களது நோக்கம். அதற்கு ஒரே ஆயுதம் பொறுமை. பொறுத்து நாங்கள் ஆள்வோம். தமிழகத்தின் கொடியை ஏற்றினால் பிரிவினை வாதம் (தவெக தலைவர் விஜய்யை சுட்டிக்காட்டி) என்று சொல்கிறார். அவருக்கு என்ன பேசுவது என்று தெரியாததால் பேசுகிறார். கோட்டையில் ஒரு நாள் நான் கொடியேற்றுவதை அவர் பார்க்கத்தான் போகிறார்.

என் கூட்டங்களில் நான் பேசும் கருத்தை உள்வாங்கி கொண்டு தான் என் தொண்டர்கள் ஆர்ப்பரிப்பார்கள். ஆனால் அவர் (விஜய்) கூட்டத்தில் தொடக்கத்தில் இருந்தே கத்துவது மட்டும்தான் கேட்கும். ஏன் கத்துகிறார்கள் என்று புரியாது. வரலாறு திரும்புகிறது என்றனர். புரட்சிகரமான மாற்றம் வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் கரூர் நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களை தனது வீட்டுக்கு வரவழைத்து துக்கம் விசாரிக்கும் அளவுக்கு வரலாறு மாறியிருக்கிறது.

சுயமரியாதை என்று சொல்ல திமுகவில், அதிமுகவில் ஒருவருக்காவது தகுதி இருக்கிறதா? உண்மையான திராவிடத்தின் வாரிசு நாங்கள் தான் என்று சொல்கிறார் எடப்பாடி பழனிசாமி. உங்களை ஆளை பார்த்தால் அப்படித் தெரியவில்லையே ஐயா. முதலமைச்சர் பதவியை சசிகலா அறிவிக்கும்போது காலில் தவழ்ந்து விழுந்து கும்பிட்டீர்களே, அதுதான் சுயமரியாதையா? இவ்வாறு அவர் பேசினார்.

# கரூர் வழக்கு: கரூர் நீதிமன்ற நீதிபதியுடன் சிபிஐ அதிகாரிகள் சந்திப்பு!

**சென்னை, நவ.3:**

கரூர் கூட்ட நெரிசல் வழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்ற உத்தரவின் கீழ் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக கரூர் சுற்றுலா மாளிகையில் தங்கி உள்ள சிபிஐ அதிகாரிகள் பல்வேறு கட்டங்களாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதல் கட்டமாக எஸ்ஐடி குழுவிடமிருந்து ஆவணங்களைப் பெற்ற சிபிஐ அதிகாரிகள் அது தொடர்பான விசாரணை நடத்தி வந்தனர். தொடர்ந்து கடந்த 4 தினங்களுக்கு முன்பாக சம்பவ இடமான வேலுச்சாமிபுரம் பகுதியில் 3டி டிஜிட்டல் ஸ்கேனர் உதவியுடன் அளவீடு செய்யும் பணியை நடத்தினர். இதனைத் தொடர்ந்து வேலுச்சாமிபுரம் பகுதியில் இருக்கக்கூடிய வியாபாரிகளுக்கு சம்மன் அனுப்பிய நிலையில் சாட்சிகள் தொடர்பான விசாரணையை நடத்தி வருகின்றனர். இதுவரை 20-க்கும் மேற்பட்ட நபர்களிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் சிபிஐ கூடுதல் காவல் கண்காணிப்பாளர் முகேஷ்குமார், சிபிஐ வழக்குரைஞர், ஆய்வாளர் மனோகரன் ஆகிய மூவரும் திங்கள்கிழமை பிற்பகல் 1 மணி அளவில் ஆவணங்களுடன் கரூர் குற்றவியல் நீதிமன்றம் எண் 1-ன் நீதிபதி சரத்குமாரை தனி அறையில் சந்தித்தனர்.

சுமார் கால் மணி நேரம் சந்திப்பிற்குப் பிறகு அவர்கள் அங்கிருந்து காரில் புறப்பட்டுச் சென்றனர். வழக்கு தொடர்பான கூடுதல் ஆவணங்களைக் கேட்டும் ஆவணங்கள் சரி பார்ப்பதற்காகவும் நீதிபதியைச் சந்திக்க வந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

## தண்டவாளத்தை சமன்படுத்தும் பணி

**தருமபுரி, நவ.4:**

புதிதாக அமைக்கப்பட்ட தண்டவாளங்களை சமன்படுத்தும் பணி துவங்கியது. தென்மேற்கு ரயில்வேயின் சேலம் தருமபுரி - பெங்களூரு மார்க்கத்தில் புதிதாக தண்டவாளங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு - தருமபுரிக்கு இடையே புதிய தண்டவாளங்கள் பதிக்கப்பட்டு, அவற்றை பேலன்ஸிங் மெஷின் என்ற நவீன இயந்திரம் மூலம் சமன்படுத்தும் பணி சனியன்று துவங்கியது. பொறியாளர்கள் தண்டவாளத்தின் வளைவுகள், கட்டைகள் மற்றும் அவற்றுக்கு அடியில் நிரவப்பட்டுள்ள ஜல்லிகற்கள் சமன்நிலையை ஆராய்ந்து சீரமைக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளனர். இப்பணிகள் வரும் நவ.5 ஆம் தேதி வரை ரயில்கள் இயங்காத நேரங்களில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உரம் ஏற்றி வந்த லாரியில் தீ

**உதகை, நவ.4:**

கூடலூர் அருகே சாலையில் சென்று கொண்டிருந்த லாரியில் தீப்பிடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. சேலத்தில் இருந்து நீலகிரி மாவட்டம், கூடலூருக்கு உரம் ஏற்றிய லாரி சனியன்று வந்து கொண்டிருந்தது. கூடலூர் - உதகை தேசிய நெடுஞ்சாலையில் வனப்பகுதி அருகே வந்த போது, லாரி சக்கரத்தில் திடீரென தீப்பிடித்து பரவ ஆரம்பித்தது. இதனைப்பார்த்த அந்த வழியாக வந்த வாகன ஓட்டுநர்கள் அதிர்ச்சியடைந்து, லாரி ஓட்டுநருக்கு தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து அவர் லாரியை ஓரமாக நிறுத்தி கீழே இறங்கினார். இதுகுறித்து கூடலூர் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைத்து லாரியிலிருந்த பொருட்களுக்கு தீ பரவாமல் தடுத்தனர்.

இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப் பட்டது., நவ.2- கூடலூர் அருகே சாலையில் சென்று கொண்டிருந்த லாரியில் தீப்பிடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. சேலத்தில் இருந்து நீலகிரி மாவட்டம், கூடலூருக்கு உரம் ஏற்றிய லாரி சனியன்று வந்து கொண்டிருந்தது. கூடலூர் - உதகை தேசிய நெடுஞ்சாலையில் வனப்பகுதி அருகே வந்த போது, லாரி சக்கரத்தில் திடீரென தீப்பிடித்து பரவ ஆரம்பித்தது. இதனைப்பார்த்த அந்த வழியாக வந்த வாகன ஓட்டுநர்கள் அதிர்ச்சியடைந்து, லாரி ஓட்டுநருக்கு தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து அவர் லாரியை ஓரமாக நிறுத்தி கீழே இறங்கினார். இதுகுறித்து கூடலூர் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைத்து லாரியிலிருந்த பொருட்களுக்கு தீ பரவாமல் தடுத்தனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப் பட்டது.

## சிதலமடைந்த பாளையக்காரர் சிலைகளை பராமரிக்க வலியுறுத்தல்

**உடுமலை, நவ.4:**

தமிழ்நாட்டில் நாயக்கர் ஆட்சிக்குப் பிறகு நிலப்பகுதிகள் பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றை மேற்பார்வை செய்ய பாளையக்காரர்கள் நியமிக்கப்பட்டனர். 18 ஆம் நூற்றாண்டு வரை பாளையக்காரர்களின் ஆட்சி இந்த மண்ணில் இருந்துள்ளது.

இதன்பின் அவர்களின் நிலப்பகுதிகள் ஜமீன்தார்களாகவும், நிலக்கிழார்களாகவும் மாற்றப்பட்டது. உடுமலை, மடத்துக்குளத்தை சுற்றியுள்ள பகுதிகளில் 10க்கும் மேற்பட்ட பாளையங்கள் நிர்வாகத்தில் இருந்தன. இதில் ஒன்றான உடுமலை வட்டத்திற்குட்பட்ட பள்ள பாளையம் என்ற ஊரின் தெற்குப்பகுதியில் சிறிய கோவில் உள்ளது. கோவிலுக்கு வெளியே சுவரில் வைக்கப்பட்டிருக்கும் கற்சிலையில் கைகூப்பி நின்ற நிலையில் உள்ள தம்பதியினர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அவர்களது ஆடை அணிகலன் மற்றும் சிகை அலங்காரத்தை வைத்துப் பார்க்குப்போது, பாளையத்தை ஆட்சி செய்தவர்களாகத் தோன்றுகிறது. பள்ளபாளையத்திலிருந்து சில கிலோ மீட்டர் தொலைவில் தான் தளி பாளையம் இருந்திருக்கிறது. இச்சிலை தளி எத்தலப்ப மன்னரின் பாளையத்தை சார்ந்தவர்களாகவோ அல்லது இதே பகுதியைச் சேர்ந்த பாளையக்காரராக இருக்க வாய்ப்புள்ளது. சிற்ப அமைப்பை நோக்கும்போது குறைந்தபட்சம் 200 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம். இதுபோன்ற சிதலமடைந்த, தனிச்சிற்பங்களை பாது காக்க தமிழக தொல்லியல் துறை ஆவண செய்ய வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் மற்றும் உடுமலை வரலாற்று ஆய்வு நடுவம் சார்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யோசனை

" ராகுலும் ராஜாவும் மிக்க நல்ல நெருங்கிய நண்பர்கள் , மனதில் ஒளிமறைவின்றி குடும்ப விஷயத்தை பற்றி அடிக்கடி பகிர்ந்து கொள்வார்கள் . "

" ஒரு நாள் மாலை சந்திப்பில் என்னடா வாழ்க்கை ,தினமும் எங்க வீட்டுல போர்க்களமாகவும் , போராட்டமாகவும் இருக்கு என்றான் சலிப்போடு ராகுல் ..."

" ஒரே டல்லா இருக்கே சுனக்கமா பேசறே என்னாச்சு ராகுல் என்று கேட்டான் ராஜா .... "

" மதம் கொண்ட யானை மாதிரி எங்கம்மாவும் , ஜல்லிக்கட்டு காளை மாதிரி என் மனைவியும் தினமும் சண்டை போடறாங்க , என்ன செய்யறதுன்னு தெரியலை நீயே ஒரு வழி சொல்லுடா என்றான் ராகுல்...."

" நான் ஒண்ணும் மகானோ தீர்க்கதரிசியோ இல்லே சாதாரணமானவன் தான் என்றான் ராஜா ...."

" விளையாட்டு போதும்டா நான் நொந்து போயிருக்கேன் எதாவது ஒரு யோசனை உருப்படியா சொல்லுப்பா சண்டை இல்லாமல் நிம்மதியா வாழணும் என்றான் ராகுல் ..."

" அங்குசம் உன்கிட்டே இருக்கும் போது வெளியில எதுக்கு



மருந்து தேடறே என்று கேட்டான் ராஜா..."

"புதிர் போடாம விடையை சொல்லுடா ராஜா மனசு கிடந்து தவிக்குது என்றான் ராகுல்..."

" ஒரு குழந்தையை சீக்கிரமா பெத்துக்கோ , உங்கம்மா பாட்டியாகி அக்கறையா குழந்தையை பார்ப்பாங்க , உன் மனைவி குழந்தையை சரியா ஆசையா பார்த்துக்கறதால உங்க அம்மாவோட ராசி ஆகியிடுவாங்க. அப்புறம் உங்க குடும்பம் கலகலப்பு பெட்டகம் ஆயிடும் என்றான் ராஜா ..."

" குடும்ப சண்டையின் மூலக் காரணத்தை தெரிந்த கொண்ட ராகுல் ஆனந்த கண்ணீரில் ராஜாவை அனைத்து தழுவிக் கொண்டான் .

" குழந்தை பிறக்க முழு ஒத்துழைப்பு தருவது அதற்கு பரிகாரம், மருத்துவ சிகிச்சை என்று மிக வேகமாக செயலில் இறங்கினான் ராகுல் ......."

**- சீர்காழி. ஆர். சீதாராமன்.**

# மா ப் பி ள் ளை.

சார்... நான் இதுவரையும் எட்டு ஜாதகம் வரை கொண்டு வந்து கொடுத்துட்டேன்.. அதுல நான்கைந்து ஜாதகம் உங்கப் பொன்னு ஜாதகத்தோடப் பொருத்தமாத்தானே இருக்கு! ஆனா எந்த ஜாதகமும் என் பொன்னுக்கு பொருந்திலேன்னு சொல்லி, ஏன் சார் இப்படி எல்லா ஜாதகத்தையும் வேண்டாம்னு சொல்றீங்க? பெண்ணின் அப்பா அண்ணாமலையிடம்தான் தரகர் சின்னத்துரை இப்படி கோபமாகப் பேசிக் கொண்டிருந்தார். அப்படின்னா, உங்கப் பொன்னுக்கு எப்பேர்ப்பட்ட மாப்பிள்ளை வேணும்னு எங்கிட்ட தெளிவாச் சொல்லிடுங்க சார்... நான் அதுக்கு தகுந்த மாதிரி மாப்பிள்ளையை கொண்டு வந்து நிறுத்திடறேன்... நல்ல வசதியா, கை நிறைய சம்பாதிக்கிற பையனா பார்க்கட்டுமா? இல்லேன்னா வெளிநாட்டு மாப்பிள்ளையா பார்க்கலாமா? ஏதா இருந்தாலும் கூச்சப்படாம எங்கிட்ட சொல்லிடுங்க... இதுல ஒன்னும் ஒளிவு மறைவு வேணாம்... என்றார் தரகர்..

யோவ்... என்னாய்யா பேசற... வசதி வாய்ப்பா வேணும்னு நான் ஒன்னும் உங்ககிட்ட கேட்கலையே... நீங்களா கற்பனை பண்ணிக்கிட்டு எதையாவது செஞ்சு



தொலைக்காதீங்கய்யா... பின்னே என்னா சார்... மூணு மாசமா உங்கப் பொன்னுக்கு சீக்கிரம் கல்யாணம் முடிக்கனும்னு அங்க இங்க அலைஞ்சு திரிஞ்சு மாப்பிள்ளை ஜாதகங்களை தேடி பிடிச்சு கொண்டு வந்தா நீங்க பாட்டுக்கு இது சரியில்லை! அது சரியில்லைன்னு சொல்லி நான் கொடுத்த ஜாதகம் எல்லாத்தையும் திருப்பி எங்கிட்டயே கொடுத்துட்டு வரீங்க... எனக்கு ஒன்னுமே புரியல.. .. திரும்பவும் கேட்குறேன்.. உங்க பொண்ணுக்கு எப்படி பட்ட மாப்பிள்ளை வேணும்... சொல்லுங்க! சின்னத் துரை.. நான் சொல்றதை முதல்ல நல்லா புரிஞ்சுக்குங்க... எனக்கு மாப்பிள்ளையா வரவரு, நல்ல ஒழுக்கமானவரா இருக்கனும்.. எந்தவொரு கெட்டப் பழக்கமும் அவருக்கு இருக்கக்கூடாது... குறிப்பா தாடி வச்சிருக்கக்கூடாது... என்னா சார்.. இந்த காலத்துலயும் இப்படி இருக்கீங்க! நல்லா படிச்ச பணக்கார மாப்பிள்ளையா வேணும்னு கேட்பீங்கன்னு பார்த்தா, சாதாரண ஒரு தாடி விசயத்துக்கு இவ்வளவு முக்கியம் தந்து பேசுறீங்க... உங்கள பார்த்தா எனக்கு ஆச்சரியமா இருக்கு! என் சர்வீசுல இது மாதிரி யாரும் சொல்லாத ஒரு புது மாதிரியான தகவலை நீங்க சொல்றீங்க... இந்த காலத்து வாலிப பசங்க எல்லாருமே இப்படித்தான் இளந்தாடி வச்சிகிட்டு திரியறானுங்க! தாடி வச்சிருக்கறதைதான் பெருமையா நினைக்கறாங்க! இதுதானே இளவயசு பசங்க கிட்ட இப்ப பேஷனா இருக்கு...! சின்னத்துரை! அது எப்படியோ எனக்கு தெரியாது! எனக்கு மாப்பிள்ளையா வரவரு தாடி வச்சுக்காம இருக்கனும்...தாடி வச்சிருக்கிற பையன் என் பொன்னுக்கு மாப்பிள்ளையா வரது எனக்கு பிடிக்கல....! தயவு செஞ்சு நான் சொல்ற மாதிரி தாடி வச்சிக்காத பையனா பாருங்க! உங்களால முடியும் என்று அண்ணாமலை சொன்னதைக் கேட்ட தரகர், திருமணம் முடியற வரையிலுமாவது தாடி வச்சிக்காம தினசரி முகச்சவரம் செய்யச் சொல்லி ஒரு மாப்பிள்ளையை பேசி முடிக்க வேண்டியதுதான் என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டு அண்ணாமலையிடமிருந்து விடைபெற்று சென்றார்....



தமிழ்ச் செம்மல்
**-நன்னிலம் இளங்கோவன்.**

# ரஞ்சிதாவும்.. பருவ வயதும்...

சிறு பிள்ளையாக இருந்த ரஞ்சிதா வளர்ந்து பருவ வயதை நெருங்கிக் கொண்டிருந்தாள்

விறகு வாங்குவதற்கு செல்லத்துரை சென்றிருந்தார் விறகு லோடு வந்திருச்சுன்னா அப்போ இடத்தைச் சுத்தம் பண்ண முடியாது ,விறகு வருவதற்கு முன் இருப்பு விறகுகளை ஓரமாக ஒதுக்கி வைத்து கொண்டு இருக்கும் போது கதவைத்திறந்து மெதுவாய் வந்தாள் ரஞ்சிதா காலையில் ராமுவை எழுப்பி அதிர்ச்சியை கொடுக்கனும்னு வந்தவளுக்கு ராமுவைக் காணவில்லை பாத்ரூம் போயி இருப்பாரோ என எண்ணி கடையினுள் வந்தவள் சுற்றும் முற்றும் பார்த்தாள் தென்னை மரத்தருகே இருப்பதைப் பார்த்தவள்

"மாமா நீ ! இங்கேயா இருக்கே காலையிலேயே என்னை பதற வச்சுட்டியே "

வேலையில் மும்மரமாய் இருந்த ராமு குரல் கேட்டு திரும்பிப் பார்த்தவன் "ரஞ்சிதாவா....வாங்கா "எனக் கேட்டபடி விறகுகளை ஒழுங்கு படுத்திக் கொண்டு இருந்தான்.

"மாமா...நா சூடிதாரில் எப்பிடி இருக்கேன் பாத்து சொல்லு மாமா.." என்று ரஞ்சிதா கேட்க, நீயா..? வயக்காட்டுல இருக்குமே... என்னது... சோளக்காட்டு பொம்மை மாதிரி அதக்கூட பார்க்கலாம் உன்ன.... எனச் சொல்லும் போது விசும்பல் சத்தம் கேட்டு திரம்பியவன் "ஏ...ஏ.. நா என்ன சொல்லிட்டேன்னு அழுறே,வேண்டாம் தாயீ,நா சும்மா விளையாட்டுக்கு சொன்னே நீ! பாட்டுக்கு அழுது பார்க்கிறவங்க உன்னை அடிச்சுட்டேன்னு தப்பா நெனக்கப் போறாங்க..."

"காலையிலேயே குளிச்சு புதுசா வாங்கிட்டு வந்த சூடிதாரை போட்டுகிட்டு வந்து உங்க கிட்டே காண்பிச்சு எப்பிடி இருக்குன்னு கேட்டா.." "வேறு யாருகிட்டேயும் காட்டாம எங்கிட்டே எதுக்கு காட்டனும்" என ராமு என கேட்க, "மனசுக்கு பிடிச்ச வங்க கிட்டே தானே கேட்கனும் "என ரஞ்சிதா சொன்னதைக் கேட்டு திரும்பினாள்

ரஞ்சிதா தென்னை மரத்தில் சாய்ந்து கொண்டு இவனையே பார்த்தாள் தென்னை மரத்தில் சாய்ந்திருந்த ரஞ்சிதாவைப் பார்த்ததும் காலையிலேயே எனக்கு காட்சி அளிக்க தேவதையே இறங்கி வந்திருப்பதைப் போல் அசந்து போய் நின்றான் ராமு "மாமா..என்ன மிட்டாய் கடையைப் பார்க்கிற மாதிரி வெறுச்சு போய் நீக்கிறே ! "

சுதாரித்துக் கொண்ட ராமு சும்மா சொல்லக்கூடாது எனக்கு பிடித்த நீலக்கலரில் வெள்ளை கலந்து உன் செவத்த மேனிக்கு சூப்பரா... தேவதை போல் இருக்கே ரஞ்சிதா

"மாமா ...நா உண்மையிலேயே அழகா இருக்கேனா... அப்புறம் ஏ மாமா என்னைக் கண்டதும் வெறுத்து ஒதுங்குறே" என ரஞ்சிதா கேட்கவும்,

நீ ?சிறுமியாக இருக்கும்

போதே,உன்னைப் பார்த்ததும் புடிக்கும் உன் அம்மா அப்பா எதுவும் தப்பா பேசுவாங்கன்னு தான் கட்டுப்படுத்திக் கொண்டேன்.எப்பவும் நீ! என் தேவதை போல் என் மனசுல நெறஞ்சுருக்கே ரஞ்சிதா" என ராமு சொல்லிக் கொண்டே

ஒதுங்க ஒதுங்கத் உன் மேல் பிரியம் என்று தென்னை மரத்தில் சாய்ந்திருந்த ரஞ்சிதா அழகை ரசித்தான் அவன் பேணாவால் அவளின் மேனியில் வைத்து வருடிக் கொண்டே வகிடு இல்லாமல் சீவி பரவலாய் படர்ந்த கேசம், கருவிழிகள் மேல் புருவத்தில் மென்மையாய் மைதீட்டிய மீன் விழிகள், சிறிய அளவில் அவளின் நாசித் துவாரம் வழியாக குளுமையான காற்று சென்று அவள் உணர்வுகளின் உஷ்டன மூச்சு அவனை ஏதோ செய்தது , அவள்



கன்னங்கள் மாம்பழம் போல் ,பருவோ,வடுவோ,இல்லாமல் பளபளன்னு மெழுகு போல் அமைந்த கன்னங்கள்,அதனை ஆசையாய் கிள்ளிப் பார்க்கும் எண்ணம், உன் செவ்விதழ் எப்போதும் தேன் சுரக்கும் ஊற்றை சுவைத்திட துடிக்கும் எண்ணம், கழுத்துக்கு கீழே மெதுவா பேணாவை இறக்கியவன் அவள் மார்புகள் இரண்டும் உணர்வலைகளால் உந்துதல் ஏற்பட்டு சூடிதாருக்கு மேல் விம்மிக் கொண்டிருந்தன,அதைப் பார்த்ததும் பின் தங்கினான். ரஞ்சிதா பருவத்தின் வாசலில் புத்தம் புதிய மலராய் மலர்ந்து கொண்டு இருந்தாள் அவள் கன்னங்கள் பழுத்த பழமாய் சிவந்து காணப்படுவதை உணர்ந்தவன் அங்கிருந்து நகரத் தொடங்கினான்

அவன் வருடி மேனியில் உணர்வலைகள் கிளர்ந்தெழுந்து கண்களை மூடி ராமுவின் வார்த்தைகளைக் கேட்டு உணர்வகளால் புத்துணர்வு பெற்று இளமை பருவத்தின் நெருடலில் தன்னை மறந்து செவிவழியே கேட்டு சிறைப்பட்டிருந்த நேரத்தில் அமைதியைக் கண்டு விழித்துப் பார்த்தாள் ரஞ்சிதா

ராமு சற்று தூரம் நடந்து போய்க் கொண்டிருப்பதைப் பார்த்து , தன்னை அணைத்து தன் மேனியின் உணர்வை பகிர்ந்து கொள்வான் என எண்ணியவளுக்கு ஏமாற்றமே ஏற்பட்டதைத் தாங்காமல் அவன் பின்னாடியே சென்று அவனை அப்படியே கைகளால் பின்னி அணைத்துக் கொண்டாள் அவள் மார்புகள் அவன் உடலோடு அழுத்திட அவன் சுதாரித்துக் கொண்டு அவள் பின்னிய கைகளை விடுவித்தவன் "ரஞ்சிதா எல்லை மீறிப் போறே முதல்ல இங்கிருந்து கிளம்பு, வீட்டுக்கு போ அம்மா தேடுவாங்க "எனச் சொல்லிக் கொண்டு இருக்கும் போது கதவு திறக்கும் சத்தம் கேட்டு வாசலைப் பார்த்தான்

சுசிலா கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தாள் அதிர்ச்சியானான் ராமு இதை எதிர்பார்த்திராத ரஞ்சிதா அம்மாவை கண்டதும் திகைத்துப் போனவள், "அம்மா நா இங்கே வரக்கூடாது என்று விரட்டுறாரு மாமா" என சமாளித்தாள் ரஞ்சிதம்

இங்கே என்னடி உனக்கு வேல, சாப்பிடாம வந்திருக்கே எனச் சொல்லிக் கொண்டே ராமு கையில் வைத்திருந்த சிறிய நோட்டை பிடிங்கிப் பார்த்தாள் சுசிலா , இதை சற்றும் எதிர்பார்க்காத இருவரும் பயத்தில் இருக்க,

"மாமா இருப்பு விறகுகளை கணக்கு எடுக்கச் சொன்னார்" என சொல்லவும் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருக்கும் போது

அம்..மா.. என ரஞ்சிதா வயிற்றைப் பிடித்து உட்கார்ந்தாள், இதைச் சற்றும் எதிர்பார்க்காத சுசிலா "என்னடி என்னாச்சு என பதறியபடி ரஞ்சிதா விடம் வந்தவள் ஒதுக்கு புறமா இருந்த பாத்ரூமிற்கு கைத்தாங்கலாக அழைத்துச் செல்ல ராமு அதிர்ச்சியானவனாய் ரஞ்சிதாவைப் பார்த்தான் ரஞ்சிதா வயிற்று வலியிலும் ராமுவைத் திரும்பி பார்த்துக் கண்ணடித்து உதட்டைக் குவித்து முத்தத்தைக் காற்றில் தவழ விட்டு,அம்மாவின் பின்னாள் சென்றாள் ரஞ்சிதாவின் செய்கைக் கண்டு பதறியபடி, சுசிலா கீழே விட்டு சென்ற நோட்டை எடுத்துக் கொண்டு, வெளியே மும், உள்ளேயும் மாறி மாறிப் பார்த்தான்.

சிறிது நேரம் கழித்து சுசிலா வெளியே வர பின்னால் வயிற்றைத் தடவிக் கொண்டே வந்தாள் ரஞ்சிதா ராமு அருகில் வரவும் சற்று தாமதிக்காமல் ரஞ்சிதா ராமுவின் கன்னத்தின் முத்தம் கொடுத்து அவன் கைகளைப் பிடித்தாள் இதை சற்றும் எதிர்பார்க்காத ராமு நடிங்கிப் போய் கையை உதறினான் முன்னே சென்ற சுசிலா ஏதோ நினைத்தவளாய் திரும்பினாள் "தம்பி, வேப்ப இலை குச்சியை கொஞ்சம் ஒடிச்சிட்டு வா "எனச் சொல்ல,

பாத்ரூம் அருகில் இருந்த வேப்ப மரத்தில் ஒரு குச்சியை ஒடித்து வந்தான் ராமு அதை வாங்கிய சுசிலா இங்கே வாடி இடுப்பில் கொஞ்சமும் தலையில் இலைகளையும் சொருகி வைத்தாள்

"அக்கா ரஞ்சிதா வுக்கு என்னக்கா ஆச்சு "எனக் கேட்க "ரஞ்சிதா பெரிய மனுசியாட்டா "என்று சொல்லாவும் , "அப்படின்னா...." "அதுவா.. உனக்கு புரியாது,மாமா வந்ததும் வீட்டுக்கு வரச் சொல்லு நா வீட்டுக்கு போறேன்னு " சொல்லவும் சரிக்கா எனச் சொல்லிக் கொண்டே ரஞ்சிதாவைப் பார்த்தான் ரஞ்சிதா மெல்லிய புன்னகையால் அவனை கிறங்க வைக்க ராமு ரஞ்சிதாவின் முகப்பூரிப்பைப் பார்த்து கண்ணால் வாழ்த்து சொல்ல ரஞ்சிதா சுசிலாவின் கைப்பிடியில் சென்று கொண்டே இடது கையால் கையை அசைத்து நன்றி சொன்னாள் .



**- நல.ஞானபண்டிதன்**
திருப்புவனம் புதூர்

# செம்பு குடங்களில் நீர் எதற்கு?

அந்தக் காலங்களில் நம் சித்தர்கள் செம்பு குடங்களில் தான் தண்ணீரை பிடித்து வைப்பார்கள். ஆனால் இன்றோ, நாடே நவீனமயமாகிவிட்டதால், கேன் வாட்டர், மினரல் வாட்டர் என்று பலவகைகளில் தண்ணீர் முந்திக்கொண்டு வர செம்புக் குடங்கள் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டன.

சித்தர்கள் தண்ணீரை செம்பு குடங்களில் பிடித்து வைப்பார்கள் ஏன் தெரியுமா?

செம்புப் பாத்திரத்தில் 24-மணி நேரம் குடிநீரை வைத்திருந்து பரிசோதித்துப் பார்த்ததில், மனிதர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் நுண்ணுயிரிகள் எதுவும் அந்த நீரில் இல்லை என்று தெரியவந்தது. கிணற்றில் கிடைக்கின்ற தண்ணீர், செம்புக் குடத்துக்குப் போனதும் 'மினரல் வாட்டர்' போல அருமையாக மாறிவிடுகிறதாம். மாசம் நூற்றுக்கணக்கான ரூபாய் மிச்சமாகும்.

அந்தக் காலத்தில் பல வீடுகளில் செம்புக்குடம்தான். இன்றைக்கும் சில கிராமங்களில் செம்பு குடத்தில்தான் தண்ணீர் குடிக்கிறார்கள்.

தாமிரம் அல்லது செம்பு பாத்திரத்தில் நிரப்பப்பட்ட தண்ணீரை குடித்தால் நாம் ஆரோக்கியமாக இருக்கலாம் என்பது பழங்காலமாக இந்தியாவில் நிலவி வரும் நம்பிக்கையாகும். பானை அல்லது குடம் வடிவத்தில் உள்ள தாமிர பாத்திரத்தில் நம் தாத்தா பாட்டி தண்ணீர் பருகுவதை நாம் கண்டிருப்போம்.

தாமிர பாத்திரத்தில் நிரப்பப்பட்ட தண்ணீரால் கிடைக்கும் உடல் நல பயன்களை பெறுவதற்கு பலரும் தண்ணீரை தாமிர கோப்பையில் நிரப்பி பருகுகின்றனர். ஆனால் இந்த நம்பிக்கையில் அறிவியல் சார்ந்த உண்மை ஏதேனும் உள்ளதா? வாங்க பார்க்கலாம்!

பண்டைய அறிவியல் படி, உடம்பில் உள்ள மூன்று தோஷங்களான வாதம், பித்தம், சிலேத்துமம் (கபம்) போன்றவற்றை சரியான அளவில் சமநிலையுடன் வைத்திருக்க தாமிரம் உதவுகிறது. அதனால் தாமிர பானையில் இருந்து தண்ணீரை குடித்தால், உங்கள் உடலில் உள்ள இந்த தோஷங்கள் சமநிலையுடன் பராமரிக்கப்படும்.

இதுபோக, தண்ணீர் மக்கி போகாமல் இருக்க தாமிரம் ஒரு எலெக்ட்ரோலைட்டாக செயல்படும். அதனால் தாமிர பாத்திரத்தில் வைத்துள்ள தண்ணீர், நாட்கணக்கில் நற்பதத்துடன் விளங்கும். தாமிர பாத்திரத்தில் வைத்துள்ள தண்ணீரை பருகுவதனால் கிடைக்கும் பல்வேறு உடல்நல பயன்கள் கீழ்வருமாறு:



பாக்டீரியாக்களை கொல்லும் தண்ணீரில் உள்ள நோய் கிருமிகளை ஒழிக்கும் குணத்தை கொண்டுள்ளது தாமிரம். முக்கியமாக வயிற்று போக்கினால் உண்டாகும் ஈ-கோலி போன்ற பாக்டீரியாக்களுக்கு எதிராக இது சிறப்பாக செயல்படும். அதனால் தாமிர பானையில் வைக்கப்பட்டுள்ள தண்ணீர் இயற்கையாகவே சுத்தமானவையாக இருக்கும்.

தைராய்டு செயல்பாட்டை ஒழுங்குப்படுத்தும் தாமிரம் என்பது அரியக் கனிமமாகும். தைராய்டு சுரப்பி சீராக செயல்பட இது அதிமுக்கியமானதாக கருதப்படுகிறது. பல நேரங்களில், தாமிர குறைபாடு இருக்கையில், தைராய்டு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் உண்டாகும். தாமிர பானையில் உள்ள தண்ணீரை குடிப்பதால் உடல்நல பிரச்சனைகளை சமநிலையில் வைத்திடும்.

கீல்வாத வலியை குணப்படுத்தும் தாமிரத்தில் அழற்சி நீக்கும் குணங்கள் அளவுக்கு அதிகமாக அடங்கியுள்ளது. கீல்வாதத்தினால் மூட்டுக்களில் ஏற்படும் வலியை குணப்படுத்த இது பெரிதும் உதவுகிறது.

புண்களை வேகமாக குணப்படுத்தும் புதிய அணுக்களை உருவாக்கி அதனை வேகமாக வளரச் செய்ய தாமிரம் உதவும். இதனால் புண்கள் வேகமாக குணமாகும். இதிலுள்ள வைரஸ் நீக்கி மற்றும் பாக்டீரியா நீக்கி குணங்கள் தொற்றுக்களின் வளர்ச்சியை தடுக்கும்.

மூளை நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் மூளையில் உள்ள நரம்பணுக்களுக்கு மத்தியில் உள்ள இடைவெளிகளை பாதுகாக்க மயலின் உறைகள் அதனை மூடும். இந்த மயலின் உறைகளை உருவாக்க கொழுப்பு வகைப் பொருட்களை தொகுக்க தாமிரம் உதவுகிறது. இது போக வலிப்பு வராமலும் அது தடுக்கும்.

செரிமானத்தை மேம்படுத்தும் வயிற்றை மெதுவாக சுருக்கி விரிவாக்க ஊக்குவிக்கும் அறிய குணத்தை தாமிரம் கொண்டுள்ளது. இதனால் செரிமானம் சிறப்பாக நடைபெறும். அதனால் தான் தாமிரம் கலந்துள்ள தண்ணீரை பருகினால் ஆரோக்கியமான செரிமான அமைப்பை பெற்றிடலாம்.

இரத்த சோகையை எதிர்க்கும் நம் உடலில் இரத்த சிவப்பணுக்களின் உற்பத்தியின் அதிகரிக்க தாமிரம் உதவுகிறது. இரத்த சோகையை எதிர்க்க இரும்பு மிக முக்கியமான கனிமமாகும். இதற்கு தாமிரமும் சிறிய அளவில் தேவைப்படும்.

கர்ப்ப காலத்தில் உங்களையும், உங்கள் குழந்தையும் பாதுகாக்க உங்கள் நோய் எதிர்ப்பு சக்தி விசேஷ சவாலை சந்திக்கும். அதனால் கர்ப்ப காலத்தில் தாமிர பானையில் உள்ள தண்ணீரை குடித்தால், தொற்றுக்கள் மற்றும் நோய்வாய் படாமல் பாதுகாப்போடு இருக்கலாம்.

புற்றுநோய்க்கு எதிராக பாதுகாக்கும் தாமிரத்தில் சிறப்பான ஆன்டி-ஆக்ஸிடன்ட் குணங்கள் அடங்கியுள்ளது. அதனால் தான் புற்றுநோய் அணுக்கள் வளர விடாமல் அது பாதுகாக்கிறது. மேலும் இயக்க உறுப்புகளால் உடலில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சரி செய்ய இது உதவும்.

வயதாகும் செயல்முறை குறையும் தாமிரத்தில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட் குணங்கள், சருமத்தில் ஏற்படும் சுருக்கங்கள் மற்றும் திட்டுகளை சிறப்பாக கையாளும். கூடுதல் அளவிலான தாமிரத்தால், உங்கள் சருமம் மற்றும் முடிக்கு இயற்கையான இரத்த ஓட்டம் கிடைக்கும்.

எனவே தாமிரப் பத்திரத்தில் வைத்த தண்ணீரை பருகுவோம்; ஆரோக்கியமாக வாழ்வோம்!



**ப.கோபிபச்சமுத்து**
பாரதியார் நகர்,
கிருஷ்ணகிரி - 1

**தினம் ஒரு தலைவர்கள்**

# ஷஹீத் சிவராம் ராஜகுரு வரலாறு

ராஜ்குரு 1908 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் தேதி மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள கேத் என்ற இடத்தில், பூனாவிற்கு அருகிலுள்ள பீமா நதிக்கரையில் பிறந்தார். அவர் தேசஸ்தா பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தார். அவரது தாயார் பெயர் ஸ்ரீமதி பார்வதி தேவி மற்றும் அவரது தந்தையின் பெயர் ஸ்ரீ. ஹரிநாரைன் ராஜ்குரு. அவரது முழுப் பெயர் 'ஹரி சிவராம் ராஜ்குரு' அல்லது 'சிவ்ராம் ஹரி ராஜ்குரு'. ஒவ்வொரு ஆகஸ்ட் 24 ஆம் தேதியும், ராஜ்குரு பிறந்தநாளில், சஹீத் ராஜ்குருவின் துணிச்சலான செயல் மற்றும் தியாகத்தை நினைவுகூரும் வகையில் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது. ராஜ்குருவின் பிறந்த நாள் இந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாகும்.

சஹீத் சிவராம் ராஜகுரு மற்றும் அவரது வாழ்க்கை பற்றிய உண்மைகள் 1914 ஆம் ஆண்டு, அவருக்கு ஆறு வயதாக இருந்தபோது, அவரது தந்தை இறந்தார். அவரது குடும்பப் பொறுப்பு அவரது சகோதரரின் தோள்களில் விழுந்தது. அவரது சகோதரர் தின்கர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தனது தாய்க்கும் சகோதரருக்கும் உணவளித்தார். அவர் உள்ளூரில் கெட் நகரில் தொடக்கக் கல்வியைப் பெற்றார், பின்னர் புனேவில் (பூனா) உள்ள நியூ இங்கிலீஷ் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். அவரது தந்தை இறந்தபோது அவரது சகோதரர் அவரைக் கவனித்துக் கொண்டார், மேலும் அவரது குடும்பத்தினர் சிவராம் ராஜ்குருவைப் பற்றி சில கனவுகளைக் கொண்டிருந்தனர், ஆனால் விதி பின்னர் மாறியது.
அவர் சிறு வயதிலிருந்தே அரசியலில் ஆர்வம் கொண்டிருந்தார், மேலும் இளம் வயதிலேயே சேவா தளத்திலும் சேர்ந்தார். டாக்டர் என்.எஸ். ஹர்திகர் சிவராம் ராஜ்குருவின் வாழ்க்கையில் ஒரு முக்கிய கதாபாத்திரம், ஏனெனில் அவர்தான் ராஜ்குரு அணுகிய முதல் மனிதர். டாக்டர் என்.எஸ். ஹர்திகர் நடத்திய பல பயிற்சி முகாம்களிலும் அவர் கலந்து கொண்டார். சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றிய கதைகளைக் கேட்பது வழக்கம், மேலும் லோக்மான்ய திலகரின் புரட்சிகர கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார்.

15 வயதில், அவர் வாரணாசிக்கு நடந்து சென்று ஒரு சமஸ்கிருதப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். வாரணாசியை அடைய ஆறு நாட்கள் ஆனது என்று கூறப்படுகிறது. அந்தப் பள்ளியில், அவரைப் போன்ற புரட்சியாளர்களான சில புதிய நண்பர்களை அவர் உருவாக்கினார். படிப்படியாக அவரது நோக்கம் தெளிவாகியது. பிரிட்டிஷ் காலனித்துவவாதிகளை வீழ்த்துவதே அவரது ஒரே குறிக்கோள். அவர் வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். இந்தியாவுக்கு எந்த வகையிலும் சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

தனது கனவை நனவாக்க, அவர் இந்துஸ்தான் சோசலிச குடியரசு இராணுவத்தில் சேர்ந்தார். பகத் சிங் மற்றும் சுக்தேவ் ஆகியோரை சந்தித்தது அவரது வாழ்க்கையின் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகும். சுதந்திரம் பற்றிய ஒரே கருத்தை அவர்கள் தங்கள் இதயங்களிலும் மனங்களிலும் பகிர்ந்து கொண்டதால் அவர்களின் நட்பு மிகவும் வலுவாக வளர்ந்தது.

சைமன் கமிஷனும் அதன் பின்விளைவுகளும் ஆங்கிலேயர்களால் ஒரு புதிய காப்பக ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியர்கள் இந்த புதிய சீர்திருத்தத்தை திருத்துமாறு கோரினர். 1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி, நாட்டின் முன்னேற்றத்தை ஆராய்வதற்கும், அரசாங்கத் திட்டங்கள் பொதுமக்களை எவ்வாறு சென்றடைகின்றன என்பதை ஆராய்வதற்கும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு ஆணையம் அமைக்கப்படும் என்று கூறப்பட்டது. மேலும் அறிக்கைகளின் அடிப்படையில், புதிய திட்டங்கள் உருவாக்கப்படும், மேலும் தேவையான சீர்திருத்தங்களைச் செய்யலாம். இதற்காக, பிரிட்டிஷ்காரர் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்தி ஒரு குழுவை அமைத்தார். இந்தக் குழுவிற்கு சர் ஜான் சைமன் என்ற பிரிட்டிஷ்காரர் தலைமை தாங்கினார்.



ஏழு எம்.பி.க்கள் கொண்ட ஒருவர் இந்தியாவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகிறார் என்பதால் இந்திய மக்கள் கோபமடைந்தனர், ஆனால் அந்த ஏழு பேர் கொண்ட குழுவில் ஒரு இந்தியர் கூட இல்லை. 1927 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் பல போராட்டங்களை நடத்தி, சைமன் கமிஷனைப் புறக்கணிக்குமாறு இந்தியர்களிடம் முறையிட்டது, மேலும் அப்போதைய இந்திய வெளியுறவுச் செயலாளராக இருந்த லார்ட் பிர்கன்ஹெட்டை சவால் செய்தது. அனைத்து இந்திய மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அரசியலமைப்பை உருவாக்குமாறு அவர்கள் செயலாளரிடம் கேட்டுக் கொண்டனர். முகமது அலி ஜின்னா தலைமையிலான முஸ்லிம் லீக்கும் சைமன் கமிஷனைப் புறக்கணிக்க முடிவு செய்தது.

சைமன் கமிஷன் ஜனவரி 1928 இல் இங்கிலாந்தை விட்டு வெளியேறியது, அவர்கள் வந்தவுடன், வழியில் பெரும் போராட்டங்கள் நடந்தன. மக்கள் கமிஷனை கருப்புக் கொடிகளுடன் வரவேற்றனர். இந்தியாவின் கிட்டத்தட்ட அனைத்து முக்கிய நகரங்களிலும் இதேபோன்ற போராட்டங்கள் நடந்தன. அவற்றில் 'சைமன் கமிஷனுக்கு' எதிரான ஒரு போராட்டம் பிரபலமானது அல்லது மிகவும் பிரபலமற்றது. அக்டோபர் 30, 1928 அன்று, கமிஷன் லாகூருக்கு வந்தபோது, அவர்களை கருப்புக் கொடிகளுடன் வரவேற்கத் தயாராக இருந்த போராட்டக்காரர்களை அவர்கள் எதிர்கொண்டனர். அந்த குறிப்பிட்ட போராட்டத்திற்கு இந்திய தேசியவாதியான லாலா லஜ்பத் ராய் தலைமை தாங்கினார். அந்த ஆண்டு பிப்ரவரியில் பஞ்சாப் சட்டமன்றத்தில் இந்த கமிஷனுக்கு எதிராக அவர் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். பின்னர் உள்ளூர் போலீசார் போராட்டக்காரர்களை அடிக்கத் தொடங்கினர். அந்த போராட்டத்தில், மற்றவற்றுடன், தலைவராக இருந்த லாலா லஜ்பத் ராய் படுகாயமடைந்தார். சில நாட்களுக்குப் பிறகு அவர் இறந்தார்.

இந்தச் செய்தி இந்தியாவில் காட்டுத்தீ போல பரவியது. மக்கள் ஆத்திரமடைந்தனர். 1928 ஆம் ஆண்டு லாகூரில் பிரிட்டிஷ் காவல்துறை அதிகாரி ஜே.பி. சாண்டர்ஸைக் கொல்ல பகத் சிங் மற்றும் சுக்தேவ் ஆகியோருடன் சேர்ந்து ராஜ்குரு ஒரு திட்டத்தை வகுத்தார். லாலா லஜ்பத் ராயின் மரணத்திற்குப் பழிவாங்குவதற்காக. பல இந்தியர்கள் இந்த செயலைப் பாராட்டினர். பல இந்திய குடிமக்கள் இதைக் கண்டித்தனர். இந்திய தேசிய காங்கிரஸ் இந்தச் செயலைக் கண்டித்தது. ஆனால் இறுதியில், இது இந்திய மனங்களிலும் இதயங்களிலும் ஒரு புரட்சியைத் தூண்டியது - அவர்களால் ஈர்க்கப்பட்ட ஒரு தலைமுறை சுதந்திரப் போராளிகள் புரட்சியை விரைவுபடுத்தினர்.

சிவராம் ராஜகுரு படுகொலைக்குப் பிறகு என்ன நடந்தது? படுகொலைக்குப் பிறகு, ராஜகுரு ஒரு தப்பியோடிய வாழ்க்கை வாழ்ந்தார். அவர் நாக்பூருக்கு ஒளிந்து கொள்ளச் சென்றார். நாக்பூரில் உள்ள ஒரு ஆர்.எஸ்.எஸ் ஊழியரின் வீட்டில் தஞ்சம் புகுந்து கே.பி. ஹெட்கேவரைச் சந்தித்தார். புனேவுக்குத் திரும்பும் வழியில், அவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். பகத் சிங், சுக்தேவ் மற்றும் ராஜகுரு ஆகிய மூன்று பேரும், மேலும் 21 சக சதிகாரர்களும் கைது செய்யப்பட்டு வெளிப்படையாக வடிவமைக்கப்பட்ட ஒரு விதிமுறையின் கீழ் விசாரிக்கப்பட்டனர். அவர்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக சிறையில் இருந்தனர். அவர்களின் கதை இந்திய மக்களுக்கு தொடர்ந்து உத்வேகம் அளித்தது. ராஜகுரு, இரண்டு துணிச்சலான மனிதர்களுடன் சேர்ந்து, 1931 மார்ச் 23 அன்று தூக்கிலிடப்பட்டார். பின்னர், அவர்களின் உடல்கள் சட்லஜ் நதிக்கரையில் தகனம் செய்யப்பட்டன. சிவராம் ராஜகுரு தியாகியானபோது அவருக்கு வயது வெறும் 23. அவருக்கு இரும்பு இதயம், அச்சமற்ற மனப்பான்மை மற்றும் தைரியம் இருந்ததாக அவரது நெருங்கிய கூட்டாளிகள் கூறுகிறார்கள். பகத் சிங்கின் கட்சியின் 'துப்பாக்கி ஏந்தியவர்' அவர். இந்த துணிச்சலான செயல்களைக் கேட்டு, நாம் நம்மை நாமே கேள்வி கேட்க வேண்டும், நாம் சுதந்திரத்திற்கு தகுதியானவர்களா? சிவராம் ராஜகுரு போன்ற பெரிய மனிதர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்த அதே மக்களால் இந்த சுதந்திரம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. வன்முறை, கலவரங்கள், திருட்டுகள் மற்றும் ஊழல்கள் நம் தேசத்தை முடக்கியுள்ளன. அரசியல்வாதிகள், தங்கள் லாபத்திற்காக, நம் மக்களைப் பிரிக்கிறார்கள், மேலும் வாக்களிப்பின் சக்தி என்ன, நமது தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தைப் பெறுவதற்கு எவ்வளவு வன்முறை மற்றும் மனித உயிர் செலவாகும் என்பது மக்களுக்கு இன்னும் தெரியாது. ஜனநாயகத்திற்கும் ஒரு விலை உண்டு. மக்களுக்குத் தேவையானது செயல்பாட்டில் பங்கேற்பதுதான். ஜனநாயகம் ஒரு சுறுசுறுப்பான விளையாட்டு போன்றது. நாம் வாக்களிக்கும்போது நமது வேலை முடிவடைவதில்லை; மாறாக, அது நாம் வாக்களிக்கும்போது தொடங்குகிறது. நாம் அற்பமான தனிப்பட்ட மற்றும் குறுகிய கால ஆதாயங்களுக்காக விழுகிறோம், நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கக்கூட மாட்டோம். நாம் அனுபவிக்கும் சுதந்திரம் ஒரு விலையில் வருகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நீண்ட காலத்திற்கு முன்பு நடப்பட்ட மரங்களின் பழங்களை நாம் அனுபவித்து வருகிறோம். நாம் அனுபவிக்கும் சுதந்திரத்தை பயனுள்ளதாக மாற்ற தேசத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

# வசூல் வரவேற்பில் ‘ஆண்பாவம் பொல்லாதது’: படக்குழுவினர் மகிழ்ச்சி

‘ஆண்பாவம் பொல்லாதது’ படத்துக்கு வசூல் ரீதியாக பெரும் வரவேற்பு கிடைத்திருப்பதாக படக்குழுவினர் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள்.


அக்டோபர் 31-ம் தேதி ரியோ ராஜ் நடிப்பில் வெளியான படம் ‘ஆண்பாவம் பொல்லாதது’. இப்படத்துக்கு வசூல் ரீதியாக மாபெரும் வரவேற்பு கிடைத்திருக்கிறது. முதல் நாள் சின்ன திரையரங்குகள், குறைந்த காட்சிகள் என வெளியானது. ஆனால் மக்கள் மத்தியில் வரவேற்பு கிடைத்ததைத் தொடர்ந்து, அனைத்து பெரிய திரையரங்குகளிலும் இப்படத்தினை மாற்றியிருக்கிறார்கள். மேலும், காட்சிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றத்தினால் படத்தின் வசூல் பல மடங்கு அதிகரித்து வருகிறது. டிக்கெட் புக்கிங் தளத்தில் ஒரு மணி கணக்கின்படி ட்ரெண்டாகி வருகிறது. இப்படத்தின் இறுதி வசூல் நிலவரப்படி, ரியோ ராஜ் படங்களில் அதிக வசூல் செய்த படம் என்ற சாதனையை படைக்கும் என வர்த்தக நிபுணர்கள் கணித்திருக்கிறார்கள். முதல் மூன்று நாட்களிலேயே மொத்த வசூல் 5 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கலையரசன் தங்கவேல் இயக்கத்தில் வெளியாகியுள்ள



இப்படத்தில் மாளவிகா மனோஜ், ஷீலா, ஆர்.ஜே.விக்னேஷ்காந்த், இயக்குநர் வெங்கடேஷ் உள்ளிட்ட பலர் ரியோ ராஜ் உடன் நடித்துள்ளனர். சித்து குமார் இசையமைத்துள்ள இப்படத்தினை ட்ரம்ஸ்டிக் புரொடக்‌ஷன்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இதன் தமிழக உரிமையினை கைப்பற்றி வெளியிட்டுள்ளது ஏஜிஸ் நிறுவனம்.





தாராள கவர்ச்சி உடையில் நடிகை திவ்ய பாரதி லேட்டஸ்ட் போட்டோஷூட். ஹாட் ஸ்டில்களை பாருங்க.

# தனுஷுக்கு நாயகியாகும் பூஜா ஹெக்டே?





தனுஷ் நடிக்கவுள்ள புதிய படத்தின் நாயகியாக பூஜா ஹெக்டேவிடம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள்.

’போர் தொழில்’ இயக்குநர் விக்னேஷ் ராஜா இயக்கி வரும் படத்தில் கவனம் செலுத்தி வருகிறார் தனுஷ். இதனை வேல்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது. இதில் மமிதா பைஜு நாயகியாக நடித்து வருகிறார். இசையமைப்பாளராக ஜி.வி. பிரகாஷ் பணிபுரிந்து வருகிறார். இப்படத்தினை முடித்துவிட்டு கோபுரம் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கும் படத்தில் கவனம் செலுத்தவுள்ளார் தனுஷ்.

இப்படத்தினை ‘அமரன்’ இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி இயக்கவுள்ளார். இதற்கான ஆரம்பகட்ட பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதில் நாயகியாக பூஜா ஹெக்டே, இசையமைப்பாளராக சாய் அபயங்கர் ஆகியோரிடம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இன்னும் ஒப்பந்தமாக கையெழுத்தாகவில்லை. விரைவில் படப்பிடிப்பு தேதிகள் முடிவானவுடன் ஒப்பந்தம் கையெழுத்தாகும் எனத் தெரிகிறது. ‘அமரன்’ வெற்றிக்குப் பிறகு ராஜ்குமார் பெரியசாமி இயக்கும் படம் என்பதால் இப்படத்துக்கு பெரும் எதிர்பார்ப்பு இருக்கிறது. இதன் படப்பூஜை முடிவடைந்துவிட்டது. இப்படத்தினையும் ஒரே கட்டமாக தேதிகள் கொடுத்து முடிக்க தனுஷ் திட்டமிட்டு இருக்கிறார்.

# ராஷ்மிகா மந்தனா படத்துக்காக ரூ. 1 கோடியில் உருவான பாடல் காட்சி நீக்கம்!

ராஷ்மிகா மந்தனா கதாநாயகியாக நடித்துள்ள படம் ‘த கேர்ள்ஃபிரண்ட்’. ரோகிணி, தீக்‌ஷித் ஷெட்டி, அனு இம்மானுவேல் உள்பட பலர் நடித்துள்ள இப்படத்தை ராகுல் ரவீந்திரன் இயக்கியுள்ளார். முதலில் இதில் சமந்தா நடிப்பதாக இருந்தது. அவர் விலகியதால் ராஷ்மிகா மந்தனா நடித்துள்ளார். இப்படம் நவ. 7-ல் வெளியாக இருக்கிறது.

இந்தப் படத்துக்காக, ரூ. 1 கோடி செலவில் காதல் பாடல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடல் யூடியூப்பில் வெளியாகி வரவேற்பைப் பெற்று வருகிறது. இந்நிலையில், இந்தப் படத்தை பார்த்த தயாரிப்பாளர்கள், இந்தப் பாடலைச் சேர்க்க வேண்டாம் என்று முடிவு செய்துள்ளனர். கதையோட்டத்துடன் பொருந்தவில்லை என்று கூறி இப்பாடலை அவர்கள் நீக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.



இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை மியா ஜார்ஜ், தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை அதில் பதிவு செய்து வருகிறார். இந்த நிலையில், தற்போது தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் போட்டோக்களை வெளியிட்டுள்ளார்.

# விருதுகளை குவித்த ‘மஞ்ஞும்மல் பாய்ஸ்’, சிறந்த நடிகர் மம்மூட்டி

55வது கேரள மாநில அரசின் திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் ‘மஞ்ஞும்மல் பாய்ஸ்’ திரைப்படம் அதிக விருதுகளை குவித்துள்ளது. ‘பிரம்மயுகம்’ படத்துக்காக மம்மூட்டிக்கு சிறந்த நடிகர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சூரில் உள்ள ராமநிலயத்தில் நடைபெற்ற இந்த விழாவில், கேரள கலாச்சாரம் மற்றும் திரைப்படத்துறை அமைச்சர் சஜி செரியன் வெற்றியாளர்களை அறிவித்தார். நடிகர் பிரகாஷ் ராஜ் தலைமையிலான ஏழு பேர் கொண்ட நடுவர் குழு இந்த விழாவில் கலந்து கொண்டது.

சிறந்த நடிகர் விருதை வென்றதன் மூலம் 7 முறை கேரள அரசின் சிறந்த நடிகர் விருதை வென்ற ஒரே நடிகர் என்ற பெருமையை மம்மூட்டி பெற்றுள்ளார். அவருக்கு அடுத்தபடியாக மோகன்லால், ஊர்வசி இருவரும் 6 முறை வென்றுள்ளனர்.

வெற்றியாளர்களின் முழு பட்டியல்:

சிறந்த நடிகர் : ’பிரம்மயுகம்’ படத்துக்காக மம்மூட்டி

சிறந்த நடிகை: ’ஃபெமினிச்சி பாத்திமா’ படத்துக்காக ஷம்லா ஹம்சா

சிறந்த இயக்குநர்: ’மஞ்ஞும்மல் பாய்ஸ்’ படத்துக்காக சிதம்பரம்





சிறந்த குணச்சித்திர கலைஞர் (பெண்): ’நாடன்ன சம்பவம்’ படத்துக்காக லிஜோமோல் ஜோஸ்

சிறந்த குணச்சித்திர நடிகர் (ஆண்): சவுபின் ஷாஹிர் (’மஞ்ஞும்மல் பாய்ஸ்’) மற்றும் சித்தார்த் பரதன் (’பிரம்மயுகம்’)

நடிப்புக்கான சிறப்பு ஜூரி விருது (ஆண்): ’ARM’ மற்றும் ’கிஷ்கிந்தா காண்டம்’ படங்களுக்காக டோவினோ தாமஸ் மற்றும் ஆசிப் அலி

நடிப்புக்கான சிறப்பு ஜூரி விருது (பெண்): ’போகேன்வில்லா’ படத்துக்காக ஜோதிர்மயி மற்றும் ’பாரடைஸ்’ படத்துக்காக தர்ஷனா ராஜேந்திரன்

சிறந்த இரண்டாவது படம்: ’ஃபெமினிச்சி பாத்திமா’

சிறந்த அறிமுக இயக்குனர்: ’ஃபெமினிச்சி பாத்திமா’ படத்துக்காக ஃபாசில் முகமது

சிறந்த பிரபலமான திரைப்படம்: ’பிரேமலு’

சிறப்பு ஜூரி பெண்கள்/ திருநங்கைகளுக்கான விருது: ’ஆல் வி இமேஜின் அஸ் லைட்’ படத்துக்கா பாயல் கபாடியா

சிறந்த கதை: ’பாரடைஸ்’ படத்துக்காக பிரசன்னா விதானேஜ்

சிறந்த திரைக்கதை: ’போகன்வில்லா’ படத்துக்காக லாஜோ ஜோஸ் மற்றும் அமல் நீரட்

சிறந்த VFX: ’ஏஆர்எம்’

சிறந்த நடன இயக்குனர்: ’போகன்வில்லா’ படத்துக்காக சுமேஷ் சுந்தர், ஜிஷ்ணுதாஸ் எம்.வி.

சிறந்த ஆடை வடிவமைப்பு: ’ரேகசித்ரம்’ மற்றும் ’போகன்வில்லா’ படங்களுக்காக சமீரா சனீஷ்

சிறந்த ஒப்பனை கலைஞர்: ’போகன்வில்லா’ மற்றும் ’பிரம்மயுகம்’ படங்களுக்காக ரோனெக்ஸ் சேவியர்

சிறந்த ஒத்திசைவு ஒலி: ’பானி’

சிறந்த இசையமைப்பாளர்: ’போகன்வில்லா’ படத்துக்காக சுஷின் ஷ்யாம்

சிறந்த பின்னணி இசை: ’பிரம்மயுகம்’ படத்துக்காக கிறிஸ்டோ சேவியர்

சிறந்த ஒளிப்பதிவு: ’மஞ்ஞும்மல் பாய்ஸ்’ படத்துக்காக ஷைஜு காலித்

சிறந்த பாடலாசிரியர் (ஆண்): ’மஞ்ஞும்மல் பாய்ஸ்’ மற்றும் ’குத்தந்திரம்’ படங்களுக்காக வேடன்

சிறந்த பின்னணி பாடகி: ’அம் ஆ’ படத்தின் ’ஆரோரம்’ பாடலுக்காக ஜெபா டாமி

சிறந்த பின்னணி பாடகர்: ’ஏஆர்எம்’ படத்தின் ’கிளியே’ பாடலுக்காக கே.எஸ். ஹரிசங்கர்

சிறந்த ஒலிக்கலவை: ஃபசல் பக்கர், ஷைஜின் மெல்வின் ஹட்டன் (மஞ்ஞும்மல் பாய்ஸ்)

சிறந்த ஒலி வடிவமைப்பு: ஷிபின் மெல்வின் மற்றும் அபிஷேக் நாயர் (மஞ்ஞும்மல் பாய்ஸ்)


சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு: ’மஞ்ஞும்மல் பாய்ஸ்’ படத்துக்காக அஜயன் சாலிசேரி

சிறந்த எடிட்டர்: ’கிஷ்கிந்தா காண்டம்’ படத்துக்காக சூரஜ் இஎஸ்

சிறந்த கலை இயக்கம்: ’மஞ்ஞும்மல் பாய்ஸ்’ படத்துக்காக அஜயன் சாலிசேரி

சிறந்த டப்பிங் கலைஞர் (பெண்): ’பரோஸ்’ படத்துக்காக சயோனாரா பிலிப்

சிறந்த டப்பிங் கலைஞர் (ஆண்): ’பரோஸ்’ படத்துக்காக பாசி வைக்கம்


LOCATION - CHENNAI
WE ARE HIRING
TELECALLERS
VACANCIES - 50
QUALIFICATION - ANY DEGREE
FRESHERS ALSO CAN APPLY
TELECALLING EXPERIENCE IS PREFERABLE
9337501889
7789941009
qknewstv@gmail.com


PRODUCT PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
7871617005


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
Are you looking to publish News, Story, Kavidhai, Articles etc in TamilnaduEpaper, Anandabhaskar, PaperBoy
If yes,
send to tamilnaduepaper@gmail.com
Please mention in Subject
Papername and Category - News, Article, Kavithai, Story, Cooking, Aanmigam, Book Review, Vasagar Kaditham, Sindhika Oru Nodi, Rowse Ramani etc.,
Please send articles from own email
Articles without Author Details will be Ignored
ஆனந்த பாஸ்கர்


WE'RE HIRING!
A Passionate Content Creator
CONTACT US!
94386 10756


தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
tamilnaduepaper@gmail.com
தமிழகம் முழுவதும் மாவட்டம் தாலுக்கா வாரியாக
தேவை
நிருபர்கள்
புகைப்பட கலைஞர்கள்
ஏஜெண்டுகள்
Call: 9337501889


MLM PERFECT
LIMITED OFFER HURRY UP!
Cryptocurrency
MLM Software
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
Visite Our Website
www.mlmperfect.com
Call US
9853719337,7436914247


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756



WANTED
STORE HELPER
Boys only
Fresher / Experience
SAA
Venus Sorting Technologies Pvt Ltd
Ganapathy, Coimbatore
Ph: 97919 60482
E-Mail ID: hr@whitechhoses.in


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


PADMA MEDIA HOUSE
Best Newspaper Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PADMA MEDIA HOUSE
BOOK NEWSPAPER ADS IN
Recruitment
Public Notice
Property
Business
Matrimony
Education
CONTACT : +91 81227 98599
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
ADVERTISE WITH US!



WORK FROM HOME
Extra Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009




## சொத்து

குருவிக்கும் கூடு உண்டு
என்பார்கள் –ஆனால்
எனக்கு தெரிந்து
அப்பா வீடு ஏதும் கட்டியது
இல்லை எல்லாம் இருந்தும்
குறை சொல்லும்
சில மனைவிமார்களை போல்
அம்மா இல்லை.
அப்பா இறந்த தினம்
வட்டிக்கு கடன்
கொடுத்தவர்கள்
வரிசை கட்டி நின்றனர்
குடும்ப மானம் காக்க
அம்மாவின் நகை
மார்வாடி லாக்கர் ஏறியது .
ஓடுகிறேன் ,ஓடுகிறேன்
ஜெயிக்க வேண்டுமென
இரவு ,பகல் பாராமல்
உழைத்துக்கொண்டிருக்கிறேன்
அப்பாவை போல் !
இதுவரை நினைவு தெரிந்து
சொத்தேதும் சேர்க்கவில்லை
அப்பா கொடுத்த
சக்கரை நோயை தவிர !

**நௌஷாத் கான். லி**



## ஜார்ஜ் பெர்னாட்சா!

நேரிசை வெண்பா!

இலக்கிய நோபல்
இனிய பரிசைக்

கலையாகப்பெற்றவர்
காண்போம்... விலைமதிக்க

ஒண்ணாத நாடகங்கள்
ஓர்ந்தே எழுதினார்
கண்ணாக பெர்னாட்ஷா
காண்!

பேறிஞர் பெர்னாட்ஷா
பேசும் புகழினர்

சீருடை மாந்தரே
சீர்மையாய்ப்.. பாரில்

மதுவைப்புகையை
மணியாய்த்தொடாத

அதிசய மாந்தரே ஆம்!
அயர்லாந்து நாட்டின்
ஆச்சரிய மாந்தர்

வியப்புக்கும் உள்ளான
வீறு... நயன்மை


உடையவர் பெர்னாட்ஷா
உன்னதமான

கடமையில் வீரராம் காண்!

**முனைவர் இராம.வேதநாயகம்.**

## அன்பே !!!

நான் அடைமழையாய்
பேசிக் கொண்டிருக்கும்
ஒவ்வொருமுறையும்
என் கேள்விக்கான
தேடலில் உன் ஒற்றை
பதிலான
ம் மட்டுமே எப்போதும்
மறுப்பே இல்லாமல்
என்னுள்
ப்ரகாசிக்கின்றது
மின்மினிப்
பூச்சியாய்



**சுபஸ்ரீ ஸ்ரீராம்**
சென்னை

## மனிதாபிமானம்

மனிதாபிமானம் உள்ளத்தில்
பூக்கும் வாச மலர்
அதன் வாசத்தை
மற்றவர்களுக்கு நுகர
கொடுக்கும்போது
இன்பத்தின் எல்லை
நாபிக்கு தேவை உணவு
என்பதை உணர்ந்து
அன்னதானம் செய்வது
மனிதாபிமானம்
துன்பத்தில் இருப்பவரின்
துன்பத்தைக் கேட்டு
அறிவதே மனிதாபிமானம்
அந்தத் துன்பம் மறைய
நாலு வார்த்தை இதமாக
பேசுவதும் மனிதாபிமானம்
வறுமையில் இருப்பவருக்கு
தேவையறிந்து ஈவதே
மனிதாபிமானம்
அன்பான இதயத்தில்
நிறைந்து கிடப்பது
மனிதாபிமானம்
அடுத்தவர் தேவை
உணர்ந்து உதவி செய்வோம்
மனிதாபிமான
எண்ணத்துடன்
வாழ்வோம்



**உஷா முத்துராமன்**



## பரிதிமாற்கலைஞர்!

நேரிசை வெண்பா!

உயர்தனிச் செம்மொழி
ஓங்கும்தமிழே

நயன்மையாய்ச்சொன்னவர்
நல்ல... வியப்புத்

தமிழறிஞர் நூலாசான்
தக்க இதழின்

கமழும் பரிதிமால் காண்!

விருதாம் திராவிட
சாஸ்திரி வீறாய்

அருமையாய்ப்பெற்றேதான்
ஆழ்ந்து....பெருமை

உடையவர் பரிதிமால்
ஓங்கிடும் செம்மை

நடையுடையார் நாளும் நனி!

செம்மொழி நாயகர்
சீர்மைப்பரிதிமால்

இம்மைத்தமிழில்தான்
என்றுமே...நம்மின்
தனித்தமிழ்கண்டவர்
தக்கநாடகத்தில்
தனிக்கவனம்
கண்டவர்
காண்!



**முனைவர் இராம. வேதநாயகம்.**

## மனசு பேசும்

ஒரு குறிப்பிட்ட வயதுக்கு
மேல் காலை கண்விழித்ததும்
காலை கடன்களை சரிவர
முடித்தாலே அது கடவுள்
நமக்கு கொடுத்த வரமாகும் .
உறங்கிய மனிதன் எந்த
குறையும் இல்லாமல் கண்
விழிப்பதே கடவுள் நமக்கு
கொடுத்த வாழ்க்கை பிச்சை .
சாப்பிட்ட உணவு சரி வர
செரித்து ஆற்றல் ஆவது
நமக்கு கிடைத்த பாக்கியம் .
இப்படி அன்றாட
வாழ்க்கையில் அடிப்படை
விஷயங்களை கடந்து
வந்தால் தான் மற்ற
விஷயங்களில் நம்மால் சரிவர
இயங்க முடியும் ..
இப்படி அடிப்படையான உடற்
கூறு செயல்பாடுகள் சரி
வர இயங்குவதற்கு முதலில்
இறைவனின் அருளும்
,நல்ல உணவு பழக்க வழக்க
முறையும் தேவை படும்
போது நாம் எதை மறந்து
ஆடுகிறோம் என்பது புரியாத
புதிராகவே
உள்ளது.
நம்முடைய உணவு
செரித்தலை
காணொளியில்
கண்டாலே நாம்
எப்படி பட்ட



பிறவி என்பதை புரிந்து
கொண்டு ஆணவத்தால்
ஆடாமல்,கருப்பு வெள்ளை
வேறுபாடு இல்லாமல் ,
சாதி மத இன வேற்றுமை
இல்லாமல்,பணக்காரன் ,
ஏழை என்ற பேதம் இல்லாமல்
நல்ல முறையில் வாழ்வோம்
என நம்புகிறேன்.
நாமெல்லாம் மலம் ,
சிறுநீர் நிறைந்து இருந்த
கர்ப்பப் பையில் இருந்து
வந்தவர்கள் தான்.
நாமெல்லாம்ஒரு போதும்
நாம் உயர்ந்த கடவுளாக
ஆக முடியாது . இறக்கும்
வரை இரக்கத்தோடு இருந்து
இறைவனை அடைய ஒன்றாய்
பாடு படுவோம் !!!

நாம் இறந்த பிறகு
உண்மையாகவே நாலு பேரு
கண்களில் இருந்து வரும்
உண்மையான அழுகை தான்
நாம் வாழ்ந்த வாழ்க்கையின்
அடையாளம் .அநியாயத்தை
தவிர்த்து அடையாளத்தை
பதிப்போம் ...

இன்னும் நிறைய
விஷயங்களை எனது
புலம்புகின்ற மனசு
உண்மையுடன் பேசும் !

**லி.நௌஷாத் கான்**

## ஏன் வருகிறது இந்த தீபாவளி

திரும்பிய பக்கமெல்லாம்
தீபாவளி இனாம் தொல்லை
வாங்குவதும் இல்லை
கொடுப்பதும் இல்லை

என்று சொன்னாலும்
விடுவதாக இல்லை
நோட்டுப் போட்டு
எழுதச் சொல்லி வசூல்
வேட்டை

எரிபொருள்
நிரப்புபவர்கள்
வாகனப்பழுது நீக்குபவர்கள்
துணியை தேய்ப்பவர்கள்
கடிதம் தருபவர்கள்

தெரு கூட்டுபவர்கள்
தேநீர் தருபவர்கள்

தீபாவளி முடியும் வரை
தலை மறைவாக
திட்டம்
ஏன் வருகிறது இந்த
தீபாவளி!



**கவிஞர் இரா .இரவி**

பரம்பரை சொத்து
கிடைத்தும்
மகிழ்ச்சியில்லை
" இரத்தக் கொதிப்பு".

**ஸ்ரீகாந்த் திருச்சி**

சொல்லிவிட்டுப் போகும்
எந்தக் கதையும்
எழுதி வைத்துவிட்டுப்
போகும் எந்த அனுபவமும்
பேசி முடித்துவிட்டு போகும்
எந்த உரையும்
காலத்துடன் வினைபுரிந்து
அர்த்தம்
மாறி
விடுபவை
எனவே,
சொல்லவோ
எழுதவோ
என்ன
இருக்கிறது?



**கே. பி. ஜனார்த்தனன்**

என்னடி என்
சேடிப்பெண்ணே
தோழி நீ அருகிருந்தும்
என் நிலை அறிந்திருந்தும்
மன்னவனைக்கானா
என் மன நிலை
அறிந்திருந்தும்
தோழி நீ துணையிருந்தும்
வாடுகிறேன் வழி
அறியாமல்
வழியொன்றை
சொல்லாமல்
வாடும் என்முகமும்
காணாமல் சென்ற
இடம் கூறாமல் செல்லும்
வழியொன்றையும்
கேட்காமலும் காணாமலும்
தவியாய் தவிக்கின்றேன்
கண்டும் காணாமல்
இருப்பாயோ?
வழி ஒன்றை
கூறாயோ ?
கூறமாட்டாயோ



**ஓம்குமார் P N,**
மதுரை

# நூல் விமர்சனம்

**"பூந்தோட்டம்" – சிறுவர்க்கான பாடல்கள் – மு. மகேந்திர பாபு – நூல் விமர்சனம் – பொன். குமார்**




"ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வரை படிக்கக் கூடிய சிறுவர்களுக்கான பாடல்கள் பல நூல் வடிவில் வெளி வந்துள்ளன. குழந்தைக்கவிஞர் அழ.வள்ளியப்பா, பெரியசாமி தூரன் தொடங்கி இன்று வரை பலரும் சிறுவர்க்கான பாடல்களை நூல்களாக வெளியிட்டுள்ளனர். அம்புலி மாமா, கண்ணன், கோகுலம் போன்ற சிறுவர் இதழ்களும் சிறுவர் பாடல்கள் மற்றும் கதைகள் போன்றவற்றை வெளியிட்டுக் குழந்தைகளுக்குத் தமிழ் மொழி கற்கும் ஆர்வத்தைத் தூண்டின. இந்த வரிசையில் மு.மகேந்திர பாபுவும் தமது 'பூந்தோட்டம்' என்ற நூல் வழியாகச் சிறுவர் பாடல்கள் இயற்றித் தொகுத்து இதுபோழ்து வெளியிடுகிறார். வாழ்த்துகள் " என்னும் வாழ்த்துரையுடன் வந்திருக்கும் தொகுப்பு பூந்தோட்டம். வாழ்த்தியிருப்பவர் பெரும்புலவர் மு. சன்னாசி.

'பூந்தோட்டம்' தொகுப்பை எழுதியவர் கவிஞர் மு. மகேந்திரபாபு. இந்தியனே எழுந்து நில், மகள் வரைந்த கோடுகள், வெற்றிக் கதவின் திறவுக்கோல், பால்யம் என்றொரு பருவம் என்னும் நான்கு நூல்களை வெளியிட்டவரின் ஐந்தாம் தொகுப்பு இது. சிறுவர்களுக்கான பாடல்களால் நிறைந்தது பூந்தோட்டம்.

"அன்னைத் தமிழே உயிராகும் ஆக்கம் நமது உயர்வாகும் இனிமைப் பேச்சே உணர்வாகும் ஈடிலா மொழியே தமிழாகும் உன்னை என்னை வளர்த்துவிடும் ஊக்கம் நாளும் தந்துவிடும் எல்லோர் அகத்திலும் தங்கிவிடும் ஏற்றம் மிகுந்த தமிழ் மொழியாம் ஐம்பெருங் காப்பியம் கொண்டதுவாம் ஒப்பிலாப் பெருமை உடையதுவாம் ஓதி நாமும் மகிழ்ந்திடுவோம் ஔவை மொழியினைப் புகழ்ந்திடுவோம்" என தமிழ் மொழி வாழ்த்துடன் தொடங்கியுள்ளார். ஔவையின் மொழியினைப் புகழ்ந்திடுவோம் என ஔவையின் ஆத்திச்சூடி வடிவிலேயே எழுதியுள்ளார். தமிழ் மொழியை வரிக்கு வரி வாழ்த்தியுள்ளார். கவிஞர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துடன் எழுதுவர். கவிஞர் தமிழ் மொழி வாழ்த்துடன் தொடங்கியுள்ளார். சிறுவர்களின் கவனம் ஈர்க்கும் மொழியிலேயே எழுதியுள்ளார். தொடர்ந்து தாய் தந்தை வாழ்த்து, நாட்டு வாழ்த்து, வள்ளுவர் வாழ்த்து, பாரதி வாழ்த்து எனவும் பல வாழ்த்துகள் உள்ளன. உழவுத் தொழிலே உலகில் உயர்ந்தது. உழவுத் தொழில் ஈடுபடும் உழவர்கள் மக்களுக்கு உணவளிப்பவர்களாக உள்ளனர். மக்களின் பசிக்கு உணவளிப்பவனே மண்ணில் எல்லோராலும் வணங்கக் கூடியவர்.

"உழவன் ஒருவன் இருப்பதாலே உலகம் இன்றும் சுழல்கிறதாம்!" என உழவன் குறித்து எழுதியுள்ளார். உழவனை வணங்கச் செய்துள்ளார். 'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை' என்னும் திருக்குறளை நினைவூட்டியது. பள்ளி என்பது மாணவர் பருவத்தில் முக்கியமானது. பள்ளியில் சென்று படிப்பதனால் பல நன்மைகள் உண்டு. பள்ளி என்பது பாடங்களை மட்டுமல்ல... வாழவும் வாழ்வில் வெற்றி பெறவும் கற்றுக் கொடுக்கும். "வகுப்பறை வாசல் திறந்தாலே வாழ்க்கையில் வெற்றி திறந்திடுமே ஆசிரியர் குரலைக் கேட்டாலே ஆனந்தம் நம்முள் பிறந்திடுமே நூல்களை விரித்துப் படித்தாலே நுழைவுத் தேர்வில் வென்றிடலாம் தாள்களில் நாளும் எழுதித்தான் தன்னை உயர்த்திச் சென்றிடலாம்!" என 'எங்கள் பள்ளி' தலைப்பில் எழுதியுள்ளார். மாணவர்களை பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்கிறார். படித்து முன்னேறவும் அறிவுறுத்தியுள்ளார். நூல்கள் பல படித்தால் நுழைவுத் தேர்வில் வென்றிடலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கியங்கள் படைத்த மிக முக்கியமான கவிஞர். 2,000 க்கும் மேலான குழந்தைகளுக்கான பாடல்கள் எழுதியுள்ளார். தொகுப்புகள் பல வெளியிட்டுள்ளார். சிறுவர் இலக்கியத்தின் முன்னோடியாக விளங்குகிறார். அழ. வள்ளியப்பாவை பலரும் பாடியுள்ளனர். கவிஞர் மு. மகேந்திர பாபுவும் 'அவர்தான் அழ. வள்ளியப்பா' என சிறுவர்களுக்காக ஒரு பாடல் எழுதியுள்ளார்.

'நல்ல நல்ல நூல்களை நாடி நாளும் பயிலுவோம்' என்று சொன்ன தாத்தாவிற்கு என்ன பெயர் தெரியுமா? அவர்தான் அழ வள்ளியப்பா அனைவர் மனமும் துள்ளுமப்பா பாடலைத் தினமும் கேளப்பா பண்பை வளர்க்கும் நாளப்பா' என அழ. வள்ளியப்பாவை அறியச் செய்ததுடன் அழ. வள்ளியப்பாவின் பாடல்களை வாசிக்கவும் தூண்டியுள்ளார்.

"ஊட்டி மலர்க் கண்காட்சி கூட்டிப் போகும் போதிலே உள்ள மெல்லாம் பறக்குதே நம்முள் புத்துணர்வு பிறக்குதே செடி வளர்த்திட விரும்பினோம் மரம் வளர்த்திட விரும்பினோம் சுற்றுச் சூழல் சிறந்திட கற்றுக் கொண்டே திரும்பினோம்!" என பூந்தோட்டம் என்னும் தலைப்பில் ஒரு பூந்தோட்டத்தை சிறுவர்களுக்குக் காண்பித்துள்ளார். மேலும் சுற்றுச் சூழல் காக்கவும் அறிவுரைத்துள்ளார். "படியில் பயணம் வேண்டாம் தம்பி நொடியில் எதுவும் நடக்கலாம் தம்பி காலை மாலை பேருந்தில் தினமும் கவனமாகப் பயணித்திட வேண்டும் தம்பி!" என படியில் 'பயணம் வேண்டாம் தம்பி' என சிறுவர்களுக்கு அறிவுரைத்துள்ளார். சிறுவர்கள் மீதான அக்கறையை வெளிப்படுத்தியுள்ளார். இது போன்ற பாடல்களே இன்றைய சிறுவர்களுக்குத் தேவையானது. பாதுகாப்பான பயணம் மிக முக்கியம். 'படியில் பயணம் நொடியில் மரணம்' என்னும் அரசு விளம்பரத்தை ஒட்டி இப்பாடல் எழுதப்பட்டுள்ளது. அரசும் இப்பாடலை பயன்படுத்திக் கொள்ளலாம். "மொழிகள் பலப்பல இருந்தாலும் இனங்கள் பலப்பல இருந்தாலும் இந்திய ரென்றே சொல்லிடுவோம் அன்பால் நாங்கள் துள்ளிடுவோம் நல்லோர் செய்த தவத்தாலே நாடு விடுதலை பெற்றதே நாங்கள் நாட்டின் கண்கள்தான் நாட்டை வீட்டை நேசிப்போம்" என எங்கள் தேசம் கவிதையிலே சிறுவர்கள் பாடுவதாகவே பாடியுள்ளார். எங்கள் தேசம் என சிறுவர்களுக்கு தேச பக்தியை, தேச உணர்வை ஊட்டியுள்ளார். இன்றைய சிறுவர்களுக்குத் தேச உணர்வை ஊட்டுவதும் அவசியமாகும். கவிஞர் இதை உணர்ந்தே ஊட்டியுள்ளார்.

பள்ளியில் படிக்கும் சிறுவர்களுக்கு விடுமுறை விடப்படுகிறது. அந்த விடுமுறையிலும் பெற்றோர்கள் சிறுவர்களை ஏதேனும் வகுப்புக்கு அனுப்பி அவர்களைச் சுதந்திரமாக இருக்க, இயங்க அனுமதிப்பதில்லை. இந்நிலையில் விடுமுறையை எவ்வாறு கழிக்க வேண்டும், எவ்வாறு கொண்டாட வேண்டும் என்று விடுமுறை கொண்டாட்டம் என்னும் தலைப்பில் எழுதியுள்ளார். "கிணற்றில் நீரை இறைக்கலாம் கிளியின் பேச்சைக் கேட்கலாம் சண்டை போடும் கிடாய்களை சமாதானம் பேசி அனுப்பலாம் கம்மங் கூழும் குடிக்கலாம் காலையில் கதையும் படிக்கலாம் விருப்பம் போல மகிழ்வே திருப்பம் தந்திடும் விடுமுறையே!"

இருப்பினும் காலையில் கதையும் படிக்கலாம் என்று ஓர் ஆலோசனையும் வழங்கியுள்ளார். 'காலை எழுந்தவுடன் படிப்பு' என்னும் பாரதியின் வரிகளையும் நினைவு கூரச்செய்துள்ளார். 'சுறுசுறுப்பாய் இருப்பாய்' என்னும் பாடலில் "சோம்பல் இருக்கும் நெஞ்சிலே சோகம் மட்டுமே தங்கும் சுறுசுறுப்பு இருக்கும் நெஞ்சிலே சுகமே என்றும் பொங்கும்!" என சிறுவர்களுக்கு அறிவுரைத்துள்ளார். சிறுவர்கள் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும் என்கிறார். சோம்பல் கொண்டவன் சோகம் அடைவான் என்று தெரிவித்துள்ளார். மகாகவி பாரதியாரும் ஓய்ந்திருக்கலாகாது என்று பாடியுள்ளார்.

வள்ளலார் கருணையை அனைத்து உயிர்களிடத்தும் காட்ட வேண்டிய அன்பின் வெளிப்பாடாகக் கருதினார். பசித்தோர் முகத்தைப் பாராதிராமல் இருப்பதும் இரப்போர்க்குப் பிச்சை கொடுக்க மறுக்காமலும் இருப்பதும் கருணையின் செயல்பாடுகளும் என்று அவர் வலியுறுத்தினார். அனைத்து உயிர்களிடத்தும் இரக்கம் காட்டுவதே கருணையின் நோக்கம் என்றும் மனிதப் பிறவியின் லட்சியமே உயிர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பது என்றும் குறிப்பிட்டார். கவிஞர் மு. மகேந்திர பாபுவும் "வாழும் வரைக்கும் தியாக மண்ணில் வளரவேண்டும்கருணைப்பார்வை நாளும் பொழுதும் நன்மைகள் விளைந்திட ஆளும் மனமே சமத்துவப் போர்வை!" என கருணைப் பார்வை என்னும் தலைப்பில் மனிதர்களுக்கு கருணை தேவை என்கிறார். சிறுவர்களுக்கும் கருணை குறித்து அறிவுரைத்துள்ளார்.

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பர். முயற்சியே முன்னேற்றம் அளிக்கும். "தடைதான் முன்னே நின்றாலும் நடைதான் போட்டுச் சென்றிடுவோம் வெற்றி மாலை சூடித்தான் வேற்றார் மனங்களை வென்றிடுவோம்!" என முயற்சி என்னும் பாடலில் சிறுவர்களுக்கு முயற்சி தேவை என்கிறார். நம்பிக்கையை ஊட்டியுள்ளார். வெற்றிப் பெற்றவர்கள் முயற்சி உடையவர்களாகவே இருந்திருப்பர் என்பதே உண்மை.

ஆடையில்லாத மனிதன் அரை மனிதன் என்பர். இன்று அலை பேசி இல்லாதவனும் அரைமனிதனே. அலைபேசி இல்லாதோர் அவனியில் இல்லை. செல் இல்லாதோர் செல்லாதோர் என்னும் நிலை. இந்நிலையில் கவிஞர் திறன் பேசி என்னும் தலைப்பில் ஒரு பாடல் எழுதியுள்ளார். அதில் "நன்மை தீமை இரண்டுமுண்டு நல்லதைப் பாக்கனும் விருப்பம் கொண்டு நாட்டு நடப்பினைத் தெரிந்து கொண்டு நடப்பதில் நாளும் பயனுமுண்டு!" என சிறுவர்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்கிறார். எந்தவொரு தொழில் நுட்பத்திலும் நன்மையும் தீமையும் உண்டு. சிறுவர்கள் நன்மையை மட்டுமே கருதி பயன்படுத்த வேண்டும் என்கிறார். தொடக்கத்தில் இருந்த உணவு பழக்கம் மெல்ல மெல்ல மாறி இன்று அவசர உணவிற்கு வந்து விட்டது. அவசர உணவு ஆரோக்கியத்திற்கும் கேடு. ஆபத்தையும் உண்டாக்கும். மனிதர்கள் ஆபத்தை உணர்ந்ததால் சிறு தானிய உணவிற்கு மாறி வருகின்றனர். கவிஞரும் 'சிறுதானியம்' என்னும் தலைப்பில் எழுதிய பாடலில் "பச்சைப் பயறும் சுண்டலும் பலத்தை அதிகம் கொடுத்திடும் முளைத்த கம்பு அரிசியும் முதுமையில் போட்டி விடுத்திடும் இயற்கை தந்த தானியங்களே இன்பம் என்றும் வழங்கிடும் செயற்கை கொண்டு செய்கின்ற உணவால் துன்பம் துலங்கிடும்!" என தெரிவித்து சிறு தானியம் உண்ண சிறுவர்களை அழைத்துள்ளார். சிறுதானியமே சிறந்தது என்கிறார். பாலித்தீன் நிறைந்த பண்டங்களோ பழிவாங்கி உடலைக் கெடுக்கும் என 'உண்ணலாம் வாங்க' பாடலில் அழைப்பு விடுத்துள்ளார். பாலித்தீன் பயன்படுத்த வேண்டாம் என்கிறார்.

எந்தவொரு நிகழ்வையும் நன்றி கூறி முடிக்க வேண்டும். கவிஞர் மு. மகேந்திர பாபு நன்றி என்னும் பாடலுடன் முடித்து நன்றிக்குரியராக உள்ளார். "நன்றி மறவா மனதுடன் நாளும் நாமும் வாழ்ந்திடுவோம் உதவி செய்யும் நண்பர்களை வந்து நாமும் வாழ்த்திடுவோம்!" என சிறுவர்களுக்கு நன்றி உணர்ச்சியை ஊட்டியுள்ளார். நன்றி மறவாதிருப்பதே நன்று என்கிறார். 'நன்றி மறப்பது நன்றன்று' என்னும் வள்ளுவரைப் போல் நன்றி மறவாமல் இருக்க வேண்டும் என்று அறிவுரைத்துள்ளார்.

கவிஞர் மு. மகேந்திர பாபு 'பூந்தோட்டம்' என்னும் இத்தொகுப்பில் சிறுவர்களுக்காக அறுபத்து மூன்று பாடல்கள் எழுதியுள்ளார். எல்லா பாடல்களையும் இருபது வரிகளிலே ஒரே மாதிரி திட்டமிட்டு எழுதியுள்ளார். தமிழ் மொழி வாழ்த்துடன் தொடங்கி நன்றியுடன் முடித்துள்ளார். சிறுவர்களை மனத்தில் கொண்டே எழுதியுள்ளார். சிறுவர்களுக்கு நல்ல எண்ணங்களை ஊட்டும் விதமாகவும் சிறுவர்களை முன்னேற்றும் விதமாகவும் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. சிறுவர் பாடல்கள் என்றால் வழக்கமான சில பாடுபொருள்கள் இருக்கும். அப்பாடு பொருள்கள் தாண்டியும் புதியதாக பல பாடுபொருள்களில் பாடி கவனத்தை ஈர்த்துள்ளார். அப்பாடல்களிலிருந்தே பாடல்கள் சில எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. சிறுவர் இலக்கியத்தில் கவிஞரின் முதல் முயற்சி இத்தொகுப்பு. சரியான சொற்களில் சரியாக வரிகளை எழுதியுள்ளார். சிறுவர்கள் அவசியம் வாசிக்க வேண்டும். வாசித்தாலும் சிறுவர்களின் மனம் கவர்ந்து விடும். சிறுவர்களையும் எழுதத் தூண்டி விடும். அழகாகவும் அருமையாகவும் உள்ளது பூந்தோட்டம். கவிஞர் மு. மகேந்திர பாபுவிற்கு வாழ்த்துகள்.

வெளியீடு யாப்பு வெளியீடு, சென்னை கவிஞர் மு.மகேந்திர பாபு 9786141410 நூல் விமர்சனம் பொன். குமார் 9003344742




## விதி விதி என்று.....!

அறுசீர் மண்டிலம்.

விதிமேல் பழியைப்
போடாதே விழியை வழிமேல்
வைத்திடுவாய்
மதியைக் கொண்டு
முன்னேறு மாண்பாய் நீயும்
தொண்டுசெய்வாய்!
இதயம் ஏற்க
நன்மைசெய்வாய்
இனிமை தம்மைக்
கொண்டுசெய்வாய்
உதயம் முதலே
உழைத்திடுவாய்
ஊருக்காக உழைப்பாயே!

வீரம் மானம் உயிரன்றோ
வெற்றி தோல்வி
சமமன்றோ தீரம் சூரம்
நல்லதன்றோ
தெளிவு துணிவு
வல்லதன்றோ!
ஈர நெஞ்சைக்
கொண்டிடுவாய்
இனிமை யாவும்
கண்டிடுவாய் ஓர வஞ்சம்
இல்லாமல் ஒண்மை யாக
வாழ்ந்திடுவாய்!

முனைவர்
இராம.வேதநாயகம்.



## பொருளாதார மேதை அமர்த்தியா சென்!

நேரிசை வெண்பா!

பொருளியலில் நோபலின்
பொன்னாம் பரிசை

அருமையாய் ஏற்றாரே
ஆங்கே.... பெருமையே

கொண்டார் அமர்த்தியா
சென் தானே அன்றேதான்

கண்டார் புகழினைக்காண்!

பாரத ரத்னாவாம்
பாங்காம் விருதையும்

நேரெதிர் நின்றிடப்
பெற்றாரே––– சீராய்

பொருளியலில் பல்விருது
போற்றிடப்பெற்றார்

அருமை அமர்த்தியா ஆம்!

முனைவர்
இராம.வேதநாயகம்.



## ஏ.கே.செட்டியார் (அ.க.செட்டியார் கருப்பன் செட்டியார்)

நேரிசை வெண்பா!

உலகத்தைச் சுற்றிடும்
உண்மைத்தமிழன்
கலைப்பயணம்
கண்டேதான் காலம்....
மலைத்திடும் வண்ணமே
வந்தார்
கருப்பனான செட்டியார்

கண்ணாய்ப்புகழுற்றார்
காண்!

பயண இலக்கியத்தின்
பாங்குமுன்னோடி
நயன்மை வரலாற்றை
நாளும்... வியப்பாகத்
தந்தார் கருப்பன் தகவாக
அன்றேதான் விந்தையான
செய்திகளே வீறு!

முனைவர்
இராம.வேதநாயகம்

## தாரகை ஒளியில்...

சித்திரம் என்பது
கைப்பழக்கம் சிக்கனம்
வாழ்வை மெய் படுத்தும்!
சித்திரை நிலவோ ஒளி
கொடுக்கும் சிந்தனை
நன்மைக்கு வழிவகுக்கும்!

பத்திரமான வாழ்க்கை இது
பார்த்திரு விழித்திரு
பயனளிக்கும்!
பத்தரை மாற்று தங்கமென
பாதையில் சென்றால்
பலனளிக்கும்!

இத்தரை மீதினில்
வாழ்வதற்கு எத்தனை
எத்தனை போராட்டம்!
அத்தனை துன்பமும்
முறியடித்தால்..
அடடா வாழ்க்கை
தேரோட்டம்!

உத்தம காற்றை
சுவாசிப்போம் உலகம்
முழுவதும் நேசிப்போம்!
எத்தனை காலம் ஆனாலும்
கொள்கை மரத்தினில்
கனிபறிப்போம்!

சொத்தென சுகமென

எண்ணாமல்
புத்தகம் மீதே
கண்ணாகி
தத்துவ
சோற்றை
அளித்திடுவோம்
தாரகை
ஒளியில் குளித்திடுவோம்!

வெ. தமிழழகன்
எம் ஏ. பிஎட், சேலம்

## மனம்


நிலை இல்லா
மனம் –
இருவாச்சியும்
வாழ்கின்ற
இவ்வுலகிலே.

G.Sathiya
Trichy

## உறுதி மொழி

ஆபத்தில் உதவியோரை
எப்போதும்
நினைவில் நிறுத்தி
வைத்திடுவாய்

ஏற்றிய ஏணியை
நிலைநிறுத்திடு

நம்மை விரும்பிய உறவுகளை
வெறுத்து உதாசீனப்
படுத்தாதீர்

மலர்ந்த முகமே
ஈர்க்கப்படுவது


மனப்
பலகையில்
துரோகத்தை
அழித்துக்
கோலமிடுவாய்

பி. பழனி,
சென்னை

## நடைபோடு!

தண்ணிக்கும் மீனுக்கும்
உறவுண்டு தனியே
வாழ்ந்திட முடியாது!
என்னிக்கும் பிரிந்திட
நினைத்தாலும்
என்றும் அதுதான் நடக்காது!

இன்னிக்கும் நாளைக்கும்
தொடர்பொன்று இல்லா
திருந்தால் பொழுதேது?
இரவுக்கும் பகலுக்கும்
பிரிவென்றால்
விடியலை வானம் எழுதாது!

நன்மைக்கும் தீமைக்கும்
முரண்பாடு நன்கே அறிந்து
நடைபோடு!உண்மைக்கும்
பொய்மைக்கும் உறவுண்டோ
உணர்ந்தே அதனுக்கு விடை
தேடு!

கண்ணுக்கு இமையும்
பகையின்றி காத்தே
இருப்பது பெருநன்றி!
மண்ணுக்கு வானின் மழை
போல மனிதர்கள் வாழ்வோம்
பகையின்றி!

வெ.தமிழழகன்
எம்ஏ.பிஎட், சேலம்



## கன்னியர் கவனத்துக்கு...

அலைகடலோரத்தில்
அருமையான காட்சி
அறநெறி தவறிய ஆட்சி
அடைந்தது வீழ்ச்சி கையில்
சிலம்புடன் கண்ணகி நிற்கும்
காட்சி கற்பின் வலிமைக்கே
என்றென்றும் சாட்சி மாலை
நேரத்தில் காணும் காட்சி
மரபு என்பதே கடற்காற்றோடு
போச்சு கண்ணகி
சிலையோ கறுப்பான நிறம்
கன்னியர்கள் அறியாதது
அவளுடையதரம் மணிமுடி
சாய்த்து மதுரையை எரித்து
மண்ணுலகம் உள்ளவரை
மறக்க முடியாத மங்கையர்
திலகம் மாசாத்துவான்
மகள் கற்பிற் சிறந்த
கண்ணகிக்கே கடற்கரையில்
சிலை யென்றால் கற்பெனும்
கவசத்தைக் காதலன்
கைகளிலே காணிக்கை
யாக்குகின்றகன்னியரே

உங்களுக்கோ
எங்குச் சிலை
உணர்வீரோ!
உங்கள் நிலை?

சந்திரசேகரன்
அமுதா
செஞ்சிக்கோட்டை

## மனசாட்சி..

நல்ல மனிதர்களின்
உள்ளுள் உறங்குது.. தீய
மனிதர்களுக்கோ சமாதியில்
உறங்குது..


இறைவனின் குரலது
ஒலிப்பது அதில்தானே..
செவிடர்களாய்
சிலரும் கேட்காமல்
ஒதுக்குகின்றனரே..

அவ்வப்போது ஒலித்திடும்
உயர்வான மனசாட்சிக்கு..
மதிப்பளித்தே அதன்
குரலுக்கு அடிபணிவோம்..

காது கொடுத்து கேட்டிட
மனதுண்டோராலே..

இன்னமும்
தர்மம்
நிலைக்கிறதே
இவ்வுலகில்..

உமாதேவிசேகர்
பியூட்டிஷியன்,
தஞ்சை



## எங்கும் நீ...

கண்களின் தேடல்...
நீயானாய்...

நினைவுகள் தேடும்...
உறவானாய்...

காலம் யாவும்... உன்
அருகில்...

கோலம் போடும்...
உன் விழிகள்...

சாமரம் வீசும்... உன் பேச்சு..
சாளரம் திறக்கும்... உன்
மூச்சு...


கண்ணெதிரே
... வந்து
விடு...

காதல் தனை
தந்து விடு...

தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி

## ஞானக்கூக்.கூ

ஒரு ஓவியம்
சுவற்றில் ஓவியம்
வரைகிறது குழந்தை

வாத்தியக் கருவி
இல்லாமல் இசை
எழுப்புகிறது அருவி


ஒன்றாய் கூடிய
உறவுகள்
உணவை
பகிர்ந்தன
காகம்

நல.ஞானபண்டிதன்




## இதழ்கள்

பாவையவள் மெல்லிய
இதழ்களை..
கோவைப்பழமென
நிறத்திற்கு ஒப்பிடுகையில்..
மங்கையிவள் முகம்
தாமரை போலிருக்க..
இதழ்களோ செந்நிற
செம்பருத்தியாய்..
பார்ப்பவரை சுண்டி
இழுக்குதே..
மலர்கள் எப்போதும்
பெண்களை
நினைவூட்டிடுதே..
இராசயணம் பார்ப்பவர்
நெஞ்சதில் ..
தானாய் சுரந்திடுதே..

உமாதேவி சேகர்
பியூட்டிஷியன், தஞ்சை

## ஞாபகம் வருதே !

குழந்தை பருவம் என்றதும்....
பெற்றோர்களின் கை பிடித்து
நடந்த குதுகலமான நாட்கள்
நினைவுக்கு வரும்....

பள்ளிப்பருவம் என்றதும்
ஆசிரியர் அடித்த நாட்கள்
நினைவில் வரும்....

கல்லூரிப்பருவம்...
மரத்தடியில், நூலகத்தில்...
தோழர், தோழிகளுடன்
அரட்டை அடித்த
நினைவுகளுடன்...
முதல் காதலும் வந்து
போகும் ...

எல்லாம் மறந்து... குழப்பம்
மட்டுமே மிஞ்சுகிறதெனில்
குடும்ப வாழ்க்கையை வாழ
ஆயத்தமாகிவிட்டோம்

என்பது
மட்டுமே
நினைவில்
கொள்க !

எம்.பி.
தினேஷ்.
கோவை

இழையறுந்த கனவொன்று
தட்டி எழுப்புகிறதென்னை.

வியர்த்து விதிர்த்தவனாய்
எழுந்தமர்கிறேன்.

சிறுநீர் கழித்து விட்டும்,
முகம் கழுவிவிட்டுமாய்
வருகிறேன்.

மின் விசிறியின் வேகம்
கூட்டி விட்டு
நீர் அருந்துகிறேன்.

உடல் வழிந்திருந்த
வியர்வையின்
ஒற்றை முத்தில் மின்னிய
என் மகளின் விழிகள்
என்னை நோக்கி கோபக்
கேள்வியிடுகிறதாய்!

நீரருந்திய
செம்பினுள்ளிருந்து
எட்டிப்பார்த்த
என் மகளின் முகம்
என்னை இம்சித்துச்
செல்கிறதாய்!

மின் விசிறியின் சுழற்சியில்
நிலை கொண்டிருந்த என்
மகளின் பார்வை என் மனம்
குத்தி நகர்கிறதாய்.

சுவர் கடிகாரத்தின்
உள்ளிருந்து
வெறித்த அவளின்
பிஞ்சு விழிகள் என்னை
ஏளனம் கொண்டு பார்த்து
நகர்கிறதாய்!

வீடு சுற்றிய என்
விழிகளுக்கு வேர்க்கிறது
என் மகளின் வெப்பப்பார்வை
தாங்காது.

படபடப்பு குறையாது வீடு
விட்டு வாசல் கொள்கிறேன்.

கோலமிடுகிற இடத்தில்
முளைத்துத்தெரிந்த எனது
மகளின் முகம்!

வீட்டிற்குள் வருகிறேன்.
படுத்திருந்த பாய்
மீதமர்கிறேன்.

என் முன்னமர்கிறது என்
மகளின் முகம்.

காலாற சென்று விட்டு
வரலாமென
நினைக்கிறேன்.

எங்கு சென்ற போதும்
எது செய்தபோத போதும்
என் கனவிலுதித்த

என் மகளின்
பிஞ்சு முகம்
என்னைப்பின்
தொடர்ந்தே!

விமலன்.

# பள்ளி மாணவர்களுக்கு பயிற்சி முகாம்



**பனைக்குளம் நவ 04:** ராமநாதபுரம் மாவட்டம் பனைக்குளம் பஹ்ருதீன் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் படிக்கும் 12 வகுப்பு தொழில் கல்வி பிரிவு மாணவர்களுக்கு பனைக்குளம் அருகே உள்ள புதுவலசை கிராமத்தில் உள்ள ஆர்டிசிசி பேங் வளாகத்தில் வங்கி மேலாளர் முத்துமுருகன் பயிற்ச்சியை துவக்கி வங்கியின் செயல்பாடுகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கி பயிற்ச்சி அளித்தார்.

இந்த நிகழ்ச்சி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர் அலோஷியா ஷோபா பள்ளி தொழில் கல்வி ஆசிரியர் லோகிஸ்வரன் மாணவர்களுக்கு பயிர்ச்சி அளித்து மாணவர்களுக்கு ஊக்கம் அளித்தனார்/

தேர்வு பெற்ற மாணவர் களுக்கு வங்கி மேலாளரால் சான்றிதழ் வழங்கப்படும் இதற்க்கான ஏற்பாடுகளை ஆண்கள் மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் அலோசியா ஷோபா சிறப்பாக செய்து உள்ளார்

# மாணவிகளுக்கு கலெக்டர் லட்சுமி பவ்யா கேடயம் வழங்கி பாராட்டினார்



வன விலங்குகள் ஊருக்குள் வருவதை அடையாளம் காணும் கருவியை நீலகிரி புத்தகத் திருவிழாவில் பொதுமக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்திய புளியம்பாறை அரசு உயர்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு கலெக்டர் லட்சுமி பவ்யா கேடயம் வழங்கி பாராட்டினார்.

# கலைத் திருவிழா போட்டிகள்



திண்டுக்கல்லில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகள் நேற்று நடந்தன.

# நூலக உறுப்பினர்களாக ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள்,



ஈரோடு கஸ்பாபேட்டை அரசு உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் உள்பட 401 பேர் கலெக்டர் கந்தசாமி முன்னிலையில் செங்கரப்பாளையம் நூலகத்தில் தங்களை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர்.

# கராத்தே சோதனை தேர்வு போட்டி



ஈரோடு டெக்ஸிவேலி வளாகத்தில் நடந்த மாநில அளவிலான கராத்தே சோதனை தேர்வு போட்டியை கலெக்டர் கந்தசாமி துவக்கி வைத்தார்.

# சிலம்ப போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ், பதக்கம்



நாமக்கல்லில் நடந்த தனியார் மற்றும் அரசு பள்ளி மாணவர்களுக்கான சிலம்ப போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தமிழ் சங்கத்தின் செயலாளர் நாராயண மூர்த்தி சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் வழங்கினார்.

# மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டி



தாராபுரம், பஞ்சப்பட்டி, பிரக்ருதி பப்ளிக் ஸ்கூலில் மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டியை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார்.

# வாசகர் கடிதம்

இன்று (03.11.2025) தமிழ்நாடு இ பேப்பரில் முதல் பக்கத்தில் முதல் செய்தியாக நேற்று மாலை LVM3-M5 ராக்கெட் மூலம் CMS-03 செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்திய இஸ்ரோ விஞ்ஞானிகள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள்
ICC மகளிர் உலக கோப்பை கிரிக்கெட்டில் தென்னாப்பிரிக்கா அணியை வீழ்த்தி வெற்றி பெற்ற இந்திய மகளிர் அணிக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள்
நலம் தரும் மருத்துவம் பகுதியில் குடல் பாதுகாப்பு அழற்சியை நீக்கி ஆரோக்கியமாக வைக்கும் உணவுகள் தொகுப்பு வித்தியாசமாக உள்ளது.
93வது விமானப்படை தினத்தையொட்டி மாரத்தான் ஓட்டம் செய்தியும், மணியோசை சிறுகதை சிறப்பாக உள்ளது.
மின் தொடர் வண்டி பற்றிய அரிய தகவல்கள், சினித்துளி, பல்சுவை களஞ்சியம் பகுதியில் கோவில் தீர்த்தம், சூரசம்ஹாரம் பற்றி பல விரிவான தகவல்கள் தெரிந்து கொண்டேன்.
உள்ளூர் செய்திகள் முதல் உலக செய்திகள் வரை மற்றும் பல்துறை தகவல்கள் தொகுத்து வழங்குவது தமிழ்நாடு இ பேப்பரின் தனிச்சிறப்பு
நன்றி



-T.P.குமரன்,
மகர்நோம்புச்சாவடி

---

சி எம் எஸ் 3 செயற்கைக் கோள் வெற்றிகரமாய் விண்ணில் நிலை நிறுத்தம்#இஸ்ரோ=கடல்வழி ஊடுருவலை துல்லியமாக கண்காணிக்க இயலும்
மகளிர் உலகக் கோப்பை#இந்தியா முதல் முறை சாம்பியன்
விஜய்க்கு மக்கள் மீது அக்கறை இல்லை#கருணாஸ்
தேர்தலை சீர்குலைப்பதற்கான திட்டமிட்ட சதியே வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம்#திருமா வளவன்
திசை திருப்பு முன்னேற்றக் கழகத்தின் எஸ் ஐ ஆர் எதிர்ப்புக் கூட்டம்#நயினார் நாகேந்திரன்
பண்ருட்டி அருகே கர்ப்பிணி தூக்கிட்டு தற்கொலை
தொழில்நுட்பத்தை நல்வழியில் பயன்படுத்துங்கள்#தாய்லாந்து துணைத் தூதர் வேண்டுகோள்
வெளிநாடு வாழ் இந்தியர்கள் பணம் அனுப்புவதை விரைவு படுத்த நடவடிக்கை
நூல் விமர்சனம் தூள்
புதுக் கவிதைகளின் அணிவகுப்பு அபாரம்
வாசகர் கடிதங்கள் பொறுப்பாக வரையப்பட்டிருந்தன
பொங்கல் வேட்டி-சேலை நவம்பர் 15 ரோகம்#அமைச்சர்=மக்களுக்கு அதன் மீது குறியில்லை
தேர்தல் நெருக்கத்தில் எஸ் ஐ ஆர்க்கு எதிராக திமுகவின் அனைத்துக் கட்சிக் கூட்டம்#தவெக
தீபாவளி சீட்டு மோசடி#தலை மறைவான பெண் கைது=எத்தனை முறை ஏமாற்றினாலும் இவர்கள் திருந்தப் போவதில்லை
பெங்களூரு செல்லும் ரயிலில் 450 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல்
டிஜிட்டல் கைது என மிரட்டி முதியவரிடம் 4.15 கோடி சுருட்டல்#உபி இளைஞர் கைது=அவரும் வீக்னெஸ் பார்ட்டியோ?
மீனவர்களுடன் இணைந்து குளத்தில் இறங்கி மீன் பிடித்தார் ராகுல் காந்தி#பீகாரில் சுவாராஸ்யம்
புதுடெல்லி: ரூ 47 கோடி கோகைன் கடத்திய பெண் உட்பட ஐவர் கைது
தீவிர வறுமை இல்லாத மாநிலம் கேரளா#முதல்வர் பினராயி விஜயன் அறிவிப்பு
சர்வதேச டி-20 கிரிக்கெட்டிலிருந்து நியூசிலாந்து முன்னாள் கேப்டன் வில்லியம்சன் ஓய்வு
தேஜஸ்வி யாதவை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க காங்கிரஸ் விரும்பவில்லை#பிரதமர் மோடி
லண்டனில் ஓடும் ரயிலில் கத்திக் குத்து# பத்து பேர் காயம்; இருவர் கைது
மோசடிக் கும்பல்களைச் சேர்ந்த 2000 பேர் மலேசியாவில் கைது
சீனாவில் பிரபலாகி வரும் ஹாட்பாட் குளியல்
அமெரிக்க நிதி நிறுவனத்திடம் 500 மில்லியன் டாலர் கடன் பெற்று இந்திய வம்சாவளி சி இ ஓ மோசடி
சூடானில் படுகொலை சம்பவங்கள் அதிகரிப்பு#உயிர் அச்சத்தில் மக்கள்=என்னதான் நடக்கிறது?



-பி.சுரேகா
சென்னை

---

ஞாயிறு தமிழ்நாடு இ பேப்பரில் பல்சுவை களஞ்சியம் பகுதியில் புதினா கீரையின் அற்புதங்கள், பீட்ரூட் ஒரு சர்வ நிவாரணி கட்டுரை படித்தேன் புதினா கீரையின் மகத்துவங்கள் அனைத்தையும் சொல்லுகிற விதமாக இருந்தது. பீட்ரூட்டில் இருக்கக்கூடிய சத்துக்களை வகைப்படுத்திய விதம் சிறப்பாக இருந்தது. இன்றைய தமிழ்நாடு இ பேப்பரில் நலம் தரும் மருத்துவ பகுதியில் ஒரு தடவை பயன்படுத்தி எண்ணை மறுபடியும் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகளை மிக அழகாக சொல்லி ஆரோக்கிய வாழ்விற்கு வழி வகுக்கும் பகுதியாக இருந்தது. சிறுகதை பக்கத்தில் குத்தாட்டம், மௌன புன்னகை இரண்டு சிறுகதைகளும் சிறப்பாக இருந்தன. அசோக் ராஜாவின் "நெய் நந்தீஸ்வரர் வழிபாடு" கட்டுரை நந்தீஸ்வரர் சிறப்புகளையும் நந்தீஸ்வரருக்கு செய்யக்கூடிய நெய் அபிஷேகங்கள் பற்றிய தகவல்களும் புதியதாக இருந்தது.



-கவி-வெண்ணிலவன்
மணமேல்குடி

---

மகளிர் உலகக் கோப்பையில் இந்திய மகளிர் அணி முதல் முறை உலகக் கோப்பையை வென்று உலக சாதனை செய்தது மாபெரும் சரித்திரம் சாதனை சகாப்தம் இந்தியாவிற்காக பெருமை சேர்த்த கிரிக்கெட் அணியின் வீராங்கனைகள் அனைவரும் பாரதி கண்ட புதுமைப் பெண்களாக வெற்றியை குவித்திருக்கிறார்கள்
இது ஒட்டுமொத்த இந்தியர்களுக்கும் பெருமை ஆசிய கண்டத்திற்கும் பெருமை இனிவரும் காலங்களில் மகளிர் கிரிக்கெட் அணியில் புதிய பெண்கள் உருவாக அருமையான வாய்ப்பு அமைந்துள்ளது ஒட்டுமொத்த இந்தியர்கள் சார்பாக இந்திய மகளிர் கிரிக்கெட் அணிக்கு ராயல் சல்யூட்

-"போயஸ் கார்டன்"
பொன்விழி அன்னூர்

---

வணக்கம்.3.11.25
அன்றைய தமிழ்நாடு இ பேப்பரில் முதல் பக்கத்தில் செயற்கைக்கோள் வெற்றிகரமாக நிலை நிறுத்தம் என்ற செய்தி விஞ்ஞான செய்தியாக ஆவலுடன் படிக்க வைத்தது. இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக அமைய எனக்கு உதவியது.. மகளிர் உலகக் கோப்பையை வென்ற இந்தியாவைப் பற்றி நினைக்கும் போது பெருமையாக இருந்தது. எத்தனை முறை படித்தாலும் அலுக்காத திருக்குறளை அதன் பொருளுடன் படித்து மகிழ்ந்தேன். அந்த பக்கத்திலேயே வந்த அனைத்து படங்களும் தகவல்களும் அறிவுக்கு விருந்தாக இருந்தது. மனம் நிறைந்த பாராட்டுக்கள். நலம் தரும் மருத்துவம் பகுதியில் குடல் பாதுகாப்பு பற்றியும் அதை எப்படி நாம் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம் என்ன சாப்பிடலாம் என்று அழகாக சொன்னது ஆரோக்கியத்திற்கு வழிகாட்டி போல இருந்தது பாராட்டுக்கள். தாம்பரம் ஆவடி விமானப்படை நிலையங்கள் சார்பில் மாரத்தான் போட்டி நடந்த செய்தியும் படமும் கண்ணுக்கு குளிர்ச்சியாக இருந்தது பாராட்டுக்கள். தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் சியாமா பிரசாத் முகர்ஜி அவர்களின் வரலாறும் அந்த காலத்து கருப்பு வெள்ளை புகைப்படமும் செய்தியும் தகவலும் மிகவும் அற்புதம் பாராட்டுக்கள்.. மிக அற்புதமான தகவல்களை மிக அழகாக தொகுத்துக் கொடுக்கும் பல் சுவை களஞ்சியம் பக்கத்தில் வந்த விடுகதையும் ஜோக்ஸ் என்னை ஆவலுடன் படிக்க வைப்பதுதான் உண்மை. பன்முகம் பக்கத்தில் வந்த அனைத்து செய்தியும் படித்து முகம் மலர்ந்தேன். தேவையான செய்திகளை மட்டும் வடிகட்டி கொடுக்கும் தங்களின் அருமையான பணிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.
பதினாறாம் பக்கத்தில் வந்த அனைத்து வண்ண படங்களும் செய்திகளும் மனதிற்கு மகிழ்ச்சியாக இருந்தது. குற்றாலத்தில் மக்கள் குளிப்பதை பார்த்தவுடன் மகிழ்ச்சியாக இருந்தது. பாராட்டுக்கள். சுற்றுலா என்ற தலைப்பு கொடுத்து ஒவ்வொரு நாளும் ஒரு புதுமையான செய்தியை கொடுப்பதில் தமிழ்நாடு இ பேப்பருக்கு நிகர் தமிழ்நாடு இ பேப்பர் தான்.
மேகங்களுக்கிடையில் உணவு அருந்தும் புது அனுபவம் என்று மிக அற்புதமான காட்சியை பார்த்தவுடன் இது போல ஒரு வாய்ப்பு கிடைக்குமா என்று மனம் ஏங்கியது. தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் செய்திகள் என்று ஆப்பிள் வாட்ச் களுக்கான துணை செயலை உருவாக்கும் என்று நல்ல அண்மை அருமையான விஞ்ஞான தகவலை கொடுக்கும் தங்களுக்கு பாராட்டுக்கள். மீனவ மக்களுடன் இணைந்து குளத்திலிருந்து மீன் பிடித்தார் ராகுல் காந்தி அவர்கள் என்ற படத்தை பார்த்தவுடன் மகிழ்ச்சியாக இருந்தது. இப்படி மக்களுடன் மக்களாக பிணைந்து இருக்கும்போது மக்களுக்கு அரசியல் தலைவர்கள் மீது இருக்கும் மதிப்பு உயர்வது உண்மை. லண்டனில் ஓடும் ரயிலில் கத்திக்குத்து இதனால் 10 பேருக்கு காயம் இருவர் கைது செய்யப்பட்டனர் என்ற தகவல்களை படிக்கும் போது எந்த நாடாக இருந்தாலும் இது போல கடுமையான செயல்களில் ஈடுபடுவார்கள் போல என்று அச்சத்துடன் அயல்நாட்டு செய்தியை படித்தேன். எல்லா பக்கத்திலும் நல்ல செய்திகளாக இருந்ததால் திங்கள் கிழமை விடியலை தித்திக்கும் திங்களாக அமைத்துக் கொடுத்த தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.



-உஷா முத்துராமன்








FLAT URGENT SALE
திருச்சி பஞ்சப்பூர் புதிய பஸ் ஸ்டாண்ட் அருகில்
2BHK FLAT
Best Price Deal
குறைந்த விலை!
சிறந்த லொக்கேஷன்!
சிறந்த முதலீடு!
89031 05956

திருச்சி காமதேனு நகர், போலீஸ் காலனி IT Park அருகில்
சகல வசதிகளுடன் புதிய வீடு விற்பனைக்கு உள்ளது.
விலை ரூ.41,00,000/-
பத்திரப்பதிவு இலவசம்
தொடர்புக்கு: 83000-11186 94439-05278

---

COMMERCIAL BUILDING FOR RENT
800 Square Feet Second Floor building in Abees Tower at the entrance of Carmel Mount Road, Ponnappa Nadar Colony in available for Monthly rent. It is Suitable for I.T.Company
Rent: Rs.15,000 P.M
Contact: 9442214477

---

K.R.PROPERTY
தீபாவளி வாழ்த்துக்கள்!
கோவை திருச்சி ரோடு, இராமநாதபுரம், சிங்காநல்லூர் பகுதிகளில்
2.5 / 5.5 / 7 / 10 சென்ட் சைட்டுகள் வாங்க / விற்க
8122330572

---

Happy Birthday



சர்வீன் கோவிந்தராஜ்

---

வீடு வாடகைக்கு



திருச்சி குண்டூர் MIET கல்லூரி அருகில் 1BHK 2BHK வீடு வடகைக்கு
Contact Whatsapp 9952827579

---

வாடகைக்கு
நாகர்கோவில் மணிமேடை அருகில் 2000 ச.அடி Bldg, கார் பார்க்கிங் உடன் Bank, Finance, Software Company & Training Centre-க்கு ஏற்றது.
Cont: 9994811609 8608864937

---

BUILDING FOR RENT
in Arasur, Coimbatore
66758 sq.ft
Equal partition available
(Ready to Occupy in 30 Days)
Building width : 70 mtr.
Building Length : 88.6 mtr.
Power : 350 KVA and above
✆ 90954-30303
peninsulamarimuthu@gmail.com

---

AllIndiaJobz
FREE Job Placements
www.allindiajobz.com



FREE JOB PLACEMENT
WHATSAPP US / CALL US
9337501889/7789941009
Urgent Hiring !! Hurry Up
Multiple Job Openings for Freshers
Refer Your Friends who are searching jobs

---

வணிக வளாகம் வாடகைக்கு
அரியலூர்
பஸ் நிலையம் அருகில், ஜெயங்கொண்டம் ரோட்டில் சுமார் 800 ச.அடி கொண்ட தரைத்தளம் வாடகைக்கு உள்ளது.
Showroom / நிதி நிறுவனத்திற்கு ஏற்றது.
தொடர்புக்கு: 9445659427

---

வள்ளியூர் அருகில்
DTCP APPROVED PLOTS
வீட்டுமனை 3 சென்ட் ரூ. 6 லட்சம்
கமர்சியல் மனை 16 சென்ட் ரூ. 48 லட்சம்
9940 20 7778

---

இடம் விற்பனைக்கு
3.5 சென்ட்,
சிங்காநல்லூர் to ஹோப்ஸ் மெயின் ரோடு, ராமானுஜ நகர்,
93443 65645 99443 03030

---

வள்ளியூர் அருகில்
DTCP APPROVED PLOTS
வீட்டுமனை 3 சென்ட் ரூ. 6 லட்சம்
கமர்சியல் மனை 16 சென்ட் ரூ. 48 லட்சம்
9940 20 7778

---

OFFICE
SPACE FOR RENT @ GUINDY
+ 1st Floor 1300-sft
+ 2nd Floor 1300-sft
+ 3rd Floor 1300-sft
9841329316

---

திருச்சி கே.கே.நகர் ஐயப்பா நகரில்
2,100 சதுரடி நிலத்தில் 1000 சதுரஅடி பில்டிங்கில் வீடு விற்பனைக்கு உள்ளது
Rs.90 Lakhs
Cell: 9585400555

---

வள்ளியூர் NH அருகில்
வீட்டுமனை 4 சென்ட் ரூ. 4 லட்சம்
வீட்டுமனை 5 சென்ட் ரூ. 2 லட்சம்
9940 20 7778

---

குடோன் வாடகைக்கு
சத்திரோடு, கரட்டுமேடு காப்பிக்கடை அருகில்
3800 சதுரஅடி
குடோன் வாடகைக்கு.
98940 83747

---

மனை பிரிவுக்கு நல்ல இடம்
59½ சென்ட்
தென்னந்தோப்பு இரணியல் ரயில் நிலையம் அருகில்.
9952982749

---

TYRE கம்பெனி STAFF 50 நபர் தங்குவதற்கு
மாதவரம் மற்றும் திருவொற்றியூர் சுற்றுவட்டாரத்தில் ROOM வாடகைக்கு தேவை
91765 21641, 97899 74898

---

FLAT URGENT SALE
திருச்சி பஞ்சப்பூர் புதிய பஸ் ஸ்டாண்ட் அருகில்
2BHK FLAT
Best Price Deal
குறைந்த விலை!
சிறந்த லொக்கேஷன்!
சிறந்த முதலீடு!
89031 05956

---

இடம் விற்பனைக்கு
இராமன்புதூர் மீன் சந்தை அருகில் 6 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
ஆரல்வாய்மொழி to முப்பந்தல் மெயின்ரோட்டில் 15 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புக்கு: 8300134494 9360378520

---

COMMERCIAL SPACE FOR RENT
@ Ganapathy Sathy main road
(Opp Kannan Departmental Store)
2000 Sqft
Ist floor suitable for OFFICE & COMMERCIAL PURPOSES
98422 25310

---

VILAMBARAM
WANTED
10 SMART FEMALE
Telecallers
Job Type: Full-time
Education : Bachelor's degree
Freshers And Experience Both can apply.



SEO & DIGITAL MARKETING COMPANY SINCE 2020
Don't miss this opportunity
INTERESTED CANDIDATES CAN APPLY
+91 9337501889
+91 7789941009
Job @ CHENNAI
www.vilambaram.com

YESEM GROUP
INVITES
AGENT
DEVELOPMENT OFFICER
BUSINESS DEVELOPMENT
MANAGER
CONTACT:
YESEM CHITS PRIVATE LTD (Regd.)
No.159, First Floor, Madhavaram High Road,
Perambur, Chennai - 600 011.
(Near Canara Bank, Adj.to Appollo Computer Lab)
Cell No. 98402 78805 / 99447 88056
Land Line : 044 - 45938805 / 044 - 46148805
A NEW WAY TO BORROW, SAVE AND GROW

WANTED
✦MARKETING / SALES EXECUTIVE &
✦MACHINE OPERATOR
Offer: Salary Higher Than Current
+ Good Growth Opportunity .
fresher & experienced can apply .
GLASSTERR WINDOW SYSTEMS
Thudiyalur
(UPVC WINDOW INDUSTRY)
89254 54433

WANTED
வெல்டர்
பிட்டர்
ஹெல்பர்
வார சம்பளம் வழங்கப்படும்
PERFECT ENGINEERINGS
No.36, 9th Street, Subramaniyam palayam, G.N.Mills, Cbe - 29
63745 20793
73730 10107
SAA

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

WANTED
CHENNAI PROJECT
PIPING
➢ FABRICATORS
➢ TIG / ARC WELDERS
➢ SUPERVISORS
➢ GRINDERS
90920 08000 / 99421 71692
prateeshengineering@yahoo.co.in

PERMANENT JOB
➡ Plumbers
( பிளம்பர்கள் )
➡ Water Purification Service Technicians
MNC COMPANY.
9003101308

WANTED
Campus Manger
Store Manager
Assistant Librarian
(B.LS & M.LS)
ITI Electrical (Electrician / Wireman) ( 0-5 yrs Exp)
Drivers for school & college
8925803086
recruitmenthospital.tn@gmail.com

KEN Guarding & Facility Services
அண்ணா நகர், பூந்தமல்லி, இருங்காட்டுக்கோட்டை, புழல், பொத்தேரி, மணலி ஆகிய பகுதிகளுக்கு
★ S/M -Rs.24,000 - 4 Off.
★ Bouncers -Rs.22,000 - 4 Off.
★ ASO -Rs.21,000 - 4 Off.
★ SG & LG -Rs.18,000 - 4 Off.
மற்றும் Operation Manager & Field Officers தேவை
Salary: Rs.25,000 to Rs.35,000
11, Sippoy lane, Karayanchavadi, Ch-56
8939829153/54/56
8939070473

தேவை
டீசல் மெக்கானிக் & மார்க்கெட்டிங் எக்சிகியூட்டிவ்
முழு கேரளா / சிறந்த சம்பளம் + ஊக்கத் தொகை
தொடர்புக்கு:
95447 71700
94007 11808

CHENNAI SAKTHI STEEL PRODUCTS (P) LTD
WANTED
+POWER PRESS OPERATORS
+TURNER
+POLISHERS
278, SIDCO Industrial Estate, Thirumudivakkam, Chennai-44
7558111031

5 வருட அனுபவமுள்ள
கார் டிரைவர்கள்
சம்பளம் Rs. 22,000 to 25,000.
வேலை நேரம் 12 hrs.
& எலக்ட்ரீஷியன் தேவை.
நேரில் அணுகவும் ,
43, கண்ணதாசன் சாலை, தி.நகர், செ-17
Ct: 94454 32752

MITSUBISHI ELECTRIC
AIR CONDITIONERS
WANTED EXPERIENCED
Sales Engineers
for Ventilation Products
THE AC ZONE PVT LTD CHETPET
CONTACT@THEACZONE.COM
WHATSAPP 9841068380

டிரைவர் தேவை
Chairmanக்கு Automatic கார் ஓட்ட அனுபவமுள்ள டிரைவர் தேவை
98414 41844
93455 31270

AMBAL TECH
JUNIOR MAINTENANCE
Support Job for Automobile dealer in COIMBATORE. 1-2 yrs Preferably in Electrical Field ITI / Polytechnic
Ph:99430 26294
SAA
hr.ambaltech@gmail.com

செக்யூரிட்டி வேலைக்கு ஆண்/பெண் தேவை
சம்பளம் : 12000 - 16000
தங்கும் இடம் + உணவு இலவசம்
இடம் : கோவை, திருப்பூர்
படிப்பு : 10-ம் வகுப்பு
வயது : 21 முதல் 55 வரை
சாய் பாபா செக்யூரிட்டி சர்வீஸ்
பல்லடம்
திருப்பூர் - 641664
91598 90598

டிரைவர் தேவை
HIGH -END ஆட்டோமேடிக் கார் ஓட்டுவதற்கு அனுபவமுள்ள டிரைவர் தேவை
சம்பளம்: 25,000 + அல்லவன்ஸ்
Age 25 to 45 | 2 Wheeler Must.
அண்ணாநகர், அம்பத்தூர், வில்லிவாக்கம், கொளத்தூர், ரெட்டேரி அருகில் உள்ளவர்கள் மட்டும் அணுகவும்.
A52, Ankur Palm Springs No. 4 CTH Rd, Padi, Ch-50 Next to Padi Saravana Store
More Details: 9841 00 2005

PERSONAL
கார் டிரைவர் தேவை
Qualified Car Driver
VM Garden Outer Ring Road , West Tambaram
Age Below 40
Mail : vmgarden9@gmail.com
WhatsApp: 88700 02462

WANTED IN CIVIL
Senior Engg (6-10 Yrs)
Junior Engg (3-5 Yrs)
Site supervisor (1-2 Yrs)
Asst. Stores Manager (3-5 Yrs)
Quantity Surveyor (7-10 yrs)
75300 69901
work@masterlinestructures.com

கோவை காந்திபுரத்தில் உள்ள Non-Veg. ஹோட்டலுக்கு
ஹவுஸ்கீப்பிங் & சப்ளையர்கள்
வேலைக்கு தேவை
72000-10550
-CKNB-

பள்ளி வாகனத்தில் சென்று வர, குழந்தைகளை கவனிக்க பெண் பணியாளர்கள் தேவை
விண்மீன் ஐசிஎஸ்இ பள்ளி
பார்வதிபுரம், நாகர்கோவில்
செல் : 9080206589

PEST CONTROL OPERATOR
பூச்சி மருந்து அடிக்க ஆட்கள் தேவை
Cell : 99948 43057
93847 25836

ADVERTISE WITH US
CONTACT US
9438610756





LE RAJ COURTYARD
GUMMIDIPOONDI
Wanted
HOTEL RECEPTIONIST
GOOD COMPUTER SKILL,
ENGLISH SPEAKING.
SALARY 15K - 20K
WITH FOOD AND ACCOMMODATION
Contact:
9940763333


சமையல் மாஸ்டர் தேவை
கோவை இருகூர் L&T பைபாஸில் உள்ள பிரபல மருத்துவமனை கேன்டீனுக்கு அனுபவமுள்ள சமையல் மாஸ்டர் தேவை
94887 80957
99522 17606

வீட்டு வேலைக்கு ஆள் தேவை
வீட்டில் தங்கி இருந்து வீட்டு வேலைகளை செய்யத்தக்க நல்ல ஆரோக்கியமாக உள்ள பெண் தேவை தகுதிக்கேற்ற சம்பளம் தரப்படும்.
புரோக்கர்கள் தவிர்க்கவும்.
தொடர்பு கொள்ள:
94888 88223

URGENTLY REQUIRED
✦AC DUCTMAN
✦AC TECHNICIAN
✦CHILLER ELECTRICIAN
✦COPPER PIPE BRAZING
✦PIPE FITTER
✦PIPE WELDER
✦MECHNICAL FITTER
✦HVAC PROJECT MANAGER
✦MEP HELPER
Last drawn Salary 20% hike
RAPID HVAC SOLUTIONS PVT LTD
Poonamalle, Chennai 600123
enquiry@rapidhvac.co
vivekpandian@rapidhvac.co
90439 49587, 78458 29587



# பல்சுவை களஞ்சியம்



## அரிசி தேங்காய் பால் பாயிசம்



ஒரு மூடி தேங்காய் துருவல்
அரைகப் பச்சரிசி
ஒரு லிட்டர் பால்
ஒன்றரை கப் பொடித்த வெல்லம்
ஒரு ஸ்பூன் ஏலப்பொடி
தேவையான முந்திரி திராட்சை

செய் முறை

பச்சரியை வெது வெதுப்பான நீரில் ஒரு மணிநேரம் ஊறவைத்து தேங்காயுடன் சேர்த்து மிக்ஸியில் நன்கு அரைத்துக் கொள்ளவும்.

ஒரு லிட்டர் பாலை காய்ச்ச வேண்டும். ஒரு கரண்டி போட்டு கிளற வேண்டும். அதிலிருந்து கொஞ்சம் பாலை ஒரு கிண்ணத்தில் எடுத்து அரைத்த விழுதை கட்டிகள் இல்லாமல் கரைத்து பிறகு கொஞ்சம் கொஞ்சமாக காய்ச்சும் பாலில் விட்டு கைவிடாமல் கிளற வேண்டும்.

மற்றொரு அடுப்பில் வெல்லத்துடன் அரைகப் தண்ணீர் சேர்த்து ஒரு கொதி விட்டு வடிகட்டி பாலுடன் சேர்க்கவும். ஏலப்பொடியும் சேர்த்து விடவும். ரொம்ப கெட்டியாக இருந்தால் தண்ணீரோ காய்ச்சிய பாலோ சேர்க்கலாம். நன்கு வெந்தபின் இறக்கி முந்திரி திராட்சை அலங்கரித்து நைவேத்யம் செய்யலாம்.

பின் குறிப்பு: முந்திரி 2 பாதாம் 4 ஊறவைத்து சேர்த்து அரைக்கலாம். மில்க் மெய்டு, மில்க் பவுடர் சேர்க்கலாம். அவரவர் விருப்பம். நன்றி.

-வி.பிரபாவதி
மடிப்பாக்கம்

## சாப்பிட்ட பிறகு செய்யக்கூடாதவைகள்



1. சாப்பிட்டவுடன் தண்ணிரை வயிறுமுட்ட குடிக்க கூடாது. இதனால் ஜிரணநீர் நீர்ந்து போய் அஜிரணமாகும் பல நோய்கள்வர இது முக்கிய காரணமாக அமையும்.

2. சுமார் 40 நிமிடம் கழித்து தண்ணீர்தாகம் எடுக்கும் அப்போது குடிக்கவேண்டும்.

3. சாப்பிட்டதும் படுத்து விடக்கூடாது. காரணம், குடல் தனது செயல்பட மிகவும் சிரமப்படும். ஜீரணம் முறையாக நடக்காது.

4. குறைந்தது ஒரு மணிநேரம் கழித்தே உறங்க வேண்டும். இது மதியம் ஓய்வு எடுப்பவர்களுக்கும் பொருந்தும்.

5. சாப்பிட்டதும் குளிக்க கூடாது குறைந்தது 2 மணிநேரம் கழித்தே குளிக்க வேண்டும்.

6. சாப்பிட்டு முடித்ததும் எந்த பழங்களையும் சாப்பிடக்கூடாது. காரணம், உணவின் ஜீரண நேரம் குறைந்தது 5 மணிநேரங்களாகும். பழங்களின் நேரம் அதிகபட்சம் 2 மணி நேரம்தான். இந்த வித்தியாசத்தால் நாம் சாபிட்ட பழம் வாயுவாக மாற்றம் பெரும். இதில் ஒரு பழத்துக்கு மட்டும் விதிவிலக்கு அது பேரீச்சம்பழம்.

7. சாபிட்ட உணவு ஜீரணமாகாத நிலையில் வேறு உணவுகள் எதையும் உண்ணக்கூடாது. காரணம், இவ்வாறு சாப்பிட்டால் ஏற்கனவே சாபிட்ட உணவு ஜீரணத்தை கடுமையாக பாதிக்கும். இதனால் சுகர் வர காரணமாக அமையும்.

8. குளிர்பானங்கள், ஐஸ்கீரீம், ஐஸ்வாட்டர் இவைகளையும் குடிக்க கூடாது. காரணம், உணவு ஜீரணமாக நமது குடலில் வெப்பம் இருக்கவேண்டும். அந்த வெப்பத்தை இந்த குளிர்பானங்கள் இல்லாமல் செய்துவிடும்.

9. சாப்பிட்டதும் பரபரப்பாக இயங்குவதோ நடப்பதோ பளுவானவற்றை தூக்குவதோ கூடாது. காரணம், அவ்வாறு செய்தால் உணவு கீழ்நோக்கி செல்லாமல் மேல் நோக்கி வரும். இதனால் நெஞ்சு எரிச்சல், வாயு தொல்லைகள் ஏற்படும்.

-A.s.Govinda rajan
Kodambakkam Chenna

# மீம்ஸ்












# விடுகதை

| | |
|---|---|
| உடம்பெல்லாம் தங்கநிறம், தலையில் பச்சை கிரீடம் அது என்ன? | அன்னாசிப் பழம் |
| குண்டுச் சட்டியில் கெண்டை மீன். அது என்ன? | நாக்கு |
| கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள் அவள் யார்? | மெழுகுத்திரிவத்தி |
| நன்றிக்கு வால் கோபத்துக்கு வாய் அது என்ன? | நாய் |
| நீண்ட உடம்புக்காரன், நெடுந்தூரப் பயணக்காரன்? | ரயில் |
| எடுக்க எடுக்க வளரும். எண்ணெயைக் கண்டால் படிந்துவிடும். அது என்ன? | முடி |



# ஜோக்ஸ்

- (1)"நம்ப மாப்பிள்ளை நம்ம 'அகிலாவை தங்கத் தாம்பாளத்துல வச்சு தாங்குவேன்'னு சொல்றாரு.. அப்படியே புல்லரிச்சுப் போச்சுங்க... உங்களுக்கு..?!".
*"அடி மண்டு.... சீர்வரிசையில பித்தளை தாம்பாளத்துக்கு பதிலாக...தங்கத்துல தாம்பாளம்... வேணும்னு பூடகமா கேட்கறாங்களோன்னு நானே பதறிப்போய் நிக்கறேன்..நீ வேற.."****

===================

(2)"கல்யாணத்தின் போது எம்மவளை குத்துவிளக்கு மாதிரி இருக்கான்னு சொன்னாங்க.. சந்தோசப்பட்டேன்... ஆனா இப்ப அதுக்கு வருத்தப்படறேன்' அப்படீங்கறீங்களே என்னாச்சு..?"
*"அதை ஏன் கேட்கறீங்க.... அவளுக்கு குளியல் சோப்புக் கூட வாங்கித்தராம வெறும் உப்பும்..புளியும் தேய்ச்சி குளிக்க சொல்றாங்களாம்... சம்பந்தியம்மா.. அதனாலதான்..".
****

===================

*(3)"அந்த ஆர்கானிக் ஷாப் காரங்க ரொம்ப தில்லுமுல்லு பார்ட்டிங்க..னு எப்படி சொல்றீங்க.?".
*"அதை ஏன் கேட்கறீங்க... நேத்து ஒருகிலோ கொள்ளும்... ஒருகிலோ குதிரைவாலியும் பேக் பண்ணிகுடுங்கன்னு வாங்கிட்டு போய் வீட்ல பார்த்தா குதிரை வாலி மட்டும் தான் இருக்கு...திரும்பிவந்து கேட்டா... தனித்தனியா கொண்டுபோகலாம்ல... கொள்ளை குதிரை சாப்பிட்டு இருக்கும்னு...கூலா சொல்றாங்களே..".

===================

(4)"வெளிநாட்டுல இருக்குற பையனுக்கு பலகாரம் பண்ணி அனுப்புனியே... என்ன சொன்னான் போன்ல...பார்வதி.?".
*"என் தலைமுடி முப்பத்தாறு அங்குல நீளம் இருக்காம்... ஒண்டியா பராமரிக்க கஷ்டப்படுவ..ஒரு தடவை திருப்பதி போய் மொட்டை போட்டுட்டு வான்னு சொன்னான் ரேவதி.!".
*** *





# சமையல் அறை ஸ்பெஷல்



## உணவு சமைக்கும் போது...

பாகற்காய் பழுத்துவிடாமல் இருக்க பாகற்காயை வில்லைகளாக்கி உப்பைத் தூவி ஒரு பாத்திரத்தில் குலுக்கி வைத்துவிட்டால் இரண்டு மூன்று நாட்கள் ஆனாலும் பாகற்காய் அப்படியே இருக்கும். ஃபிரிட்ஜில் வைத்தால் ஒரு வாரம் வரையில் பிரெஷ்ஷாக இருக்கும்.

கீரை மசியல் செய்யும்போது புளிக்கு பதிலாக பொடியாக அரிந்த மாங்காயைச் சேர்த்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

ஜவ்வரிசியைச் சாதம்போல் வேகவைத்து பிறகு மோரில் கரைத்து உப்பு போட்டுச் சாப்பிட்டால் வயிற்று வலி குணமாகும். வயிற்றுப்போக்கும் நிற்கும்.

திரட்டுப்பால் செய்யும்போது சிறிய மெல்லிய எவர்சில்வர் தட்டை அதனுள் போட்டால் அடிப் பிடிக்காமலும், பால் பொங்காமலும் இருக்கும்.

பருப்பை குக்கரில் சமைக்கும் போது சிறிது மஞ்சள் தூளையும், ஒரு டீஸ்பூன் நெய்யையும் சேர்த்தால் மணமாகவும், சுவையாகவும் இருக்கும்.

ரசத்தை இறக்குவதற்கு முன் கறிவேப்பிலைப்பொடி தூவி இறக்கினால் மணமாக இருக்கும்.



சமையல் செய்யும்போது சூடான எண்ணெய் பட்டுவிட்டால் உருளைக்கிழங்கைச் சிறிது அரைத்துப் பூசினால் கொப்பளங்கள் ஏற்படாது.

ஜவ்வரிசி பாயசம் செய்வதற்கு முன், ஜவ்வரியை லேசாக வறுத்து பிறகு அதில் வெந்நீரை ஊற்றி அரை மணி நேரம் அப்படியே வைக்கவும். பிறகு பாயசம் செய்தால் சீக்கிரம் வெந்துவிடும்.

காய்கறிகளை வேகவைக்கும்போது அதிக தண்ணீர் வைத்து வேக வைக்க கூடாது. ஏன் என்றால் காய்கறிகளில் உள்ள வைட்டமின் சத்துகள் போய்விடும்.

காய்ந்த மிளகாயை வறுக்கும்போது நெடி வரும். அவை வராமல் இருப்பதற்கு சிறிது உப்பு போட்டு வறுத்தால் நெடி வராது.

பச்சை மிளகாயை காம்புடன் வைக்காமல் காம்பை எடுத்து விட்டு நிழலான இடத்தில் வைத்தால் நீண்ட நாட்கள் இருக்கும்.

முட்டைகோஸில் உள்ள தண்டை வீணாக்காமல் சாம்பாரில் போட்டு சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும்.

உருளைக்கிழங்கு வறுவல் செய்யும்போது புளிப்பு இல்லாத தயிர் அரைக்கரண்டி ஊற்றி செய்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

கறிவேப்பிலை காயாமல் இருப்பதற்கு ஒரு அலுமினியப் பாத்திரத்தில் போட்டு மூடி வைத்தால் காயாமல் இருக்கும்.

காய்கறிகளை அரிந்து பிரிட்ஜில் வைத்தால், காய்கறிகளில் உள்ள சத்து குறைந்து விடும்.

சமையலில் உப்பு அதிகமாகி விட்டால் உருளைகிழங்கை அரிந்து போட்டால் உப்பை எடுத்துவிடும்.

உருளைக்கிழங்கு வேக வைத்த தண்ணீரில் பாத்திரங்களை கழுவினால் பாத்திரங்கள் பளபளப்பாக இருக்கும்.

## முந்திரி பருப்பு கேக்

தினமும் முந்திரி சாப்பிடுவது உடலினை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும் முக்கிய உணவுப்பொருளாகும். முந்திரி பருப்பில் மாங்கனீசு, பொட்டாசியம், தாமிரம், இரும்பு, மெக்னீசியம், துத்தநாகம் மற்றும் செலினியம் கனிம தாதுக்கள் அதிக அளவில் நிறைந்துள்ளது. முந்திரியை அப்படியே சாப்பிடுவதை விட குழந்தைகள் விரும்பும் கேக் போன்று செய்து கொடுப்பதால் குழந்தைகள் விரும்பி சாப்பிடுவார்கள்.



தேவையானப் பொருட்கள் :
முந்திரிப் பருப்பு - 1ஃ2 கிலோ
சர்க்கரை - 1ஃ2 கிலோ
ஏலக்காய் பொடி - 2 ஸ்பூன்
நெய் - 100 கிராம்

செய்முறை:
முந்திரி கேக் செய்வதற்கு முதலில் ஒரு வாணலியில் நெய் விட்டு அதில் முந்திரிப் பருப்பைப் போட்டுப் பொன்னிறமாக வறுத்து எடுத்துக் கொண்டு, ஆறிய பிறகு மிக்ஸியில் போட்டுப் பொடியாக அரைத்து எடுத்துக் கொள்ளவும். பிறகு சர்க்கரையில் சிறிது நீர் விட்டுப் பாகுப்போல காய்ச்சவும். சர்க்கரைப்பாகானது கம்பிப்பாகு பதத்திற்கு வந்தவுடன் அதில் முந்திரிப்பருப்புப் பொடி, ஏலக்காய் பொடி ஆகியவற்றை கலந்து, அதனுடன் சிறிது நெய் சேர்த்து ஐந்து நிமிடம் வைத்திருந்தப் பிறகு ஒரு தட்டை எடுத்து அதில் நெய்யைத் தடவி அதில் இந்த கலவையைக் கொட்டி, ஆறியப் பிறகு விருப்பமான வடிவத்தில் சிறு சிறு துண்டுகளாகக் கட் செய்யவும். சுவையான சத்துக்கள் நிறைந்த முந்திரி கேக் ரெடி.

## முட்டைக்கோஸ் சாலட்

பச்சை இலைக் காய்கறிகளில் முக்கியமான முட்டைக்கோஸ்ஸில் வைட்டமின் ஏ, இ, சோடியம், இரும்பு, கால்சியம், பாஸ்பரஸ் புரதம், தாது உப்புக்கள் ஆகிய சத்துக்கள் உள்ளன. உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு உறுதுணையாக இருப்பது முட்டைக்கோஸ்.



பயன்கள் :
முட்டைகோஸை பச்சையாக அரைத்து 60 மில்லி அளவுக்குக் சாறு எடுத்து குடித்து வர தொண்டைப் புண் குணமாகும்.

சர்க்கரை நோயாளிகள் முட்டைக்கோஸ் சாப்பிடுவதால் சர்க்கரையின் அளவு குறையும்.

ஜலதோஷத்தினால் துன்பப்படுபவர்கள் முட்டைக்கோஸை நன்றாக வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் சளித்தொல்லையிலிருந்து விடுபடலாம்.

தினமும் முட்டைக்கோஸ் சாப்பிடுவதால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.

முட்டைக்கோஸ் சாப்பிடுவதால் கண் நரம்புகளானது சீராக இயங்கும்.

முகப்பருக்கள் இருப்பவர்கள் வாரம் இருமுறை உணவில் சேர்த்து வந்தால் பருக்கள் நீங்கி முகம் பளபளப்பாகும்.

முட்டைக்கோஸை பொடிப்பொடியாக நறுக்கி, அதனுடன் தயிர், வெங்காயம், உப்பு ஆகியவற்றைச் சேர்த்துச் சாப்பிட்டால் இளைத்த உடல் பெருக்கும்.

புற்றுநோய் வராமல் தடுக்கும் ஆற்றல் முட்டைக்கோஸ்ஸிற்கு உண்டு.

தேவையானப் பொருட்கள் :
முட்டைக்கோஸ் - 1
வெங்காயம் - 2
வெள்ளரிக்காய் - 1
பச்சை மிளகாய் - 2
பாசிப்பருப்பு - 1 கப்
தக்காளி -2
எலுமிச்சை சாறு - 1 டீஸ்பூன்
கொத்தமல்லி இலை - சிறிது
இஞ்சி - 1 துண்டு
உப்பு - தேவையான அளவு

செய்முறை :
முட்டைக்கோஸை முதலில் பொடிப்பொடியாக நறுக்கி வேகவைத்துக் கொள்ளவும். பாசிப்பருப்பை வாணலியில் வறுத்து 15 நிமிடம் ஊற வைத்துக்கொள்ளவும். வெங்காயம், பச்சை மிளகாய், வெள்ளரிக்காய் முதலியவற்றைப் பொடிப்பொடியாக நறுக்கிக் கொள்ளவும். இஞ்சியை தோல் சீவி விட்டு, துருவி எடுத்துக்கொள்ளவும். பிறகு ஊற வைத்துள்ள பாசிப்பருப்புடன் வேகவைத்துள்ள முட்டைக்கோஸ் மற்றும் நறுக்கி வைத்துள்ள வெங்காயம், பச்சை மிளகாய், வெள்ளரிக்காய், துருவிய இஞ்சி, கொத்தமல்லி இலை, உப்பு, எலுமிச்சை சாறு ஆகிய அனைத்தையும் ஒன்றாக கலந்து பரிமாறவும். சூப்பரான முட்டைக்கோஸ் சாலட் தயார்.

## பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி !!

ஆரோக்கியமான உணவை உட்கொண்டால், நாள் முழுவதும் நன்கு சுறுசுறுப்புடன் செயல்பட முடியும். அதிலும் தினமும் சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. இப்போது சத்து நிறைந்த பச்சைப்பயிறு வைத்து பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி செய்வது எப்படி



தேவையானப் பொருட்கள் :
முழு பச்சைப்பயறு - 100 கிராம்
கோதுமை மாவு - 5 கப்
பெரிய வெங்காயம் - 2
கடுகு - 1 டீஸ்பூன்
உளுத்தம்பருப்பு - 2 டீஸ்பூன்
மஞ்சள் தூள் - கால் டீஸ்பூன்
சீரகத்தூள் - அரை டீஸ்பூன்
பூண்டு - 5 பல்
பச்சை மிள்காய் - 2
தேங்காய் துருவல் - கால் கப்
நறுக்கிய கறிவேப்பிலை - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு
தண்ணீர் - தேவையான அளவு

செய்முறை :
பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி செய்வதற்கு முதலில் ஒரு பாத்திரத்தில் கோதுமை மாவை போட்டு, தேவையான அளவு தண்ணீர், எண்ணெய், உப்பு சேர்த்து நன்கு பிசைந்து வைத்துக்கொள்ளவும்.
பின்பு ஒரு பாத்திரத்தில் பச்சைபயறை போட்டு, தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, குறைந்தது 5 மணி நேரம் ஊறவைக்கவும்.
பின்பு மற்றொரு பாத்திரத்தில் ஊறிய பச்சைப்பயறைப் போட்டு வேக வைத்து, அதில் உள்ள தண்ணீரை வடித்துவிடவும்.
அடுத்து வெங்காயத்தைப் பொடிப்பொடியாக நறுக்கி வைத்துக்கொள்ளவும். அடுத்து பூண்டை தோலுரித்து தட்டி வைத்துக்கொள்ளவும்.
அடுத்து தேங்காய் துருவல், பச்சை மிளகாய், மஞ்சள், சீரகத்தூள் ஆகியவற்றை மிக்ஸியில் போட்டு ஒரு சுற்று சுற்றி எடுக்கவும். அடுத்து ஒரு வாணலியில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடானதும், அதில் கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை, நறுக்கிய வெங்காயம், தட்டிய பூண்டு ஆகியவற்றைப் போட்டு தாளித்து, அதனுடன் அரைத்து வைத்துள்ள மசாலாவை சேர்த்து வதக்கவும்.

பின்பு அதனுடன் வேகவைத்த பச்சைப்பயறை சேர்த்து, அதனுடன் தேவையான அளவு உப்பு சேர்த்து கிளறி இறக்கினால் பச்சைப்பயறு ஸ்டஃபிங் ரெடி.

அடுத்து பிசைந்து வைத்துள்ள கோதுமை மாவை சிறுசிறு உருண்டைகளாக உருட்டி, உருண்டைகளுக்கு நடுவில் குழி செய்து அதனுள் பச்சைப்பயறு ஸ்டஃபிங் வைத்து மூடி சப்பாத்திகளாக தேய்த்து, தோசைக்கல்லில் போட்டு இரண்டு புறமும் நன்கு வேக வைத்து எடுத்தால் பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி ரெடி.

**A s Govinda rajan**
Kodambakkam Chennai

## வீட்டில் கேஸ் சிலிண்டர் உபயோகிக்கும் போது கவனிக்க வேண்டிய விஷயங்கள்!




பொதுவாக நகரங்களில் அனைத்து வீடுகளிலும் கேஸ் அடுப்பு இருக்கிறது. அனைவருக்கும் கேஸ் அடுப்பை பயன்படுத்தும் விதம் நன்கு தெரிந்திருக்கும்.

சமையல் சிலிண்டருக்கு முதல் முறையாக இணைப்புப் பெறும் போது, சமையல் கேஸ் பாதுகாப்பாக பயன்படுத்தும் முறை பற்றி தெரியாவிட்டால் சிலிண்டர் வினியோகிக்கும் நபரிடம் செயல்முறை விளக்கம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

வெப்பமான பிற பொருட்களில் இருந்து சிலிண்டரை சில அடிகள் தள்ளி வைத்திருக்க வேண்டும். சிலிண்டரை பயன்படுத்தும் போது அதன் அருகில் மண்ணெண்ணெய் அல்லது வேறு வித எரிவாயு சம்மந்தமான அடுப்புகளை வைத்து பயன்படுத்தக் கூடாது. சிலிண்டர் வால்வின் உள்புறத்தில் ரப்பர் டியூப் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

சிலிண்டரில் கசிவு இருப்பதாக உணர்ந்தால் உடனே சோப்பு நீர் கலந்து சிலிண்டர் மீது ஊற்றினால் நீர்க் குமிழ் உருவாகும். இதைக் கொண்டு எரிவாயு கசிவை பரிசோதிக்க வேண்டும். எரியும் தீக்குச்சி மூலம் பரிசோதிக்கக் கூடாது.

நைலான் கயிற்றுடன் இருக்கும் பாதுகாப்பு மூடி எப்போதும் சிலிண்டரிலேயே பிணைக்கப்பட்டு இருக்க வேண்டும். கேஸ் கசிவு இருப்பதை அறிந்தால் பாதுகாப்பு மூடியால் வால்வை மூட வேண்டும்.

## சமையலறையில் மறைந்திருக்கும் கிருமிகளை சுத்தம் செய்தல்!

சமையலறையில் தான் பெரும்பாலான பாக்டீரியா மற்றும் கிருமிகளின் பெருக்கம் அதிகமாக இருக்கும். அவ்வாறு மறைந்திருக்கும் நுண்ணுயிரிகள் சமையல் அறையில் காய்கறி வெட்டும் பலகைகள், அலமாரி கைப்பிடிகள் மற்றும் உணவு பாத்திரங்களில் எளிதில் பரவும்.



அதனால் நம் உடம்பில் உள்ள செரிமான மண்டலத்தின் செயல்பாட்டை குறைத்து, நோய் வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

நோயில் இருந்து நம்மை பாதுகாக்க எந்த ஒரு வேலையை செய்தாலும், உணவு உட்கொள்ளுவதற்கு முன்பும், பின்பும் அவ்வப்போது கைகளை சுத்தமாக சோப்பு மற்றும் தண்ணீர் கொண்டு கழுவுதல் வேண்டும்.

சுத்தமான குடிநீரில் சமையல் செய்ய வேண்டும். நல்ல தண்ணீர் பயன்படுத்த வேண்டுமானால், குறிப்பாக மழை காலங்களில் கிணற்று தண்ணீர் அல்லது மழை நீரை சமையலுக்கு பயன்படுத்துவதை தவிர்க்கவும், இல்லை என்றால் அந்த நீரை கொதிக்க வைத்து உபயோகிக்க வேண்டும்.

பாத்திரங்களை கழுவ பயன்படுத்தும் ஸ்பாஞ்ச்களில் கிருமிகள் தங்கும் வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. மேலும், சிங்க்கை கழுவ வேறு ஸ்பாஞ்சை பயன்படுத்த வேண்டும். பாத்திரம் கழுவிய ஒரே ஸ்பாஞ்சை சிங்க்கை கழுவ பயன்படுத்த கூடாது.

மேலும், இறைச்சிகளை குளிர்சாதன பெட்டியில் வைத்து பயன்படுத்துவதால், அதில் இருக்கும் நுண்ணுயிரிகள் எப்போதும் குளிர்சாதனப் பெட்டியில் ஏதாவது இடத்தில் படிந்திருக்கும். இறைச்சிகளுக்கு பயன்படுத்திய கத்தி அல்லது ஸ்பூன் போன்றவற்றால் அலமாரியில் உள்ள பாத்திரங்கள் மற்றும் இறைச்சி உள்ள பாத்திரத்தை நன்கு சுத்தம் செய்யாமல் இருப்பதால் கிருமிகள் நம்மை தாக்கும்.

அதுமட்டும் அல்லாமல் கரப்பான் பூச்சி, எறும்புகள் மற்றும் பாக்டீரியா போன்றவை ஈரப்பதம் மற்றும் இருட்டு நிறைந்த இடங்களில் அதிகமாக வர வாய்ப்புள்ளது. எனவே வீட்டில் உள்ள பைப்-களை அனைத்தும் வாரத்திற்கு ஒரு முறை சூடான நீரைக் கொண்டு கழுவினால் நுண்ணுயிர்கள் அழிந்து விடும்.

பொதுவாக ஆடைகளை மட்டுமே நாம் துவைத்து சுத்தமாக வைத்துகொள்வோம். ஆனால் நாம் சமையலறையில் பயன்படுத்தும் துண்டுகளை கவனத்தில் கொண்டு சுத்தம் செய்ய மறந்துவிடுவோம். அதுவும் அந்த துண்டுகள் ஈரத்தன்மை கொண்டு உலராமல் இருப்பதால், சமையல் அறையில் கிருமிகள் அதிகமாக பரவிவிடும். அதனால் தினமும் அந்த துண்டுகளை துவைத்து உலர வைத்து பின்பு பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு சுத்தம் செய்து வந்தால், நம்மை அறியாமல் பரவும் கிருமிகளை, சமையலறையை சுத்தம் செய்வதன் மூலம் நாம் ஆரோக்கியமான வாழ்வை வாழ முடியும்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகள்



**கிருஷ்ணகிரி, நவ.4:** கிருஷ்ணகிரி அ. பெ. மே. நி. பள்ளியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. முனிராஜ் அவர்கள் தலைமை யில் நடைபெற்றது. இதில் ஒசூர் கல்வி மாவட்டம் கெலமங்கலம் ஒன்றிய பைரமங்கலம் மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் பங்கு பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட திட்ட அலுவலர் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்கள்.

மேலும் பள்ளி தலைமை ஆசிரியை திருமதி. மிருநாளினி மற்றும் பள்ளி ஆசிரியர்கள் பாராட்டினார்கள்.

## The GeeKay World School பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள Convention Hall மற்றும் Badminton Academy திறப்பு





**ராணிப்பேட்டை, நவ.4:** ராணிப்பேட்டையில் உள்ள *The GeeKay World School* பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள *Convention Hall* மற்றும் *Badminton Academy*-ஐ நேற்று மாண்புமிகு தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார், இதில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி அவர்கள் அரக்கோணம் நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத்காந்தி ஜி.கே. குழுமம் சந்தோஷ் காந்தி ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் *J.L.*ஈஸ்வரப்பன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டார்கள்.

## அறிமுகக் கூட்டம்



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மாணவர் அணியில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாணவர் அணிச் செயலாளர் ராஜீவ் காந்தி பங்கேற்றனர்.

## வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு கலெக்டர் ஆலோசனை





ஈரோடு அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சி வகுப்பில் கலெக்டர் கந்தசாமி ஆலோசனை வழங்கினார்.

## மக்கள் குறைதீர் கூட்டம்



கிருஷ்ணகிரியில் மக்கள் குறைதீர் கூட்டத்தில், வடமாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரதமரின் நிவாரண நிதிக்காக ரூ.1 லட்சத்து 25 ஆயிரத்திற்கான காசோலையை கலெக்டர் தினேஷ் குமாரிடம் முப்படை வீரர்கள் நல சங்க நிர்வாகிகள் வழங்கினர்.

## கோவிந்தராஜ பெருமாள் கோயில் கும்பாபிஷேகம்



சிதம்பரம் தில்லை கோவிந்தராஜ பெருமாள் கோயில் கும்பாபிஷேகம் நேற்று நடந்தது.

## ஜி நித்தியா எல் வேலவன் திருமண வரவேற்பு



திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் 2/11/2025 அன்று மணமக்கள் ஜி நித்தியா எல் வேலவன் திருமண வரவேற்பு திரு டாக்டர் எம் கோபாலகிருஷ்ணன் திருமதி ஜி சுதா கோபாலகிருஷ்ணன் அவர்கள் இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் திரு எம் மோகன் குமார் தமிழ்நாடுகாங்கிரஸ் கமிட்டி ஆர் கே நகர் ஒன்னாவது சர்க்கிள் பொறுப்பாளர் கலந்துகொண்டார்

## அதிக ரத்த தானம் செய்த ராமநாதபுரம் தமுமுக மருத்துவ சேவை அணி



அதிக ரத்த தானம் செய்த ராமநாதபுரம் தமுமுக மருத்துவ சேவை அணிக்கு கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

## பிரதோஷ பூஜை



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த பெரும்பூண்டி கங்காதேவி சமேத கங்காதேஸ்வரர் கோவிலில் திங்கட்கிழமை பிரதோஷ வழிபாடு பெங்களூர் முருகன் கிரானைட் குடும்பத்தினர் சார்பில் சிறப்பு பிரதோஷ வழிபாடு நடைபெற்றது

## நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்



மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி, கணியூரில் நடந்த "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் சுவாமிநாதன், கயல்விழி வழங்கினர்.

## முன்னாள் அமைச்சர் நல்லுசாமி இல்லத் திருமண விழா



திருச்சியில் முன்னாள் அமைச்சர் நல்லுசாமி இல்லத் திருமண விழாவில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் மணமக்களை வாழ்த்தினார்.

## புதுப்பிக்கப்பட்ட காவல் நிலையம்



சிங்கபெருமாள் கோவிலில் புதுப்பிக்கப்பட்ட காவல் நிலையத்தை அமைச்சர் தா. மோ. அன்பரசன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். கலெக்டர் சினேகா, தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக், செங்கல்பட்டு எம்.எல்.ஏ வரலட்சுமி உடன் உள்ளனர்.

## அண்ணா அறிவகம் மாவட்ட கணினி மைய அறை திறப்பு



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள அண்ணா அறிவகம் - மாவட்ட கணினி மைய அறையை (District War Room) திறந்து வைத்து வாழ்த்திய போது...

## திருவண்ணாமலை மாவட்டத்தில் தங்கப் புதையல்



திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரத்தூரில் கோவிலூர் ஊராட்சியில் அமைந்துள்ள சிவன் கோயிலின் புனரமைப்புக் காக தோண்டப்பட்ட பள்ளத்தில் 100-க்கும் மேற்பட்ட தங்க காசுகள் கண்டெடுப்பு. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## இலங்கை தமிழர் மறுவாழ்வு மையத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் 198 வீடுகளை அமைச்சர் நாசர், ஆய்வு



கும்மிடிப்பூண்டி, பெத்திக்குப்பம் இலங்கை தமிழர் மறுவாழ்வு மையத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் 198 வீடுகளை அமைச்சர் நாசர், கலெக்டர் பிரதாப் ஆய்வு செய்தனர்.

## வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சி



ராமநாதபுரம் மாவட்டத்தில் எஸ்ஐஆர் குறித்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகளை கலெக்ட சிம்ரன்ஜீத் சிங் காலோன் ஆய்வு செய்தார்.

## 1500-வது மீலாது விழா



திருப்பூர் வட்டார ஜமாஅத்துல் உலமா சபை சார்பில் நடந்த 1500-வது மீலாது விழா, சமய நல்லிணக்க விழா மற்றும் விருது வழங்கும் விழாவில் அமைச்சர் சுவாமிநாதன் பங்கேற்றார்.

## சிறப்பு தீவிர சுருக்கத் திருத்தம் பயிற்சி



ராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் சிறப்பு தீவிர சுருக்கத் திருத்தம் தொடர்பாக வாலாஜா வட்டாட்சியர் அலுவலகத்தில் நடந்த பயிற்சி வகுப்பில் கலெக்டர் சந்திரகலா ஆலோசனை வழங்கினார்.

## ரவுசு மணி

புயலும் கோபமும்
ஒன்றுதான்....
வீசும் போதும்
பேசும் போதும்
ஒன்றும்
தெரியாது......
அதற்கு பிறகு
தான் அதன்
பாதகங்கள்
என்னவென்று
புரியும்....



V. முத்து ராமகிருஷ்ணன்

## புதிய சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தின் குறைபாடுகள் குறித்து கோரிக்கை மனு

*தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கம், மாநில மையம் சார்பாக, தமிழ்நாடு புதிய சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தின் குறைபாடுகள் குறித்து, கருவூலத்துறை கூடுதல் இயக்குநர் மற்றும் இணை இயக்குனர் ( புதிய சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம்) ஆகியோரை சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டு அவர்களிடம் கோரிக்கைகளை எடுத்துரைத்து விரிவாக விவாதிக்கப்பட்டது. விரைவில் நடவடிக்கை எடுப்பதாக இணை இயக்குனர் உறுதி அளித்தார்.*

*பேச்சுவார்த்தையில், சங்கத்தின் சார்பில், மாநிலத்தலைவர் என்.*



*ஜெயச்சந்திரன். பொதுச் செயலர் கி. இளமாறன், மாநில துணைத்தலைவர் குரு சந்திரசேகரன், மாநில துணைத்தலைவர் என். அரங்கநாதன், மாநில செயலாளர் செந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் பங்கேற்றனர்.*

## குன்னத்தில் பாமக தலைவர் அன்புமணி



பெரம்பலூர் மாவட்டம், குன்னத்தில் பாமக தலைவர் அன்புமணி பேசினார்.

## வாக்குச்சாவடி முகவர்களுக்கான பயிற்சி



வாணியம்பாடி இஸ்லாமியா ஆண்கள் கல்லூரியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் தொடர்பாக வாக்குச்சாவடி முகவர்களுக்கான பயிற்சி மற்றும் ஆலோசனை கூட்டத்தில் கலெக்டர் சிவசவுந்தரவல்லி பங்கேற்றார்.

## மாரத்தான் போட்டி



தருமபுரம் ஆதீனகர்த்தரின் மணி விழாவை யொட்டி நேற்று மாரத்தான் போட்டி நடந்தது.

# சுற்றுலா:அழகிய வெள்ளி கடற்கரை குறித்த முக்கியத் தகவல்கள்!



சென்னையில் இருப்பது தங்க கடற்கரை. அதேபோல் தமிழ்நாட்டில் சில்வர் பீச் வெள்ளி கடற்கரை உள்ளது. குழந்தைகளோடு சுற்றுலா வர மிக அருமையான இடம் அற்புதமான சூழ்நிலை. எங்கே இருக்கு என்று பார்ப்போமா?

இந்தியாவின் தென்கிழக்கு கடற்கரையில்வெள்ளி கடற்கரை அமைந்துள்ளது. இது கடலூர் நகரத்திலிருந்து 2 கிமீ தொலைவில் உள்ளது. இருப்பினும், வெள்ளி கடற்கரையினால் எந்த பாதிப்பும் நகரத்திற்கு ஏற்படுவதில்லை.

கோரோமாண்டல் கடற்கரையில் இரண்டாவது நீண்ட கடற்கரையும், ஆசியாவின் மிக நீண்ட கடற்கரையோரங்களில் இதுவும் ஒன்றாகும்.

கடற்கரையின் 57 கிமீ நீளமான கடற்கரை கடுமையான முகத்துவார அரிப்பு ஏற்படுகிறது. கடலூர் நகரபேருந்து நிலையத்திலிருந்து வெள்ளி கடற்கரை கடற்கரை இடையே அடிக்கடி பேருந்துகள் இயக்கப்படுகின்றன. நகரத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் டாக்சிகள் மற்றும் ஆட்டோக்கள் மூலமாகவும் இங்கு செல்லலாம். கடற்கரைக்கு தெற்கே உள்ள தெற்கு கடலூர் ஒரு தனி தீவு போல தோன்றுகிறது. முகத்துவார நீர் தீவு போன்ற அமைப்பிலிருந்து பிரதான கடற்கரையை பிரிக்கிறது.

நீர்விளையாட்டுகளுக்கு ஏற்ற பாதுகாப்பான இடம். தற்போது படகு குழாம் மூடப்பட்டுள்ளது. மேற்கு நோக்கி உள்ள ஒரு நதியில் உள்ள அடர்ந்த மாங்குரோவ் காடுகளில் பறவைகள் தங்குவதற்கு ஏற்றசூழல் இருக்கிறது.

இக்கடற்கரையில் நூற்றாண்டு பழமையான கலங்கரை விளக்கமும், ஒரு சில ஒய்வு இல்லங்களும் அமைந்துள்ளது. சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக மாநில அரசாங்கத்தின் பங்களிப்பாக பெரும்பாலான ஒய்வு இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் பேரரசினால் கட்டப்பட்ட3 முக்கியமான கோட்டைகளில் ஒன்றாக நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள செயிண்ட் டேவிட் கோட்டை, வெள்ளி கடற்கரைக்கு அருகாமையில் உள்ளது.

பெரியார் கலை மற்றும் அறிவியல் கலைகல்லூரி, கடற்கரைக்கு அருகில் உள்ளது. ஏப்ரல் அல்லது மே வெள்ளி கடற்கரையில் ஆண்டுதோறும் மாதங்களில் கோடை விழா கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாடு, நாகப்பட்டினத்திற்கு அடுத்தபடியாக இந்த கடற்கரை 2004 ல் ஏற்பட்ட ஆசிய சுனாமியால் இரண்டாவது மிக அதிக பாதிப்புள்ள பகுதியாக இருந்தது. இச்சுனாமியால் சுமார் 2,700 க்கு அதிகமானவர்கள் இப்பகுதியில் இறந்திருக்கிறார்கள்"

வார விடுமுறை நாட்களில் சென்னை கடற்கரையில் எவ்வளவு கூட்டம் இருக்கிறது அதேபோல் இந்த வெள்ளி கடற்கரையும் நிரம்பி வழியும் சுற்றுலாப் பயணிகளால். சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது நீங்களும் வெள்ளிக் கடற்கரைக்கு வந்து விளையாண்டு மகிழலாமே!

## வேலைவாய்ப்பு கார்னர்

### ரூ.1.77 லட்சம் சம்பளத்தில் மத்திய அரசில் வேலை: +2 முடித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்!

மத்திய அரசின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சத்தின் கீழ் செயல்படும் இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையத்தில் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட உள்ள எழுத்தர், சர்வேயர், முதுநிலை கணக்கு அலுவலர் என 14 காலிப் பணியிடங்களுக்கு தகுதியானவர்களிடம் இருந்து நவம்பர் 5 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி மற்றும் காலியிடங்கள், தகுதிகள் குறித்து பார்ப்போம்.

பணி: Lower Division Clerk (LDC)

காலியிடங்கள்: 4

சம்பளம்: மாதம் ரூ.19,900 - ரூ.63,200

தகுதி: மத்திய, மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் பிளஸ் 2 அல்லது அதற்கு சமமான படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும், கணினியில் ஆங்கிலத்தில் நிமிடத்திற்கு 35 வார்த்தைகள் அல்லது ஹிந்தியில் நிமிடத்திற்கு 30 வார்த்தைகள் தட்டச்சு செய்யும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 18 முதல் 27-க்கு இருக்க வேண்டும். பணி: Junior Hydrographic Surveyor (JHS) காலியிடங்கள்: 9 சம்பளம்: மாதம் ரூ.35,400 - ரூ.1,12,400

தகுதி: பொறியியல் துறையில் சிவில் பிரிவில் மூன்றாண்டு டிப்ளமோ முடித்திருப்பதுடன் 3 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும் அல்லது பட்டம் பெற்றிருக்க வேண்டும். வயதுவரம்பு: 30-க்குள் இருக்க வேண்டும்.

பணி: Senior Accounts Officer காலியிடங்கள்: 1 சம்பளம்: மாதம் ரூ.56,100 - ரூ.1,77,500 தகுதி: சிஏ முடித்திருக்க வேண்டும் அல்லது செலவுகள் மற்றும் பணி கணக்காளர் பிரிவில் இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும், வணிகக் கணக்குகள் துறையில் மூன்று ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: www iwai nic in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 5.11.2025 மேலும் விவரங்கள் அறிய iwai.nic.in/sites/default/files/Advt%20of%20Sr.%20Accts.%20Officer%2C%20JHS%20and%20LDC-2025.pdf பார்த்து தெரிந்துகொள்ளவும்.

## 'டெங்கு பாதிப்பு கட்டுப்பாட்டில் உள்ளது'

**நாமக்கல், நவ.4:**

நாமக்கல்லில் 66 படுக்கை வசதி கொண்ட ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனையை தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், "டெங்கு காய்ச்சலால் கடந்த 2012 ஆம் ஆண்டு 66 பேரும், 2017ல் 65 பேரும் உயிரிழந்துள்ளனர். திமுக அரசு ஆட்சி அமைந்த பின் டெங்கு பாதிப்பு மிக மிக கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த 11 மாதங்களில் டெங்கு காய்ச்சலால் 9 பேர் உயிரிழந்துள்ளனர். 18 ஆயிரம் பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை முடிந்து நலமுடன் வீடு திரும்பி உள்ளனர். நலமுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் இதுவரை 13 முகாம்கள் முடிவடைந்துள்ளன. 1256 முகாம்களில், 484 முகாம்கள் நிறைவடைந்த நிலையில் இதுவரை 7,73,717 பேர் பயன் பெற்றுள்ளனர்" என்றார்.

## தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் புதிய தலைவராக சீனிவாசராஜ்

**சென்னை, நவ.4:**

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் 93 ஆவது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் சென்னையில் ஞாயிறன்று நடைபெற்றது. இதில் புதிய நிர்வாகிகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டது. தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் புதிய தலைவராக டி.ஜே.சீனிவாசராஜ் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அவர் இதற்கு முன்பு தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் பொருளாளராக பணியாற்றி இருந்தார். இதேபோல துணைத் தலைவராக எம். குமரேஷ், பொருளாளராக ஆர்.ரங்கராஜன் மற்றும் மூன்று செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப் பட்டனர். செயலாளர், இணைச் செயலாளர், உதவி செய லாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு தேர்தல் நடை பெற்றது. இதில் 205 பேர் வாக்களிக்க தகுதியான வர்கள்.

## விவசாயியிடம் ரூ.18.71 லட்சம் மோசடி

**வேலூர், நவ.4:**

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகாவை சேர்ந்த 50 வயது விவசாயியிடம் ஆன்லைன் முதலீடு மோசடி மூலம் ரூ.18.71 லட்சம் மோசடி செய்யப்பட்டுள்ளது. இவர் கடந்த ஆகஸ்டு மாதம் ஆன்-லைனில் முதலீடு செய்வது தொடர் பான ஒரு வாட்ஸ்அப் குரூப்பில் இணைந்தார். இதனை உண்மை என்று நம்பிய விவசாயி ஆன்-லைன் கணக்கில் ரூ.20.11 லட்சம் முதலீடு செய்தார்.

அதற்கு ரூ.1 லட்சத்து 40 ஆயிரம் கமிஷனாக வந்துள்ளது. மேலும் அவர் முதலீடு செய்த பணத்தை எடுக்க முயன்றபோது முடியவில்லை. பின்னர் மர்ம நபர்கள் ரூ.18.71 லட்சத்தை மோசடி செய்தது தெரிய வந்தது.

## மருத்துவக் கனவை நனவாக்க ஜார்ஜியாவை தேர்ந்தெடுக்கும் இந்திய மாணவர்கள்

**சென்னை, நவ.4:**




*4 ஆவது ஆண்டாக நீடிக்கும் உக்ரைன் போரின் காரணமாக, இந்திய மருத்துவ மாணவர்கள் பாதுகாப்பான மாற்று இடங்களை தேடிச் செல்லும் நிலையில், ஜார்ஜியா ஒரு புதிய மற்றும் வேகமாக வளர்ந்து வரும் கல்வி மையமாக உருவெடுத்துள்ளது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.*

*தகவல் அறியும் உரிமைச் சட்டம் (ஆர்டிஐ) மூலம் பெறப்பட்ட இந்திய ரிசர்வ் வங்கியின் (ஆர்பிஐ) தாராளமயமாக்கப்பட்ட பணம் அனுப்பும் திட்டத்தின் (எல்ஆர்எஸ்) தரவுகளின்படி, ஜார்ஜியாவில் இந்திய மாணவர்களின் கல்விக்கான செலவு அதிவேகமாக உயர்ந்துள்ளது.*

*போருக்கு முன், இந்திய மாணவர்களின் முதல் 10 கல்வி மையங்களில் ஒன்றாக உக்ரைன் இருந்தது. வெளிநாடுகளில் கல்விக்காகப் பணம் அனுப்பப்பட்ட நாடுகளின் பட்டியலில் ஜார்ஜியா 21வது இடத்தில் இருந்து 14 ஆவது இடத்திற்கு முன்னேறியது. தற்போதைய நிலையின்படி, ஜார்ஜியா மேலும் முன்னேறி 12 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.*

*கடந்தாண்டு டிசம்பரில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின்படி, 2019 இல் 4,148 இந்திய மாணவர்கள் ஜார்ஜியாவுக்குச் சென்ற நிலையில், 2023 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 10,470 ஆக உயர்ந்துள்ளது. வெளிநாட்டு கல்வி ஆலோசகர்களின் கூற்றுப்படி, ஜார்ஜியா ஏற்கனவே மருத்துவம் மற்றும் பிசியோதெரபி போன்ற துணை மருத்துவப் படிப்புகளுக்குப் பிரபலமாக இருந்தது. ஆனால், உக்ரைன் போர் தொடங்கிய பிறகு, அங்குள்ள மாணவர்கள் ஜார்ஜிய பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் செய்யத் தொடங்கியதால், இதன் வளர்ச்சி இன்னும் அதிகரித்துள்ளது.*

## களக்காடு தலையணை அருவியில் குளிக்க அனுமதி

**சென்னை, நவ.4:**

*நீர்வரத்து சீரானதால் களக்காடு தலையணை அருவியில் குளிக்க 17 நாட்களுக்கு பின் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. நெல்லை மாவட்டம் களக்காடு புலிகள் காப்பகத்திற்குட்பட்ட மேற்கு தொடர்ச்சி மலையில் இயற்கை எழில் சூழ்ந்த நிலையில் தலையணை அருவி உள்ளது.*

*பல்வேறு பகுதிகளிலிருந்து இங்கு சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.*

*கடந்த சில நாட்களாக களக்காடு பகுதியிலும் மேற்கு தொடர்ச்சி மலையிலும் தொடர் மழை பெய்ததால் தலையணை அருவியில் நீர்வரத்து அதிகரித்தது. அங்குள்ள தடுப்பணையை மூழ்கடித்தவாறு வெள்ளம் பாய்ந்தோடியது.*

*இதனை தொடர்ந்து கடந்த 14ஆம் தேதி முதல் தலையணையில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறையினர் தடை விதித்தனர். இதற்கிடையே, மழை நின்றதால் நீர்வரத்து சீரானது.*

*இதையடுத்து தலையணையில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கப்படுவதாக வனச்சரகர் பிரபாகரன் அறிவித்துள்ளார்.*

*இதனால் 17 நாட்களுக்கு பின் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டனர்.*

## இலங்கை கடற்படையினர் தொடர் அட்டூழியம்: நடுக்கடலில் ராமேஸ்வரம் மீனவர்கள் துப்பாக்கி முனையில் விரட்டியடிப்பு

**ராமேஸ்வரம், நவ.4:**



*ராமேஸ்வரம் மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் இலங்கை கடற்படை துப்பாக்கி முனையில் விரட்டியடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*

*ராமேஸ்வரம் மீனவர்கள் மீது தொடர்ச்சியாக இலங்கை கடற்படை தாக்குதல் நடத்துவது, சிறை பிடிப்பது, விரட்டி அடிப்பது போன்ற சம்பவங்கள் தொடர்கதையாக உள்ளது இதனால் ராமேஸ்வரம் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு மீன்பிடி தொழில் நலிவடைந்து வருகிறது.*

*இந்நிலையில் ராமேஸ்வரத்தில் இருந்து நேற்று காலை 500-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 2,500-க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்துறை அலுவலக அனுமதியுடன் கடலுக்கு சென்றனர். அவர்கள் இந்திய கடல் எல்லையில் கச்சத்தீவு அருகே வலைகளை விரித்து மீன்பிடித்துக்கொண்டு இருந்தனர். இன்று அதிகாலை அந்த பகுதிக்கு இலங்கை கடற்படைக்கு சொந்தமான ரோந்து கப்பல் ஒன்று வந்தது. அதிலிருந்த வீரர்கள் ராமேசுவரம் மீனவர்களை பார்த்து இது எங்கள் நாட்டு எல்லை, இங்கு மீன்பிடிக்க அனுமதி கிடையாது என்று பலமுறை எச்சரித்தும் ஏன் வருகிறீர்கள்? என்று கூறியதுடன், அவர்களை நோக்கி துப்பாக்கியை காட்டி மிரட்டினர்.*

*அத்துடன் தொடர்ந்து அந்த பகுதியில் மீன்பிடிக்க விடாமல் தடுத்தனர். இதனால் அதிர்ச்சி அடைந்த மீனவர்கள் உடனடியாக கடலில் விரித்திருந்த வலைகளை சுருட்டிக் கொண்டு அங்கிருந்து புறப்பட தயாரானார்கள்.*

*ஆனாலும் நீண்ட தூரம் வரை ராமேசுவரம் மீனவர்கள் மீது கற்களை வீசியும், வலைகளை அறுத்து கடலில் வீசியும் துரத்தியடித்து அத்துமீறலில் ஈடுபட்டுள்ளனர். இதனால் இலங்கை கடற்படைக்கு அஞ்சி ராமேசுவரம் மீனவர்கள் மீன் பிடிக்க முடியாமல் படகு ஒன்றுக்கு ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரம் வரை நஷ்டத்துடன் இன்று காலை கரை திரும்பி உள்ளனர்.*

*இதுகுறித்து மீனவர்கள் கூறுகையில், ராமேசுவரம் மீனவர்கள் மீது தொடர்ச்சியாக இலங்கை கடற்படை தாக்குதல் நடத்துவது, சிறை பிடிப்பது, விரட்டி அடிப்பது போன்ற சம்பவங்கள் தொடர்கதையாக உள்ளது.இதனால் ராமேசுவரம் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு மீன்பிடி தொழில் நலிவடைந்து வருகிறது. இதை தடுக்க வேண்டிய மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இலங்கை அரசுடன் சேர்ந்து வேடிக்கை பார்த்து வருகிறது.*

*இதனால் ராமேசுவரம் மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே ராமேசுவரம் மீனவர்கள் நலனை கருத்தில் கொண்டு இனி வரும் காலங்களில் பிரச்சனையின்றி மீன் பிடிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.*

# மெட்ரோ ரயில் உயர்மட்ட கட்டுமானத்தில் போரூர் - பவர் ஹவுஸ் வரை 8 கி.மீ.க்கு பாதை அமைக்கும் பணி நிறைவு



**சென்னை, நவ.4:**

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின் 4-வது வழித்தடத்தில், போரூர் - பவர் ஹவுஸ் வரை உயர்மட்ட கட்டுமானத்தில் 8 கி.மீ. தொலைவுக்கு உயர்மட்டப் பாதை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளதாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் 116.1 கி.மீ. தொலைவில் 3 வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது. இவற்றில் கலங்கரை விளக்கம் - பூந்தமல்லி பைபாஸ் வரையிலான 4-வது வழித்தடம் (26.1 கி.மீ.) ஒன்றாகும். இத்தடத்தில் போரூர் - பூந்தமல்லி வரை உயர்மட்டப்பாதைபணிகள் நிறைவடைந்து, தற்போது, மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நடைபெறுகிறது.

இதையடுத்து, போரூர் - பவர்ஹவுஸ் வரையிலான உயர்மட்டப் பாதை அமைக்கும் பணி தீவிரமாக நடைபெறுகிறது. இப்பாதையில் சில இடங்களில் மாதவரம் - சோழிங்கநல்லூர் வரையிலான 5-வது வழித்தடம் மற்றும் பூந்தமல்லி - கலங்கரை விளக்கம் வரையிலான 4-வது வழித்தடம் ஆகிய இரு வழித்தடங்கள் சில இடங்களில் இணைகின்றன.

குறிப்பாக ஆழ்வார் திருநகர், வளசரவாக்கம், காரம்பாக்கம், ஆலப்பாக்கம் மெட்ரோ ரயில் நிலைய பகுதிகளில் டபுள்டெக்கர் லைன் எனப்படும் 2 அடுக்கு உயர்மட்டப் பாதைகள் அமைக்கப்படுகின்றன. போரூர் - பவர் ஹவுஸ் வரை உயர்மட்டப் பாதை கட்டுமானத்தில் 8 கி.மீ. தொலைவுக்கு மேம்பாலப் பாதை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளன.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், ரயில் பாதைக்கான கர்டர்கள் அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. போரூர் - பவர் ஹவுஸ் வரை உயர்மட்ட மெட்ரோ ரயில் பாதை கட்டுமானத்தில், 9 மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் 8 கி.மீ. தொலைவுக்கான உயர்மட்டப் பாதை அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

அடுத்த கட்டமாக, இதன் மீது ரயில்பாதை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

# காத்திருக்கும் பேராபத்து!

## விண்வெளியில் குப்பைகள்...



விண்வெளி கழிவுகள் (space junk) என்பது விண்வெளியில் மனிதர்களால் விடப்பட்ட, இனி பயன்பாட்டில் இல்லாத செயற்கைக்கோள்கள், ராக்கெட் பாகங்கள் மற்றும் பிற உபகரணங்களாகும். இவற்றின் முக்கிய பாதிப்புகள் என்று பார்த்தால் விண்வெளி பயணங்களுக்கு ஆபத்து, செயலிழந்த உபகரணங்களால் விண்கலங்கள் மோதும் அபாயம் மற்றும் கண்காணிப்பதற்கு கடினமான மிகச்சிறிய குப்பைகளின் குவிப்பாகும். இந்த கழிவுகள் விண்வெளியில் குவிந்து வருவதால், விண்வெளிப் பயணங்கள் மற்றும் ஆய்வுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைகின்றன.

விண்வெளிக்கு விண்ணில் பாய்ந்த கிட்டத்தட்ட 9 ஆயிரம் டன் எடையுள்ள உபகரணங்கள் சிக்கல்களை உருவாக்குகின்றன. ஒரு மில்லிமீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட அளவிலான 100 மில்லியனுக்கும் அதிகமான விண்வெளிக் குப்பைகள் பூமியை சுற்றி வருவதாக நாசா கூறுகிறது. இந்த குப்பைகளில் செயல்படாத விண்கலம், கைவிடப்பட்ட உபகரணங்கள், பணி தொடர்பான குப்பைகள் போன்றவை அடங்கும்.

மணிக்கு 17,500 மைல்கள் (28,160 கிலோமீட்டர்) வேகத்தில் பயணிக்கும் பொழுது ஒரு சிறிய குப்பைத் துண்டு கூட ஒரு செயற்கைக்கோள் அல்லது விண்கலத்தை சேதப்படுத்தும் என்று கூறப்படுகிறது. கடந்த 50 ஆண்டுகளில் ஒவ்வொரு நாளும் சராசரியாக ஒரு துண்டு குப்பைகள் பூமியில் விழுந்துள்ளதாக நாசா கூறுகிறது. இவை பெரும்பாலும் பெருங்கடல்களிலோ அல்லது மக்கள் வசிக்காத பகுதிகளிலோ தரையிறங்குகின்றன என்றும் இதனால் மக்களுக்கு காயமோ, சொத்துகளுக்கு எந்தவிதமான சேதமோ இதுவரை ஏற்பட்டதாக தெரியவில்லை என்றும் கூறுகிறது.

சில அங்குல அளவுள்ள ஒரு சிறு போல்ட் கூட வேகமாகச் செல்லும் விண்கலத்தைத் தாக்கினால் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். பல்லாயிரக்கணக்கான சிறிய குப்பைகள் பூமியை சுற்றி வருவதால், அவற்றை கண்காணிப்பது மிகவும் கடினமாக உள்ளது.

விண்வெளிப் பயணங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயலிழந்த செயற்கைக்கோள்கள் மற்றும் ராக்கெட் உடல்கள் போன்ற பெரிய கழிவுகள், தற்போது செயல்படும் விண்கலங்கள் மற்றும் சர்வதேச விண்வெளி நிலையத்தின் (ISS) சுற்றுப்பாதையை மாற்றியமைக்கும் அளவுக்கு ஆபத்தானவை என்று கூறப்படுகிறது. எதிர்கால விண்வெளிப் பயணங்கள் மற்றும் செயற்கைக்கோள் திட்டங்களுக்கு இந்த கழிவு பிரச்சனை பெரும் தடையாக உள்ளதாக கூறப்படுகிறது.

விண்வெளிக் கழிவுகளை குறைப்பதற்கு உலகளாவிய ஒருங்கிணைப்பு அவசியம். செயலிழந்த உபகரணங்களை மீண்டும் பூமிக்கு கொண்டு வருவது அல்லது விண்வெளியில் பாதுகாப்பாக அகற்றுவதற்கான வழிகள் ஆராயப்படுகின்றன. விண்வெளி குப்பைகளை அகற்ற ஹார்பூன்கள், வலைகள் அல்லது ரோபோ கைகள் போன்ற புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

# ராமேசுவரத்திலிருந்து மன்னாருக்கு படகில் சென்ற இலங்கை தொழிலதிபர் உட்பட 4 பேர் கடற்படையினரால் கைது

**ராமேசுவரம், நவ.4:**

ராமேசுவரத்திலிருந்து மன்னாருக்கு படகில் சென்ற இலங்கை தொழிலதிபர் உட்பட 4 பேரை அந்நாட்டு கடற்படையினர் கைது செய்தனர். இலங்கை மன்னார் பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஐங்கரன் (34). இவர் மீது மன்னார் மாவட்டத்தில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இதனால், வழக்குகளில் இருந்து தப்புவதற்காக தனது குடும்பத்துடன் தமிழகம் வந்து, ராமநாதபுரத்தில் வீடு எடுத்து சட்டவிரோதமாக தங்கியிருந்தார்.

இலங்கையில் ஐங்கரன் மீது இருந்த வழக்குகளின் விசாரணை முடிவடைந்து, அவர் வழக்குகளில் இருந்து விடுபட இருந்ததால், மீண்டும் இலங்கைக்குச் செல்ல முடிவெடுத்தார்.

இதையடுத்து, ராமேசுவரத்திலிருந்து படகு மூலம் நேற்று அதிகாலை மன்னார் புறப்பட்டுச் சென்றார்.

அப்போது, தலைமன்னார் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர், படகில் இருந்த ஐங்கரன் உட்பட 4 பேரை பிடித்து மன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

அதில் ஐங்கரன் சட்டவிரோதமாக ராமநாதபுரத்தில் 3 மாதங்கள் வரை குடும்பத்தினருடன் தங்கியிருந்து, பின்னர் ராமேசுவரத்திலிருந்து படகு மூலம் இலங்கை வந்தது தெரியவந்தது.

இதையடுத்து, 4 பேரையும் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

அதே போல, ராமநாதபுரம் மாவட்ட போலீஸாரும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தவெக மகளிரணி, இளைஞரணி, மாணவரணி, தொண்டரணி நிர்வாகிகளை நியமித்தார் விஜய்

**சென்னை, நவ.4:**




தமிழக வெற்றிக் கழகத்தின் 64 கழக மாவட்டங்களுக்கான மாவட்ட அளவிலான மாணவரணி, மகளிரணி, தொண்டரணி, இளைஞரணி உள்ளிட்ட பதவிகளுக்கான பொறுப்பாளர்களை நியமித்து அக்கட்சியின் தலைவர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு தமிழக வெற்றிக் கழகம் கட்சியை தொடங்கிய விஜய், மாநில மாநாடுகளை நடத்தியதுடன், மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளையும் விறுவிறுப்பாக நடத்தி வந்தார். கடந்த செப்டம்பர் 27ல் கரூர் விஜய் நடத்திய பிரச்சாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதனைத் தொடர்ந்து ஒரு மாதத்துக்கும் மேலாக தவெக கட்சியும், அதன் தலைவர் விஜய்யும் முடங்கிய நிலையில் இருந்தனர்.

இந்தச் சூழலில், சமீபத்தில் கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை மாமல்லபுரத்துக்கு அழைத்து ஆறுதல் கூறினார் விஜய். தொடர்ந்து நிர்வாகக் குழு கூட்டத்தையும் நடத்தியது தவெக.

இதனைத் தொடர்ந்து தற்போது கட்சியின் இளைஞரணி, தொண்டரணி, மாணவரணி பொறுப்பாளர்களின் பட்டியலை இன்று தவெக தலைவர் விஜய் அறிவித்துள்ளார். இதில் 64 கழக மாவட்டங்கள் அடங்கும். மேலும், 65 கழக மாவட்டங்களுக்கான மகளிரணி நிர்வாகிகளையும் விஜய் நியமித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

வரும் நவம்பர் 5 ஆம் தேதி தவெகவின் சிறப்பு பொதுக்குழு கூடவுள்ள நிலையில், முக்கிய அணிகளின் நிர்வாகிகளை விஜய் அறிவித்துள்ளது அக்கட்சியின் தொண்டர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது. சிறப்பு பொதுக்குழுவில், தேர்தல் மற்றும் பிரச்சாரம் குறித்த முக்கிய அறிவிப்புகளை விஜய் வெளியிடுவார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# சென்னையில் தொழில் தொடங்குவதாக கூறி பெண்ணிடம் ரூ.1 கோடி மோடி செய்த 2 பேர் கைது

**சென்னை, நவ.4:**

தொழில் தொடங்க பெண்ணிடம் ரூ.1 கோடி கடன் பெற்று மோசடி செய்த உறவினர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். சென்னை மடிப்பாக்கம், ராம் நகரைச் சேர்ந்தவர் சுகந்தி (57). 2019-ம் ஆண்டு இவரது கணவர் ரமேஷ்குமாரின் அக்கா, பள்ளிக் கரணையில் வசிக்கும் சரளாதேவி, அவரது கணவர் குணசேகர் (67) மற்றும் இவர்களது மகன் விஜய் (36) ஆகியோர் விடுதி நடத்துவதற்காக ரூ.1 கோடி கடனாக கேட்டனர்.

2 வருடத்துக்குள் அந்த கடனை வட்டியுடன் செலுத்தி விடுவதாகவும் தெரிவித்தனர்.

இதை நம்பிய சுகந்தி, தங்களுக்குச் சொந்தமான திருவான் மியூரில் உள்ள வீட்டை விற்று அதில் வந்த பணத்தில் ரூ.1 கோடியை வங்கி மூலமாகவும், ரொக்கமாகவும் என சரளாதேவி குடும்பத்தினரிடம் கொடுத்தார்.

சில மாதங்கள் மட்டும் மாத கடனை செலுத்தியுள்ளனர். பின்னர் 2020-ம் ஆண்டு கரோனா எனக்கூறி 2023-ம் ஆண்டு வரை சிறிய தொகை கொடுத்துள்ளனர்.

மீதத் தொகை ரூ.98 லட்சத்து 30 ஆயிரத்தை செலுத்தாமல் ஏமாற்றி உள்ளனர். இதுகுறித்து கேட்டபோது சரளாதேவி, குணசேகர் மற்றும் மகன் விஜய் ஆகியோர் தகாத வார்த்தைகளால் பேசி பணம் கொடுக்க முடியாது என மிரட்டி அனுப்பியதாக கூறப்படுகிறது.

இதனால் வேதனை அடைந்த சுகந்தி, இதுகுறித்து மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார்.

அதன்படி, காவல் நிலைய குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டனர். இதில் சுகந்தி புகாரில் தெரிவித்து இருந்தது உண்மை என தெரியவந்தது. இதையடுத்து குணசேகர், அவரது மகன் விஜய் ஆகிய இருவர் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

## க்ரைம் கார்னர்

# தனியார் கல்லூரியில் மாணவர்கள் உயிரிழந்ததாக வதந்தி: ஒருவர் கைது

**நாமக்கல், நவ.4:**

குமாரபாளையத்தில் செயல்பட்டு வரும் தனியார் கல்லூரியில் உணவு சாப்பிட்ட மாணவர்கள் உயிரிழந்ததாக வதந்தி பரப்பியவரை காவல் துறையினர் கைது செய்தனர். நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் செயல்படும் தனியார் (எக்ஸெல்) கல்வி நிறுவனத்தில் கடந்த 27 ஆம் தேதியன்று உணவு சாப்பிட்ட 128 மாணவ, மாணவிகளுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இவர்களை தனியார் கல்வி வளாகத்தில் உள்ள மருத்துவமனை மற்றும் குமாரபாளையம் தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று நலமுடன் வீடு திரும்பினர்.

இந்நிலையில், இச்சம்பவத்தில் சிலர் உயிரிழந்ததாக சமூக வலைதளங்களில் அமைதியை சீர ழிக்கும் வகையில், தவறாக பதிவு செய்த நான்கு கணக்குகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில்இ இன்ஸ்டாகிராம் மூலம் தனியார் கல்வி நிறுவனத்தில் சில மாணவ, மாணவியர் வாந்தி பேதியால் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததாக தவறாக பதிவு செய்தது குறித்து குமாரபாளையம் காவல் ஆய்வாளர் பொறுப்பு சங்கீதாவிடம் புகாரளிக்கப்பட்டது. இதையடுத்து தனிப்படை போலீசார் சனியன்று திருச்சி, தென்னூர் பகுதியைச் சேர்ந்த கார்த்திக் குமாரை கைது செய்தனர். மேலும், இணையதளங்களில் தவ றாக பதிவு செய்யப்பட்ட நபர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப் படும் என மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அறி வித்துள்ளார்.

# மூதாட்டி கொலை: வாலிபருக்கு சிறை

**கோவை, நவ.4:**

கோவை, பீளமேடு, துரைசாமி லே - அவுட் பகுதியை சேர்ந்தவர் கார்த்திக். இவர் மீது கஞ்சா மற்றும் போக்சோ குற்ற வழக்குகள் இருந்தது. சிறையில் அடைக்கப்பட்டிருந்த கார்த்திகை உறவினரான தர்மராஜ் ஜாமினில் வெளியே கொண்டு வர உதவியுள்ளார். இந்நிலையில், கடந்த 2020 ஆம் ஆண்டு அவர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த கார்த்திக் மதுபாட்டிலை உடைத்து தர் மராஜை குத்தினார். இதில் அவர் படுகாயமடைந்த நிலை யில், கார்த்திக்கின் பாட்டி கண்ணியம்மாள் தலையிட்டு தடுத் தார்.

மேலும், கார்த்திக்கிடம் அங்கிருந்து செல்லாவிட்டால், போலீசாரிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன் என்றும் கூறியதாக தெரிகிறது. இதனால், கண்ணியமாளை மது பாட்டிலால் கார்த்திக் சரமாரியாக குத்தியுள்ளார். இதில் படுகாயம் அடைந்த கண்ணியம்மாள் ரத்த வெள்ளத்தில் இறந்தார். இது குறித்த புகாரின்பேரில் பீளமேடு காவல் துறையினர் கார்த்திகை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை கோவை ஐந்தாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் சனியன்று நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி, ஐந்து ஆண்டு சிறை தண்டனையும், ரூ.2,500 அபராதமும் விதித்து தீர்ப்பு கூறினார்.

# கோவை விமான நிலையம் அருகே மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை!

**கோவை, நவ.4:**

கோவை விமான நிலையம் அருகே சட்டக் கல்லூரி மாணவியை ஞாயிற்றுக்கிழமை இரவு மூன்று பேர் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்துள்ள காவல்துறையினர் மர்ம நபர்கள் மூன்று பேரைத் தேடி வருகின்றனர். கோவை சித்ரா பகுதியில் சர்வதேச விமான நிலையம் பின்புறம் உள்ள காலியிடத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவி அவரது ஆண் நண்பருடன் காரில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக வந்த அடையாளம் தெரியாத மூன்று பேர், காரின் கண்ணாடியை உடைத்து ஆண் நண்பரைத் தாக்கி மயக்கமடையச் செய்துவிட்டு, மாணவியைப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். மயக்க நிலையில் காவல்துறையினர் ஆண் நண்பர் தகவல் அளித்துள்ளார். சம்பவ இடத்துக்கு விரைந்த பீளமேடு காவல்துறையினர் மாணவி மற்றும் அவரது நண்பரை மீட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். இதையடுத்து அடையாளம் தெரியாத மூன்று பேர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்த கோவை காவல்துறையினர், 7 தனிப்படைகள் அமைத்து அவர்களை தேடி வருகின்றனர்.

# போதைப் பொருள் பதுக்கிய பெண் உள்ளிட்ட 2 பேர் கைது

**சென்னை, நவ.4:**

மெத்தம் பெட்டமைன் போதைப் பொருள் பதுக்கியதாக பெண் உள்ளிட்ட 2 பேர் கைது செய்யப்பட்டனர். போதைப் பொருள் கடத்தல், பதுக்கல் மற்றும் விற்பனையைத் தடுக்க அனைத்து காவல் நிலைய ஆய்வாளர்கள் தலைமையிலும் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. இந்த தனிப்படை போலீஸார் ரோந்து மற்றும் கண்காணிப்பை முடுக்கி விட்டுள்ளனர். அதன் ஒரு பகுதியாக புளியந்தோப்பு போலீஸார் நேற்று முன்தினம் மதியம் பழைய ஆடுதொட்டி அருகே கண்காணித்தனர்.

அப்போது, அங்கு சந்தேகத்துக்கிடமாக நின்றிருந்த பெண் உட்பட 2 பேரை விசாரித்தபோது, அவர்கள் முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்தனர். இதையடுத்து, அவர்களின் உடமைகளைச் சோதித்த போது, மெத்தம் பெட்டமைன் போதைப் பொருள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது. அதை பறிமுதல் செய்த போலீஸார், போதைப் பொருள் வைத்திருந்த புளியந்தோப்பு, போகிப்பாளையத்தைச் சேர்ந்த பெரோஸ் கான் (30), புரசைவாக்கத்தைச் சேர்ந்த ஜெயந்தி (34) ஆகிய இருவரை கைது செய்தனர். விசாரணையில் பெரோஸ்கான் மீது ஏற்கெனவே திருட்டு, அடிதடி உள்ளிட்ட 5 குற்ற வழக்குகளும், ஜெயந்தி மீது ஒரு போதைப் பொருள் வழக்கு உள்ளதும் தெரியவந்ததாக போலீஸார் தெரிவித்தனர். இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

# தெருநாய்கள் விவகாரம்: நவ 7-ல் கூடுதல் வழிகாட்டு நெறிமுறைகள்: உச்ச நீதிமன்றம்





**புதுடெல்லி, நவ.4:**

புது தில்லி: தெரு நாய்கள் விவகாரம் தொடர்பான வழக்கில் நவம்பர் 7 ஆம் தேதி கூடுதலாக வழிகாட்டு நெறிமுறைகள் பிறப்பிப்பதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா மற்றும் என்.வி. அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய மூன்று நீதிபதிகள் கொண்ட சிறப்பு அமர்வு, பெரும்பாலான மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலர்கள் நீதிமன்றத்தில் இன்று ஆஜராகியிருப்பதைக் குறிப்பெடுத்துக் கொண்டனர்.

மேலும், கேரள தலைமைச் செயலாளர் தாக்கல் செய்த விலக்குக் கோரும் மனுவை அனுமதித்த நிலையில், மாநில முதன்மைச் செயலாளர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருப்பதையும் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டனர்.

உச்ச நீதிமன்றம் தாமாக முன் வந்து விசாரணைக்கு ஏந்த் இந்த வழக்கில், இந்திய விலங்குகள் நல வாரியத்தையும், ஒரு தரப்பாக சேர்க்க வேண்டும் என்று நீதிபதிகள் கூறினார்.

வழக்கு விசாரணையின் ஆரம்பத்திலேயே, பெரும்பாலான மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் உச்ச நீதிமன்ற உத்தரவை ஏற்று தங்கள் தரப்புப் பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்திருந்ததாக சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா சிறப்பு நீதிபதிகள் அமர்விடம் தெரிவித்துக் கொண்டார்.

இதையடுத்து, பிரமாணப் பத்திரங்களை ஆய்வு செய்து ஒருங்கிணைத்து அறிக்கையாக தாக்கல் செய்ய உத்தரவிட்ட உச்ச நீதிமன்றம், அனைத்து தலைமைச் செயலர்களும் அடுத்த விசாரணையில் ஆஜராக வேண்டியதில்லை என்றும், உச்ச நீதிமன்ற உத்தரவை அலட்சியமாகக் கையாண்டதாலேயே, தலைமைச் செயலர்களை நேரில் ஆஜராகுமாறு உத்தரவிட்டதாகவும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

மேலும், இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவுகளை சரியாக கையாளாவிட்டால், மீண்டும் இவர்கள் நேரில் ஆஜராகும் நிலை ஏற்படும் என்று சுட்டிக்காட்டியதோடு, நவம்பர் 7 ஆம் தேதி கூடுதலாக வழிகாட்டு நெறிமுறைகள் பிறப்பிக்கப்படும் என்று அறிவித்தனர்.

## விளக்கை அணைக்க சொன்ன நிறுவன மேலாளர் கொலை: பெங்களூருவில் சக ஊழியர் கைது

**பெங்களூரு, நவ.4:**

பெங்களூரு: கர்நாடக மாநிலம் மேற்கு பெங்களூருவின் கோவிந்தராஜ் நகரில் எம்சி லே அவுட் அருகில், அடிஜிட்டல் வால்ட் அண்ட் போட்டோ எடிட்டிங் நிறுவனம் செயல்படுகிறது. இங்கு சித்ரதுர்கா பகுதியை சேர்ந்த பீமேஷ் பாபு (41) என்பவர் மேலாளராக பணியாற்றி வந்தார். இந்நிறுவனத்தில் ஆந்திராவை சேர்ந்த சோமலா வம்சி (24) என்ற இளைஞர் தொழில்நுட்ப நிர்வாகியாக பணியாற்றி வருகிறார். இவர் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு நிறுவனத்தில் பணியில் இருந்துள்ளார். அப்போது பீமேஷ் பாபு வந்து, தேவைப்படாத இடங்களில் மின் விளக்குகள் எரிவதைப் பார்த்துள்ளார். அவற்றை அணைக்கும்படி வம்சியிடம் கூறியுள்ளார். அப்போது இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரம் அடைந்த வம்சி, திடீரென உடற்பயிற்சி செய்யும் இரும்பு ‘டம்பல்’ எடுத்து பீமேஷ் பாபுவின் தலை, முகத்தில் பல முறை அடித்துள்ளார். இதில் அவர் ரத்தவெள்ளத்தில் மயங்கி விழுந்தார்.

அதை பார்த்து பயந்து போன வம்சி தன்னுடன் பணிபுரியும் கவுரி பிரசாத் மற்றும் அவரது நண்பரை துணைக்கு அழைத்தார். பீமேஷ் பாபு பேச்சு மூச்சின்றி கிடந்துள்ளார். உடனடியாக ஆம்புலன்ஸுக்கு தகவல் தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்துக்கு ஆம்புலன்ஸ் வந்துள்ளது. அதில் இருந்த ஊழியர், பாபு ஏற்கெனவே இறந்துவிட்டதாக கூறியுள்ளார். இதையடுத்து கோவிந்தராஜ் நகர் காவல் நிலையத்தில் வம்சி சரணடைந்தார்.

## காற்று மாசுவை கட்டுப்படுத்த பிரியங்கா காந்தி கோரிக்கை

**புதுடெல்லி, நவ.4:**

தலைநகர் டெல்லியில் காற்று மாசு தொடர்ந்து மோசமாக உள்ளது. டெல்லியில் செயற்கை மழை பொழியச் செய்து காற்று மாசுவை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் மாநில அரசு கடந்த வாரம் இறங்கியது. ஆனால் காற்றில் போதிய ஈரப்பதம் இல்லாததால் இந்த முயற்சி தோல்வியடைந்தது.

இந்நிலையில் காங்கிரஸ் எம்.பி பிரியங்கா காந்தி எக்ஸ் தளத்தில் விடுத்துள்ள செய்தியில், “டெல்லி முழுவதும் சாம்பல் நிற துணியை போட்டு மூடியது போல் காற்று மாசு மிக மோசமாக இருந்தது. இது குறித்து நாம் அனைவரும் அரசியல் பாகுபாடின்றி ஆலோசிக்க வேண்டும். காற்று மாசுவை கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மோசமான சூழலை போக்க எடுக்கும் நடவடிக்கைக்கு நாங்கள் ஒத்துழைப்போம்” என்று தெரிவித்துள்ளார்.

இந்தப் பதிவில் பிரதமர் மோடி, டெல்லி முதல்வர் ரேகா குப்தா, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்தர் யாதவ் ஆகியோரையும் இணைத்து, டெல்லி காற்று மாசு பிரச்சினைக்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## மரபணு மாற்றப்பட்ட பருப்புகளை பயிரிட திட்டம்

**புதுடெல்லி, நவ.4:**

உளுந்து, துவரை மற்றும் மசூர் ஆகிய மூன்று பருப்பு வகைகளின் கீழ் 15 மரபணு திருத்தப்பட்ட வகைகளை வெளியிட மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் சமீபத்தில் தற்சார்பு இந்தியாவுக்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்களை வெளியிட்டது. அதில் மரபணு திருத்தப்பட்ட பருப்பு வகைகளின் உருவாக்கமும் ஒன்றாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் உற்பத்தித்திறனை அதிகரிக்க குறுகிய கால மற்றும் கலப்பின பருப்பு வகைகளுடன் அதிக மகசூல் தரும் வகைகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் சவால்களை எதிர்கொள்ள, காலநிலை-எதிர்ப்பு மற்றும் பூச்சி எதிர்ப்பு வகைகளை உருவாக்கம் செய்வதிலும் கவனம் செலுத்தப்படும். பரவலான தத்தெடுப்பை உறுதி செய்வதற்காக, முக்கிய பருப்பு வகைகளை வளர்க்கும் மாநிலங்களில் சோதனைகள் நடத்தப்படும். மேலும் நிலையான பருப்பு வகை சாகுபடிக்காக மரபணு-திருத் தப்பட்ட வகைகளின் வளர்ச்சியை ஆதரிக்க தேவையான ஆராய்ச்சிகள் மேலும் முன்னெடுக்கப்படும் என்று அக்டோபர் 18 அன்று வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# ஜெய்ப்பூரில் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் லாரி மோதி 10 பேர் பலி; 30 பேர் படுகாயம்



**ஜெய்ப்பூர், நவ.4:**

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் லாரி மோதியதில் 10 பேர் உயிரிழந்தனர், சுமார் 30 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஜெய்ப்பூரின் லோஹா மண்டி பகுதியில் வேகமாக வந்த டிப்பர் லாரி ஒன்று முன்னே சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனங்கள், கார், பாதசாரிகள் ஆகியோர் மீது அடுத்தடுத்து மோதியது. இதில், 10 பேர் உடல் நசுங்கி உயிரிழந்துள்ளனர். சுமார் 30 பேர் படுகாயமடைந்தனர்.


காயமடைந்தவர்கள் அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் நெருக்கடி நிறைந்த இடத்தில் நேர்ந்த இந்த விபத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. விபத்து நடந்த பகுதியில் ஏராளமான மக்கள் கூடி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை அளித்தனர். டிப்பர் லாரி கட்டுப்பாட்டை இழந்ததே விபத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

போலீஸாரும் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். கார் ஒன்றின் மீது மோதி டிப்பர் லாரி நின்றது. ஜேசிபி மூலம் காரை மீட்ட போலீஸார், அங்கு போக்குவரத்தை சீர் செய்தனர்.

விபத்து தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஜெய்ப்பூர் காவல் ஆணையர் சச்சின் மிட்டல், “இதுவரை பத்து பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. காயமடைந்தவர்களின் விவரங்களை நாங்கள் சேகரித்து வருகிறோம்.” என தெரிவித்தார்.

இந்த விபத்து குறித்து ஜெய்ப்பூரில் உள்ள ஹர்மடா காவல்நிலைய போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்து குறித்த சிசிடிவி காட்சிகள் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றன.

# “இதெல்லாம் பொய்” - முதல்வர் வேட்பாளர் குறித்த பிரதமர் குற்றச்சாட்டுக்கு கார்கே பதில்



**பாட்னா, நவ.4:**

ராஷ்ட்ரிய ஜனதா தளம் காங்கிரஸிடமிருந்து முதல்வர் வேட்பாளர் பதவியை திருடிவிட்டதாக கூறிய பிரதமர் நரேந்திர மோடியின் குற்றச்சாட்டை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மறுத்துள்ளார். மேலும், துப்பாக்கி முனையில் ஒருவரை முதல்வர் வேட்பாளராக்க சொல்லி யாரும் மிரட்ட முடியாது என்றும் அவர் கூறினார்.

ராஷ்டிரிய ஜனதா தளம், காங்கிரஸ் கட்சியிடமிருந்து முதல்வர் வேட்பாளர் பதவியைத் திருடிவிட்டதாகவும், துப்பாக்கி முனையில் காங்கிரஸை மிரட்டி தேஜஸ்வி யாதவை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க கட்டாயப்படுத்தியதாகவும் நேற்று பிஹாரின் அர்ராவில் நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து பதிலளித்த காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, “இதெல்லாம் பொய், பிரதமர் மோடியால் இதைத் தவிர வேறு எதுவும் சொல்லமுடியாது. இதற்கு நான் பிஹாரில் பதில் சொல்வேன். துப்பாக்கி முனையில் ஒருவரை முதல்வர் வேட்பாளராக்க சொல்லி யாரும் மிரட்ட முடியாது. காங்கிரஸ் இதை ஒருபோதும் செய்ததில்லை.

மோடி இந்த நாட்டின் பிரதமர்; அவர் இதுபோன்ற விஷயங்களைச் சொல்வது நகைப்புக்குரியது. இது அவரது நிலையைக் காட்டுகிறது.

ஒரு பிரதமர் பேச வேண்டியதையெல்லாம் மறந்துவிட்டு, பிஹாரில் அவர் இதுபோன்ற தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.” என்றார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே நேற்று மாலையில் பிஹாரின் ராஜா பக்கரில் நடக்கும் பிரச்சாரக் கூட்டத்தில் பேச உள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

### “அற்புதமான தருணம்” - இந்திய மகளிர் அணிக்கு நடிகர் ரஜினிகாந்த் பாராட்டு!




**சென்னை, நவ.4:**

சென்னை: தென் ஆப்பிரிக்க அணியை 52 ரன்களில் வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்ற இந்திய மகளிர் அணிக்கு நடிகர் ரஜினிகாந்த் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நடப்பு மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் தென் ஆப்பிரிக்க அணியை 52 ரன்களில் வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது இந்திய கிரிக்கெட் அணி. இந்நிலையில், மகளிர் அணிக்கு அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள் உட்பட அனைவரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இது குறித்து நடிகர் ரஜினிகாந்த் தனது எக்ஸ் தளத்தில், “இந்தியாவுக்கு என்ன ஒரு அற்புதமான தருணம். நம் மகளிர் அணி வருங்கால தலைமுறைக்கு தங்களது தைரியத்தை காட்டியுள்ளனர். அசைக்க முடியாத சக்தியுடனும், அச்சமற்ற மனப்பான்மையுடனும் இந்தியாவின் மூவர்ணத்தை உலகம் முழுவதும் கொண்டு சென்றுள்ளனர். அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள். தற்போது ஒரு வரலாறு படைக்கப்பட்டுள்ளது. ஜெய் ஹிந்த்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவராக டி.ஜே.ஸ்ரீநிவாசராஜ் தேர்வு

**சென்னை, நவ.4:**

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவராக(டிஎன்சிஏ) டி.ஜே.ஸ்ரீநிவாசராஜ் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.

தமிழ்நாடு கிரிக்கெட் சங்க புதிய நிர்வாகிகளை தேர்வு செய்வதற்கான தேர்தல் நேற்று சென்னை சேப்பாக்கத்திலுள்ள எம்.ஏ.சிதம்பரம் கிரிக்கெட் மைதான வளாகத்தில் நடைபெற்றது. தேர்தல் அதிகாரியாக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி டி.சந்திரசேகரன் செயல்பட்டார். சங்க உறுப்பினர்கள் வாக்களித்து முடித்த நிலையில் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

முன்னதாக, டிஎன்சிஏ தலைவராக டி.ஜே.ஸ்ரீநிவாசராஜ் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். எம்.குமரேஷ் துணைத் தலைவராகவும், ஆர். ரங்கராஜன் கவுரவ செயலராகவும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர். தேர்தல் மூலம் கவுரவ செயலராக யு.பகவன்தாஸ் ராவ், கவுரவ இணைச் செயலராக கே.ராம், கவுரவ உதவி செயலராக சி.மாரீஸ்வரன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

அபெக்ஸ் கவுன்சில் உறுப்பினர்களாக ஆர்.கிருஷ்ணா, ஜி.மணிகண்டன், பி.எஸ்.ராஜன், சஞ்சய் கும்பட், எஸ்.செல்வமணி, என்.எஸ்.சங்கர் தேர்வு செய்யப்பட்டனர். புதிய நிர்வாகிகள் 2025-2028 காலம் வரை பதவியில் இருப்பர். இத்தகவல் டிஎன்சிஏ வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஹைலோ பாட்மிண்டன்: உன்னதி ஹூடா வெளியேற்றம்

**சார்புருக்கன், நவ.4:**

ஜெர்மனியின் சார்புருக்கன் நகரில் நடைபெற்று வரும் ஹைலோ ஓபன் பாட்மிண்டன் போட்டியில் இந்திய வீராங்கனை உன்னதி ஹூடா தோல்வி கண்டு வெளியேறினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் பிரிவு ஒற்றையர் அரை இறுதிப் போட்டியில் இந்தோனேசியாவின் புத்ரி குஸுமா வர்தானி 21-7, 21-13 என்ற நேர் செட்களில் இந்தியாவின் உன்னதி ஹூடாவை வீழ்த்தினார்.

### டி20 தொடருக்கான நியூஸி. அணி அறிவிப்பு!




**ஆக்லாந்து, நவ.4:**

மேற்கு இந்தியத் தீவுகள் அணியுடனான சர்வதேச டி20 தொடரில் பங்கேற்கும் நியூஸிலாந்து கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த டி20 தொடர் வரும் 5-ம் தேதி முதல் 13-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

நியூஸிலாந்து அணி விவரம்: மிட்செல் சாண்ட்னர் (கேப்டன்), மைக்கேல் பிரேஸ்வெல், மார்க் சாப்மேன், டெவன் கான்வே, ஜேக்கப் டஃப்பி, ஜாக் பவுல்க்ஸ், கைல் ஜேமிசன், டேரில் மிட்செல், ஜிம்மி நீஷம், ரச்சின் ரவீந்திரா, டிம் ராபின்சன், டிம் செய்பர்ட், நேதன் ஸ்மித், இஷ் சோதி.

## போலீஸ் அதிரடி நடவடிக்கை பிரேசில் போதைக்கும்பல் 121 பேர் சுட்டுக்கொலை

**ரியோ டி ஜெனிரோ, நவ.4:**

பிரேசில் தலைநகர் ரியோ டி ஜெனிரோவின் புறநகர் பகுதிகளில் சட்ட விரோத போதை கடத்தல் கும்பல்களை ஒழிக்கும் வகையில் போலீசார் மிக பெரிய நடவடிக்கை எடுத்தனர். போலீசாரும், சிறப்பு படையினரும் இணைந்து சில நாட்களாக தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டனர். இதில்,121 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் 4 பேர் போலீஸ் அதிகாரிகள். இதில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரியோ டி ஜெனிரோவின் பென்ஹா என்ற இடத்தில் ஒரே இடத்தில் 70 உடல்கள் கிடந்துள்ளன. இதை பார்த்து அதிர்ச்சியடைந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், பிரேசில் அதிபர் லூயிஸ் இன்னாசியோ லுலா டா சில்வா எக்ஸ் தளத்தில் பதிவிடுகையில், ‘ போதை கடத்தல் கும்பல்களால் சாதாரண குடும்பங்கள் சீரழிவதை அனுமதிக்க முடியாது ’ என குறிப்பிட்டுள்ளார்.

## மாற்றித்தரப்பட்டுள்ளதாக புகார் ஹமாஸ் ஒப்படைத்த 3 உடல்கள் தவறானவை: இஸ்ரேல்

**ஜெருசலம், நவ.4:**

ஹமாஸ் ஒப்படைத்த உடல்களில் 3 உடல்கள் இஸ்ரேல் பணய கைதிகளின் உடல்கள் இல்லை என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இஸ்ரேல், ஹமாஸ் போர் தொடங்கி இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், அமெரிக்க அதிபர் டிரம்ப் மேற்கொண்ட முயற்சியால் போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது. அந்த வகையில், ஹமாஸ் பிடித்து சென்ற 30 இஸ்ரேல் பணய கைதிகளின் உடல்கள் இஸ்ரேல் ராணுவதத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

இதில் அடையாளம் தெரியாத 3 பேரின் உடல்கள் இஸ்ரேல் ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த உடல்கள் ஒரேஇரவில் உடற்கூராய்வு செய்யப்பட்டன. இதுகுறித்து இஸ்ரேல் ராணுவத்தினர், “அடையாளம் தெரியாத 3 பேரின் உடல்கள் ஒப்படைக்கப்பட்டன. அவை இஸ்ரேல் நாட்டை சேர்ந்த பயண கைதிகளுடையது இல்லை. அந்த உடல்கள் இஸ்ரேல் பணய கைதிகளுடன் தொடர்புடையவர்களின் உடல்கள் இல்லை” என தெரிவித்துள்ளது.

## 1 லட்சம் பேர் டிஸ்மிஸ்: அமேசான், மைக்ரோசாப்ட், இன்டெல் நிறுவன ஊழியர்கள் பீதி

**வாஷிங்டன், நவ.4:**

அமேசான், இன்டெல், மைக்ரோசாப்ட் உள்ளிட்ட நிறுவனங்கள் இந்தாண்டு 1,12,000 பணியாளர்களை நீக்கியுள்ளது. அமேசான் நிறுவனம் 30000 பேரை பணி நீக்கம் செய்ய முடிவெடுத்துள்ளது. ஏஐ தொழில்நுட்பம் காரணமாக இன்டெல், மைக்ரோசாப்ட், டிசிஎஸ் உள்பட 218 நிறுவனங்களில் 1,12,000 தொழில் நுட்ப ஊழியர்கள் தங்கள் வேலைகளை இழந்துள்ளதாக சுயாதீன கண்காணிப்பு தளமான லே ஆப்ஸ்.எப்ஒய்ஐ தெரிவித்துள்ளது.

2022-ம் ஆண்டில், அமேசான் நிறுவனம் அதன் ஊழியர்களில் 27,000-க்கும் மேற்பட்டோரை பணி நீக்கம் செய்தது. தற்போது 30 ஆயிரம் பேரை பணிநீக்கம் செய்துள்ளது அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது. இன்டெல் நிறுவனம் இந்தாண்டு 24,000 பணியாளர்களை குறைக்க உள்ளது. இதன் மூலம் அதன் பணியாளர்களின் எண்ணிக்கை 1 லட்சத்தில் இருந்து 75,000 குறையும். டிசிஎஸ் நிறுவனம் இந்தாண்டு 20,000 பணியிடங்களை குறைக்கிறது. மைக்ரோசாப்ட் நிறுவனம் 9000 ஊழியர்களை குறைத்துள்ளது.

## கென்யாவில் பலத்த மழை; நிலச்சரிவில் சிக்கி 21 பேர் பலி: 30 பேர் மாயம்

**நைரோபி, நவ.4:**

நைரோபி: கென்யாவின் பல்வேறு பகுதிகளில் கனமழை கொட்டித் தீர்த்து வருவதுடன், வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகளும் ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக, மலைப்பாங்கான மற்றும் ஆற்றங்கரை ஓரங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அரசு தொடர்ந்து எச்சரிக்கை விடுத்துவந்தது.

இந்நிலையில், நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள எல்கேயோ மரக்வெட் மாகாணத்தின் செசோங்கோச் என்ற மலைப்பகுதியில் பெய்த கனமழையால் கோர நிலச்சரிவு ஏற்பட்டது. கண்



இமைக்கும் நேரத்தில் ஏற்பட்ட இந்த நிலச்சரிவில், 1,000க்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணோடு மண்ணாகின. சாலைகள் துண்டிக்கப்பட்டு, அப்பகுதிக்குச் செல்வதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த கோர சம்பவத்தில் இதுவரை 21பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சர் கிப்சும்பா முர்கோமென் உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும், 30க்கும் மேற்பட்டோரைக்காணவில்லை என அவர்களது குடும்பத்தினர் புகார் அளித்துள்ளனர்.

படுகாயமடைந்த 25 பேர், ராணுவ ஹெலிகாப்டர்கள் மூலம் மீட்கப்பட்டு எல்டோரெட் நகரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நிலச்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் உடனடியாக வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும் என அரசு மீண்டும் அறிவுறுத்தியுள்ளது.

## அமெரிக்காவை மட்டுமே நம்பி இருக்க முடியாது; கனடா பிரதமர்

**ஒட்டாவா, நவ.4:**



‘அமெரிக்காவை மட்டுமே நம்பி இருக்கும் போக்கை மாற்ற வேண்டும். இந்தியா உள்ளிட்ட நாடுகளுடனான உறவை வலுப்படுத்தி வருகிறோம்,’ என்று கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வரி விதிப்பு விவகாரம் தொடர்பாக கனடா வெளியிட்ட விளம்பரம் சர்ச்சையான நிலையில், அந்நாட்டுடன் அனைத்து விதமான வர்த்தக பேச்சுவார்த்தைகளையும் நிறுத்துவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார்.

இந்த நிலையில், கனடா உலகின் பிற நாடுகளுடனான புதிய உறவை கட்டியெழுப்ப முடிவு செய்துள்ளதாக கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார். குறிப்பாக, இந்தியாவுடனான உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது; உலகின் பிற நாடுகளுடன் புதிய உறவை கட்டியெழுப்ப முடிவு செய்துள்ளோம். உலகப் பொருளாதாரத்தில் 60 சதவீதப் பங்களிப்பை வழங்கும், வேகமாக வளர்ந்து வரும் ஆசிய பசுபிக் பகுதியில் உள்ள நாடுகளுடன் உறவை வலுப்படுத்துவதை விட, சிறந்த இடம் வேறு இல்லை.

இந்தோனேசியாவுடன் மேற்கொள்ளப்பட்ட தடையில்லா வர்த்தக ஒப்பந்தம், பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து நாடுகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை, சீனாவுடனான உறவில் நிகழ்ந்த திருப்புமுனை ஆகியவற்றை உதாரணமாக கூறலாம்.

இந்தியாவுடனான உறவில் நாங்கள் முன்னேற்றம் அடைந்து வருகிறோம். நான் பிரதமர் மோடியை சந்தித்தது இல்லை. ஆனால், வெளியுறவுத்துறை அமைச்சர் உள்ளிட்ட பிற அமைச்சர்கள் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

வெளிநாடுகளுடன் சிறந்த உறவை வலுப்படுத்துவது மிகவும் அவசியம்.

அமெரிக்காவை மட்டுமே நம்பியிருக்கும் தன்மையை மாற்ற வேண்டும்.

இது ஒரே இரவில் நடக்காது என தெரியும். ஆனால் நாங்கள் மிக விரைவாக முன்னேறி வருகிறோம், என்று அவர் கூறினார்.

## ஆப்கானிஸ்தானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: 7 பேர் உயிரிழப்பு 150 பேர் படுகாயம்



**காபூல், நவ.4:**

காபூல்: ஆப்கானிஸ்தானில் நள்ளிரவு 1.59 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானில் இந்துகுஷ் மலைத்தொடர் அருகே பல்ஹா மாகாணத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. மசிர் ஐ ஷெரிப் நகரை மையமாக கொண்டு ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.3 ஆக பதிவானது. மஸார்-இ-ஷெரிஃப் நகரத்துக்கு 28 கி.மீ. க்கு அடியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டிடங்கள் பயங்கரமாக குலுங்கின. உடனே பொதுமக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர். பல கட்டடங்கள் இடிந்துள்ளதால் மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக நிலநடுக்கத்தால் 7 பேர் உயிரிழந்ததாகவும், 150 பேர் காயமடைந்தகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. தொடர்ந்து அப்பகுதியில் மீட்பு பணி நடைபெற்று வருகிறது. அதிகாலையில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தை ஒட்டி ஆரஞ்ச் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. மசார்-இ-ஷெரீப்பில் உள்ள ப்ளூ மசூதிக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த இடம் இஸ்லாத்தின் நான்காவது கலீபாவும் நபிகள் நாயகத்தின் மருமகனுமான ஹஸ்ரத் அலியின் அடக்கம் செய்யப்பட்ட இடம் என கூறப்படுகிறது.

## ஹார்வர்ட் மருத்துவ கல்லூரியில் குண்டுவெடிப்பு

**வாஷிங்டன், நவ.4:**

அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் ஹார்வர்டு பல்கலைகழகத்தில் மருத்துவ கல்லூரி செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவ கல்லூரியின் லாங்வுட் வளாகத்தில் நேற்று முன்தினம் குண்டுவெடிப்பு ஏற்பட்டது. இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ஹார்வர்டு பல்கலைகழகம் வெளியிட்ட அறிக்கையின்படி, பல்கலைக்கழகத்தின் லாங்வுட் வளாகத்தில் உள்ள கோல்டன்சன் கட்டிடத்தின் நான்காவது மாடியில் அதிகாலை 3 மணிக்கு குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. சம்பவம் நடந்த நேரத்தில் இரண்டு நபர்கள் சம்பவ இடத்திலிருந்து தப்பி ஓடியதைக் கண்டதாக ஹார்வர்ட் பல்கலைக்கழக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். இது குறித்து போலீசார் விசாரிக்கின்றனர்.

## மெக்சிகோவில் சூப்பர் மார்க்கெட்டில் நடந்த தீ விபத்தில் 23 பேர் உயிரிழப்பு!

**மெக்சிகோ, நவ.4:**

மெக்சிகோவில் சூப்பர் மார்க்கெட்டில் நடந்த தீ விபத்தில் 23 பேர் உயிரிழந்தனர். மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. விபத்தில் மேலும் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று வட அமெரிக்காவின் மெக்சிகோவில் சோனோரா மாநிலத்தின் தலைநகரான ஹெர்மோசில்லோ நகரில் உள்ள வால்டோ கடையில் தீ விபத்து ஏற்பட்டதாக சோனோரா ஆளுநர் அல்போன்சோ துராசோ சமூக ஊடகங்களில் தெரிவித்திருந்தார். இந்த தீ விபத்தில் 23 பேர் உயிரிழந்தனர். மேலும் 11 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் ஹெர்மோசில்லோவில் உள்ள ஆறு மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டதாக சோனோரா ஆளுநர் தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம் ஆறுதல் தெரிவித்துள்ளார். மேலும் இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவ ஒரு ஆதரவு குழுவை அனுப்புமாறு உள்துறை செயலாளருக்கு அறிவுர்த்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தீ விபத்தில் ஏற்பட்ட நச்சு வாயுக்களை சுவாசிப்பதால் இறப்புகள் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

## இளம் வயதில் கோடீஸ்வரர்கள்; மார்க் ஜுக்கர்பெர்க்கை பின்னுக்குத் தள்ளிய இந்திய வம்சாவளி நண்பர்கள்

**வாஷிங்டன், நவ.4:**

இந்திய வம்சாவளி இளைஞர்கள் உள்பட அமெரிக்காவைச் சேர்ந்த 3 பள்ளி நண்பர்கள், ஸ்டார்ட்அப் மூலம் இளம் வயதிலேயே கோடீஸ்வரர்களாகியுள்ளனர். இதன்மூலம், பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜூக்கர்பெர்க்கின் சாதனையை முறியடித்துள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் சான் ஜோஸில் உள்ள பள்ளியில் சூர்யா மிதா,22, ஆதர்ஷ் ஹைரேமத் ,22, ஆகிய இரு இந்திய வம்சாவளியினர் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த பிரென்டன் பூடி,22, பயின்று வந்தனர். இவர்கள் மூவரும், இணைந்து மெர்கோர் என்ற ஏஐ நிறுவனத்தை தொடங்கியுள்ளனர்.



போர்ப்ஸ் அறிக்கையின்படி, சான் பிரான்சிஸ்கோவைத் தலைமையிடமாகக் கொண்ட இந்த நிறுவனம், அண்மையில் 350 மில்லியன் டாலர் நிதி திரட்டியது. இதன்மூலம் நிறுவனத்தின் மதிப்பு 10 பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது. இதனால், நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பிரென்டன் பூடி, தலைமை தொழில்நுட்ப அதிகாரி ஆதர்ஷ் ஹைரேமத் மற்றும் குழுத் தலைவர் சூர்யா மிதா ஆகியோர் இளம் வயதில் சுயதொழில் மூலம் கோடீஸ்வரர்களானவர்கள் என்ற சாதனையை படைத்துள்ளனர்.

கடந்த 2008ம் ஆண்டு 23 வயதில் இளம் வயதில் சுய தொழில் மூலம் கோடீஸ்வரர் ஆனவர்களில் பட்டியலில் முதன் முதலில் மார்க் ஜூக்கர்பெர்க் இடம்பிடித்தார். தற்போது, அவரை இந்த மூன்று நண்பர்களும் பின்னுக்கு தள்ளியுள்ளனர்.

கடந்த 20 நாட்களுக்கு முன்பு, பாலிமார்க்கெட் தலைமை நிர்வாக அதிகாரி ஷெய்ன் கோப்லான், 27, என்ஒய்எஸ்இ-ன் தாய் நிறுவனமான இன்டர்காண்டினென்டல் எக்ஸ்சேஞ்சில் இருந்து 2 பில்லியன் முதலீட்டைப் பெற்றதால் இந்தப் பட்டியலில் இடம்பிடித்திருந்தார். அவருக்கு முன்பாக, ஸ்கேல் ஏஐ நிறுவனத்தின் அலெக்ஸாண்ட்ரா வாங்,28, சுமார் 18 மாதங்கள் இந்தப் பட்டத்தை வகித்தார். அவரது இணை நிறுவனர் லூசி குவோ,30, சுய தொழில் மூலம் உருவெடுத்த முதல் பெண் கோடீஸ்வரர் என்ற பெருமையை பெற்றார். பிரபல அமெரிக்க ராப் பாடகி டெய்லர் ஸ்விப்ட்டை பின்னுக்குத் தள்ளினார்.

யார் இந்த சூர்யா மிதா - ஆதர்ஷ் ஹைரேமத்?

மெர்கோர் ஏஐ நிறுவனத்தின் குழு தலைவராக இருக்கும் சூர்யா மிதாவின் பெற்றோர் டில்லியைச் சேர்ந்தவர்கள். இவர்கள், அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்துள்ளனர். அதன்பிறகு மவுன்டன் வீயூவில் சூர்யா மிதா பிறந்துள்ளார். கலிபோர்னியாவின் சான் ஜோஸில் வளர்ந்தார்.

சான் ஜோஸில் உள்ள ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் சூர்யா மிதா மற்றும் ஆதர்ஷ் ஹைரேமத் இருவரும் ஒன்றாக பயின்று வந்துள்ளனர். அதன்பிறகு, ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் ஆதர்ஷ் கணினி அறிவியல் பயின்றார். ஆனால், மெர்கோர் நிறுவனத்தில் சேர்ந்த பிறகு, 2 ஆண்டுகளில் படிப்பை நிறுத்தி விட்டார். அதே சமயத்தில் தான், சூர்யா மிதா மற்றும் பிரென்டன் பூடி ஆகிய இருவரும் ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறினர்.

மாறிப்போன வாழ்க்கை

இது குறித்து ஆதர்ஷ் ஹைரேமத் கூறுகையில், ‘மெர்கோரில் நான் சேராமல் இருந்திருந்தால், 2 மாதங்களுக்கு முன்பு நான் என்னுடைய கல்லூரி படிப்பை முடித்து பட்டம் பெற்றிருப்பேன். இவ்வளவு குறுகிய காலத்தில் என் வாழ்க்கை 180 டிகிரி மாறி விட்டது,’ எனக் கூறினார்.